# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 29 திங்கட்கிழமை (15.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 354

### ஆர்ப்பாட்டம் நடத்த வந்தவர்களுக்கு நேர்ந்த கதி

# யாழ். நகரில் ஜே.வி.பியினர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

## ஹந்துன்நெத்தி எம்.பி. உட்பட மூவருக்கு மண்டை உடைந்தது



நேற்றைய தாக்குதலில் காயமடைந்த ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒத்தாசை புரிகிறார்.

யாழ்ப்பாணம், நவம்பர் 15

'நாம் இலங்கையர்' அமைப்பினால் இன்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி உட்பட கட்சி உறுப்பினர்கள் மீது நேற்று மாலை இனந்தெரியாதோர் குழு ஒன்று திடீர் தாக்குதல் நடத்தியது.

இந்தச் சம்பவத்தில் ஹந்துன்நெத்தி உட்பட மூவருக்கு மண்டைகள் உடைக்கப்பட்டன. கந்தர்மடத்தில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினருமான பத்மினி சிதம்பரநாதனின் வீட்டில் வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஜே.வி.பியின் கிளை அமைப்புக்களில் ஒன்றான, 'நாம் இலங்கையர்' என்ற அமைப்பு போர்க் காலத்தில் காணாமற்போனோர் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப் போர் விவரங்களை வெளியிடக் கோரி, இன்று யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்து கொள்வதற்காக ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை நகரில் கவனித்துவிட்டு தமது நண்பரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வீட்டுக்கு அவர்கள் சென்றனர். அவரது வீடு கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ளது.

அவர்கள் அங்கு உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில் மாலை 6.50 மணியளவில் அங்கு வந்த இனந்தெரியாதவர்கள் ஜே.வி.பி. உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதன் போது காயமடைந்தவர்கள் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நேரில் சென்று பார்வையிட்டார்.

சம்பவம் குறித்து ஜே.வி.பியினர் தெரிவித்ததாவது:-

சுமார் 7 மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலர் வீட்டுக்குள் நுழைந்து எமது கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வீரராஜ் லலித்குமாரை வெளியே அழைத்தனர்.

உள்ளே சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசிக் கொண்டிருந்த லலித்குமார் எழுந்து வீட்டின் முன் பகுதிக்குச் சென்றார். அவர்

(23 ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்படவேண்டும்

### ஆணைக்குழு முன் தயா மாஸ்டர் சாட்சியம்



கொழும்பு, நவ.15

படையினரிடம் சரண் அடைந்த மற்றும் படையினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும் என்று புலிகளின் முன்னாள் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர், நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தார்.

நேற்று ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையின் போது தயா மாஸ்டரும் சாட்சியம் அளித்தார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் டான் தொலைக்காட்சியின் பிரதம செய்தியாளராக் கடமையாற்றும் தயா மாஸ்டர் இறுதி யுத்தத்தின் போது புலிகளின் மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டருடன் சென்று படையினரிடம் சரணடைந்தது தெரிந்ததே.

இறுதி யுத்த காலத்தில் மக்கள் (02 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

## நாடாளுமன்றம் திருத்தப்படுகிறது

கொழும்பு, நவ.15

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்களைத் திருத்தும் நடவடிக்கைகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

நாடாளுமன்ற குழுக்களின் அறைகளில் தேங்கியுள்ள வெள்ள நீரை அகற்றும் நடவடிக்கை

(24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு அமர்வுகளுக்கு நேற்று வந்திருந்த 'அழையா விருந்தாளி'!

யாழ்ப்பாணம், நவ. 15

தீவகப் பகுதியில் நேற்று நடைபெற்ற நல்லிணக்க ஆணைக் குழு அமர்வுகளின் போது வந்திருந்த 'அழையா விருந்தாளிகள்' சிலர் குறித்து ஆணைக் குழுவின் தலைவருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

'அழையா விருந்தாளி' களில் ஒருவர் நேற்றைய ஊர்காவற்றுறை, வேலணை அமர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி சிங்களக் குடியேற்றம் எங்களுக்கு எதுவுமே தெரியாது

### இப்படிச் சொல்கிறார் இராணுவ ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, நவ.15

நாவற்குழி சிங்களக் குடியேற்றத்துக்கும் இராணுவத்தினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தாம் முன்னர் யாழ்ப்பாணத்தில் வசித்தவர்கள் எனக் கூறி யாழ். ரயில் நிலையத்தில் தஞ்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மியான்மாரில் ஆங் சாங் சூகியின் விடுதலை பொன்சேகா விடுதலைக்கு வழி வகுக்குமா?

### ஜனநாயகத்தைப் பரீட்சிக்க நல்ல சந்தர்ப்பம் என்கிறார் ரணில்

கொழும்பு, நவ.15

''மியான்மாரை விட ஜனநாயகம் இலங்கையில் பாதுகாக்கப்படுகின்றதா என்பதைப் பரீட்சிக்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சரத் பொன்சேகா தொடர்பாக இலங்கை ஆட்சியாளருக்கு வழிகாட்டலாக ஆங் சாங் சூகியின் விடுதலையைப் பார்க்கிறேன்.''

-இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நோபல் விருது பெற்றவரான ஆங் சாங் சூகி விடுதலை செய்யப்பட்டது ஜனநாயகத்தை மதிக்கும் உலக மக்களின் வெற்றி என நான் நினைக்கின்றேன்.

கடந்த 21 வருடங்களில் 15 வருட காலங்கள் இராணுவ ஆட்சியாளர்களால் அவரது சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்தது. நான் உட்பட உலகில் ஜனநாயகத்தை மதிக்கும் தலைவர்கள் மற்றும் மக்கள் பல்வேறு வழியில் வேண்டுகோள் விடுத்தும் ஆட்சியாளர்கள் அதற்கு செவிமடுக்கவில்லை. (02ஆம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாண ஆளுநராக ஒரு தமிழர்?

கொழும்பு, நவ.15

மேல்மாகாண ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேல் மாகாண ஆளுநராகவுள்ள அலவி மௌலானாவின் பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது.

மேல்மாகாண ஆளுநராகத் தற்போது லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நிதித்துறைப் பணிப்பாளராகவுள்ள எஸ். சண்முகதாசன் நியமிக்கப்படலாமெனத் தெரியவருகிறது. இவர் ராஜபக்ஷ குடும்பத்தினரின் உறவினரென்பதும் குறிப்பிடத்தக்கது. (சீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துப்பாக்கியைக் காட்டி மிரட்டிவிட்டு கணவரை ஈ.பி.டி.பியினரும் கடற்படையினரும் கடத்தினர்

## வேலணை அமர்வில் மனைவி சாட்சியம்

ஈ.பி.டி.பியினர் மற்றும் கடற்படையினர் எமது நெற்றியில் துப்பாக்கியை வைத்து மிரட்டிவிட்டு எனது கணவனைக் கடத்திச் சென்றார்கள். இவ் வாறு கடத்தப்பட்டவரின் மனைவியான ம.மேரிமக்ரெலின் சாட்சிமளித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று வேலணை மண்கும்பான் பிள்ளையார் கோயில் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

அங்கு சாட்சியம் அளித்த மேரி மக்ரெலின்மேலும் கூறியது:-

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17 ஆம் திகதி இரவு 9.45மணியளவில் வீட்டுக்கு வந்தவர்கள் எனது கணவரை 'மக்சி' என்று பெயர் கூறி அழைத்தார்கள் பின்னர் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்தார்கள். அவர்கள் உள்ளே வந்தபோது வெளியில் சிலர் தமிழில் உரையாடிக் கொண்டிருப்பது எனக்குக் கேட்டது. உள்ளே வந்தவர்கள் நெற்றியில் துவக்கை வைத்து மிரட்டி எங்களை அறைக்குள் பூட்டி வைத்து விட்டார்கள். அதன் பின்பு எனது கணவனை கடத்திச் சென்றார்கள். வெளியில் நின்ற எனது அக்கா தடுத்த போது தள்ளிவிட்டுச் சென்றார்கள். கடத்திச் சென்றவர்களின் முகங்கள் எனக்கு நன்றாகத் தெரியும் -என்றார்.

அதன் பின்னர் சாட்சியமளித்த பெண்மணி: -

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த எனது மகனை (அனுராஜ்) 2007 ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி வீட்டில் வந்து வெள்ளை வானில் கடத்திச் சென்றார்கள்.

பின்னர் குறிப்பிட்ட தொகை பணம் செலுத்தப்பட்ட பின்னர் அவரை எனக்குக் காட்டினார்கள். அவர் வயாவிளான் இராணுவ முகாமில் இருப்பதாக கண்டவர்கள் சொன்னார்கள். எனது மகன் என்னிடம் கதைக்கும் போது நான் நிச்சயமாக வருவேன் நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம் என்று சொன்னான். எனது மகனை என்னிடம் மீட்டுத் தாருங்கள் -என்று ஆணைக்குழுவினரிடம் கண்ணீமல்க வேண்டினார்.

தொடர்ந்து மண்டைதீவு, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பி.திரவியராஜா சாட்சியமளிக்கையில் -

90 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்து அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த போது எனது மகன் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டார். இன்று வரை எங்கே இருக்கிறார் என்று தெரியாது.

தேவாலயத்துக்கு வந்த இராணுவத்தினர் 40 வயதுக்குட்பட்ட அனைவரையும் வருமாறு கூறவே எனது மகன் சென்றார். அப்போது எனது மகனுடன் சேர்ந்து 20 பேர் வரை இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டனர் - என்றார். (ஒ- 15)

# மூன்று வருடங்களுக்கு முன் கைதான என் மகன் ஊரெழு இராணுவ முகாமில் இருக்கிறாராம்

## அவரை மீட்டு என்னிடம் ஒப்படையுங்கள் எனத் தாயார் புலம்பல்

யாழ்ப்பாணம், நவ. 15

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இரவு வீட்டுக்குள் புகுந்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எனது மகன் ஊரெழு இராணுவ முகாமில் இருப்பதைக் கண்டதாக உறவினர்கள் என்னிடம் கூறியிருந்தனர்.

அவரை மீட்டு என்னிடம் ஒப்படையுங்கள். - இவ்வாறு நல்லூரைச் சேர்ந்த ஜீவரட்ணம் சத்தியதேவி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் அரியாலை சனசமூக நிலையத்தில் வைத்து நேற்று சாட்சியமளித்தார். இதன்போது-

''எனது மகன் ஜீவரட்ணம் நிரஞ்சன் என்பவரைக் கடந்த 07.01.2007 அன்று இரவு 8.45 மணியளவில் வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் விசாரணைக்கு என அழைத்துச் சென்றனர்.

அவரை விடுவிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் முறைப்பாடுகளைச் செய்தேன். ஆனால் இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

எனது மகன் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டதை என் இரண்டு கண்களாலும் கண்டேன். அவர் இன்னும் உயிருடன்தான் உள்ளார் என்று நான் நம்புகிறேன்.

எனது மகனை விடுவிக்க வேண்டும் என்று குணசேகர ஐயாவிடம் தெல்லிப்பழையில் வைத்துக் கடிதம் ஒன்றைக் கையளித்தேன். அவர் எனது மகனின் விடுதலை பற்றி நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச் சென்றார். இதுவரை எந்த நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளவில்லை'' என்று அவர் சாட்சியமளித்துக் கொண்டிருக்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் குறுக்கிட்டு -

''நீங்கள் குறிப்பிடும் குணசேகர என்பவர் யார்?'' என்று கேட்டார்.

அவர் 'அரசாங்க அமைச்சர்' என்று தொடர்ந்தும் பதிலளித்துக்கொண்டிருந்தார்.

'எனக்கு எந்தவித நிவாரணமும் வேண்டாம். என்னுடைய பிள்ளையைத் தந்தால் போதும். எனது மகன் உயிருடன்தான் இருக்கிறான் என்று அவனைக் கண்ட எனது உறவினர்கள் சொல்கிறார்கள்.'

அப்போது ஆணைக்குழுவின் தலைவர் மீண்டும் குறுக்கிட்டு-

'உங்கள் மகன் எங்கிருக்கின்றார் என்று உறவினர்கள் குறிப்பிட்டார்கள்?'' என்று கேட்டார்.

''எனது மகன் ஊரெழு இராணுவ முகாமில் இருக்கிறார் என்று சொன்னார்கள்''

''அப்படியானால் உங்கள் மகனை எவ்வளவு காலத்துக்குள் கண்டார்களாம்?''

கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் அந்த இராணுவ முகாமில் கண்டதாகச் சொன்னார்கள்.

என்னுடைய மகன் எனக்கு வேண்டும். அவரை எங்கிருந்தாலும் கண்டுபிடித்துத் தாருங்கள் - என்றார் அந்தத் தாய். (ஒ-9)

# நல்லிணக்க ஆணைக்குழுவினர் நூலகத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், நவ.15

நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் யாழ்.நூலகத்துக்கு விஜயம் செய்திருந்தனர். அவர்கள் நூலக அலுவலர்களுடனும் கலந்துரையாடினர்.

தீவகப் பகுதியில் ஆணைக்குழு அமர்வுக்குச் செல்ல முன்னர், இவர்கள் நூலகத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டனர். (ஒ-15)

# சரணடைந்த மற்றும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருப்புகளில் இருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் பதிலுக்குப் படையினரும் தாக்குதல்கள் நடத்தினர் என்றும், இதனால் பொதுமக்கள் தரப்பில் பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டன என்றும் தயா மாஸ்டர் தெரிவித்தார். பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கு இரு தரப்பினர்களுமே காரணம் என்றும் தயா மாஸ்டர் குற்றஞ்சாட்டினார்.

இறுதி யுத்தத்தில் படையினரிடம் பெருமளவிலானோர் உங்களுடன் சேர்ந்து சரணடைந்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது என ஆணைக்குழுவினர் கேட்டனர். அதற்கு ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் என்னுடன் சேர்ந்து சரணடைந்தனர். எங்களை இராணுவம் நன்றாகப் பராமரித்தது. எனினும் நான் சரணடைந்த பின்னர் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டதால் ஏனையோருக்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது. இதேவேளை, எல்லோரையும் இராணுவத்தினர் நன்றாகப் பராமரித்தார்களா என்றும் எதுவும் சொல்லமுடியாது என தயா மாஸ்டர் கூறினார்.

இதேவேளை-

- தெரிந்தோ தெரியாமலோ போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்தால் தடுப்பு முகாம்களில் உள்ளோரின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- விடுவிக்கப்படும் முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவரும் இயல்பு வாழ்வுக்கு மீள்வதற்கும், அவர்களுக்கான கட்டுமானங்களை உரிய வகையில் ஏற்படுத்துவதற்கும், அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும், வருமானம் பெறும் வழிகளை உருவாக்கவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

- காணமற்போனோர் அல்லது இன்னமும் கண்டுபிடிக்க முடியாதவர்கள் பற்றி உரிய அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

- நீண்டதும் நிலையானதுமான சமாதானத்தை உருவாக்குவதற்குமான அனைத்து வழிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு பேச்சுவார்த்தைகளுக்கு ஊடாக இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டும்.

எனவும் தயாமாஸ்டர் கேட்டுக்கொண்டார், சரணடைந்து விடுவிக்கப்படும் போராளிகள் இந்தச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாதநிலை காணப்படுவ தாகவும் அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை-

1987 ஆம் ஆண்டு இந்திய அரசாலும், 1990, 1995, 2000 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாலும் பேச்சுவார்த்தைக்காக வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை விடுதலைப் புலிகள் சரிவரப் பயன்படுத்தியிருந்தால் நடைபெற்று முடிந்த எல்லா அனர்த்தங்களையும் தவிர்த்திருக்க முடியும்.

''யுத்தம் உக்கிரமடைந்த போது யுத்த நிறுத்தம் ஒன்றுக்குச் செல்லுமாறு கோரி புலிகளின் மூத்த போராளிகள், புத்திஜீவிகள், பொதுமக்கள் எனப் பலரும் இணைந்து புலிகளின் தலைமைக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்தனர். எனினும் அதற்குத் தலைமையிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. பாலகுமாரன் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட அந்த மகஜரில் யுத்தம் உக்கிரமடைந்தால் பொதுமக்கள் தரப்பில் பாரிய உயிர்ச்சேதங்கள் ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது'' -என்றும் தயாமாஸ்டர் கூறினார்.

- **சாட்சியம் அளிக்கையில் ஆணைக்குழுவால் இடையிடையே வினவப்பட்ட கேள்விகளும், தயாமஸ்ரரின் பதில்களும்.**

கே: நீங்கள் சாட்சியமளிக்க முன் வந்திருக்கும் நேர்மையைப் பாராட்டுகின்றேன். ஆணைக்குழுவின் அதிகாரங்களுக்கு அமைவாக நீங்கள் சமர்ப்பித்திருக்கும் சகல சிபாரிசுகளையும் நாங்கள் கவனத்தில் கொள்கின்றோம். இது[illegible]யில் எத்தனை விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டார்கள் என்று தெரியுமா?

ப: விடுதலைப்புலிகளின் பதிவுகளின்படி 30,000 இற்கும் மேற்பட்டவர்கள் 1972 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு வரை மரணமடைந்துள்ளனர்.

கே: இறுதிக்கட்ட யுத்தத்தின்போது எத்தனை பேர் கொல்லப்பட்டனர்?

ப: அது எனக்குத் தெரியாது. எனினும் நிறையச் சடலங்களைக் கண்டேன்.

கே: தமிழ் மக்களைப் புலிகள் கேடயமாகப் பாவிக்காமல் இருந்திருந்தால் இந்த மரணங்களின் தொகையைக் குறைத்திருக்க முடியுமா?

ப: இறுதிப் போர்க் காலகட்டத்தில் மக்கள் எல்லோரும் புதுமாத்தளன், பொக்கணை என்று குறிப்பிட்ட சில இடங்களுக்குள்ளேயே வந்து அடங்க வேண்டியிருந்தது. அந்த இடத்தில் வைத்துத்தான் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு அவர்கள் திருப்பித் தாக்கியபோது கூடுதல் இழப்புக்கள் ஏற்பட்டன. இறுதிக் கட்டத்திலே மக்களை வெளியேறுவதற்கு அனுமதித்திருந்தால் இந்த இழப்புகள் குறைந்திருக்கும்.

கே: விடுதலைப்புலிகள் யுத்தமற்ற சூனியப் பிரதேசத்துக்குள் ஆயுதங்களைக் கொண்டு வந்தார்களா?

ப:யுத்தமற்ற சூனியப் பிரதேசம் என்று அங்கே ஒன்றுமே இருக்கவில்லை.

கே: 3இடங்கள் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்ததே?

ப:அந்த இடங்களில் மக்கள் இருந்தார்கள். ஆனாலும் அந்த நேரத்தில் அவையும் பாதுகாப்பான பிரதேசங்களாக இருக்கவில்லை. அவ்வாறான இடங்களை எந்தவொரு பகுதியினருமே மதிக்கவில்லை.

கே:விடுதலைப் புலிகள் சமாதானத்தை அர்ப்பணிப்புடனாக அமுல்படுத்துவதற்கு எண்ணம் கொண்டிருந்தனரா?

ப: இதற்கு நான் உதாரணம் மூலம் பதிலளிக்க விரும்புகின்றேன்.

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஐரோப்பிய நாடுகளுக்குப் பொறுப்பாக இருந்த புலிகளின் உறுப்பினர், பி.பி.ஸி. சேவைக்கு நேரலையாகப் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார். அப்போது பி.பி.ஸி. ஊடகவியலாளர் கேட்டார் 'தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் தமிழீழக் கோரிக்கையை கைவிடுவீர்களா?' அதற்குப் பதிலளித்த புலி உறுப்பினர் 'அதை நாங்கள் எப்படியாவது குழப்பிவிடுவோம்' என்றார். பின்னர் அதை ஒருவாறு சமாளித்தார்.

கே: அமைதியான, சமாதான வாழ்வுக்குச் சில விடயங்களை அரசாங்கம் கையாள வேண்டும் என்று சொல்கிறீர்கள். அரசியல் ரீதியாக எவ்வாறான விடயங்களைக் கையாளவேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

ப: அரசியல் பற்றிக் கதைக்க வரவில்லை. விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் என்ற வகையில் பாதிக்கப்பட்டு தடுப்பு முகாமில் இருப்பவர்களை விடுவித்து தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

கே:விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்லியே போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இன்றும் அந்தப் பிரச்சினைகள் இருக்கின்றனவா?

ப: அரசியல் ரீதியான பிரச்சினைகள் இருப்பதாகக் கூறியே 1977ஆண்டு தேர்தலில் செல்வநாயகம் போட்டியிட்டார். எனினும் இந்தக் கோரிக்கையை முன்வைத்து மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆணையை அவர்கள் சரியாக நடைமுறைப் படுத்தவில்லை என்றும் எனவே மக்கள் ஆணையை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் தான் பிரபாகரன் போராட்டத்தைத் தொடங்கியதாக அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.(எ-15)

# மியான்மாரில்:...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தும் இறுதியில் ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளது. நாடொன்றின் சுயாதிபத்தியம் என்ற போர்வையில் ஜனநாயகத்தை நசுக்க முயற்சிக்கும் ஆட்சியாளர்களை நாம் கண்டிருக்கின்றோம். இருந்தும் சுயாதிபத்தியம் என்பது மக்களின் சுயாதிபத்தியமாகும். அது ஆட்சியாளர்களின் சுயாதிபத்தியமாகாது.

-இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட வீதிகள் புனரமைப்பு நேற்று ஆரம்பம்

## அடிக்கற்களை திரைநீக்கினார் நாமல்

யாழ்ப்பாணம், நவ.15

சீன நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கின் வசந் தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ள வீதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரும், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கற்களைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

யாழ்.காங்கேசன்துறை வீதிப் புனரமைப்பை ஆரம்பிப்பதற்கு தந்தை செல்வநாயகம் நினை வாலய முன்றிலிலும் யாழ். பலாலி வீதிப்புனரமைப்பை ஆரம்பிப்பதற்காக ஆரியகுளத்தடியிலும் புத்தூர் - மீசாலை வீதி புனரமைப்பை ஆரம்பிப்பதற்காக பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலும் அமைக்கப்பட்ட அடிக் கற்களைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

யாழ்.-பருத்தித்துறை வீதிப் புனரமைப்புப் பணிக்காக வீதி செப்பனிடும்



கனரக வாகனத்தையும் இயக்கி வைத்தார்.

இவற்றைத் தொடர்ந்து புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்திலும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுகளில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல, நாடாளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டாரா, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்கா, யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண மற்றும் மாவட்ட பணிப்பாளர்கள், சீன நாட்டுப் பொறியியலாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (ம-14-72)

# நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இனி ஜனாதிபதி கடுமையாக உழைப்பார்

## மானிப்பாயில் மீள்குடியேற்ற அமைச்சர் உரை

யாழ்ப்பாணம்,நவ.15

கடந்த ஆறுவருட கால பதவியின்போது யுத்தத்தில் இருந்து இலங்கையை மீட்ட ஜனாதிபதி இனிவரும் 6 வருட கால இரண்டாவது பதவிக்காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கடுமையாக உழைக்கவுள்ளார்.

இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு நிகழ் வினையொட்டி ஆயிரம் பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்றுநடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்று கையில் -

இந்த நாட்டில் 30 வருட காலமாக இடம்பெற்ற கொடிய யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர் என்ற பெருமைக்குரியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த கால வரலாற்றினைத் திரும்பிப் பார்த்தால் பொருளாதார அபிவிருத்தியில் வடபகுதி பெரும் வளர்ச்சியினைக் கண்டிருந்தது. ஆனால் யுத்த காலத்தின் பின் அது சிதைந்து சின்னாபின்னமாகியது.

இந்நிலையில் இன்று யுத்தம் ஓய்ந்துள்ள சுமுகமான சூழ்நிலையில் இங்குள்ள மக்களின் பொருளா தாரத்தை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மீள்குடியேற்ற அமைச்சர் என்ற வகையில் நீங்கள் எனக்குச் சொந்தமான மக்கள். உங்கள் வளமான வாழ்வைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் இரண்டாவது தடவையாக பதவியேற்கவுள்ளார்.

அந்தப் பதவியேற்பின் பின்னர் எதிர்வரும் ஆறுவருட காலங்கள் இலங்கைத் திருநாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை மேன்மையுறச் செய்யவுள்ளார்.

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒன்றிணைப்பதற்காகவே அரசால் யுத்தம் நடத்தி முடிக்கப்பட்டது என்றார்.

இந்நிகழ்வில் இந்தியவம்சாவழி மக்கள் முன்னிலையின் தலைவர் அண்ணாமலை முத்தப்பன், இலங்கை இந்திய வம்சாவழி மக்கள் முன்னணி கம்பஹ மாவட்ட ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் நந்தசிறி களுபோவில, ஆனைக்கோட்டை எம்.சீ.மொகமட் அமீன் மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் எஸ். சிவநேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-9)

## நாரந்தனையில் நாளை முறைசாராப் பிரிவின் வலய மட்டக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.15

தீவக கல்வி வலயத்தின் முறைசாரக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் வலய மட்ட கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நாரந்தனை றோ.க.ம. வித்தயாலயத்தில் நடைபெறவுள்ளன.

தீவக கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணபதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதகிருஸ்ணன் கலந்து கொள்வார். (ஒ-10)

## வர்த்தகரின் சடலம் ஆஸ்பத்திரியில்

நாரந்தனை வடக்கில் தூக்கிட்டு இறந்தார் எனக் கூறி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இளம் வர்த்தகர் ஒருவரின் சடலம் ஊர்காவற்றுறை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

வீட்டில் இடம்பெற்ற குடும்பத்தகராறைத் தொடர்ந்தே இவர் தூக்கில் தொங்கினார் என ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் மேற்கொண்ட விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிவானின் பணிப்புரைக்கு அமைவாக பிரேத பரிசோதனைக்காக இறந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-86)

## ரூ. 10 லட்சம் பெறுமதியான பொருள்கள் பொலிஸ் நடமாடும் சேவையில் விநியோகம்

வலி.வடக்கு, நவ.15

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது சுமார் பத்துலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பொலிஸ் நிலையங்களான இள வாலை, தெல்லிப்பழை, அச்சு வேலி, வடமராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொலிஸாரின் நடமாடும் சேவையில் நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் 600 மாணவர்களுக்கு சீருடைகள், 200 மாணவர்களுக்கு கால ணிகள், 6 ஆயிரத்து 60 பயிற்சி கொப்பிகள் என்பன வழங்கப் பட்டதுடன் பொது மக்கள் பயன் பாட்டுக்கு 600 மூக்குக் கண்ணாடி கள், ஒன்பது சக்கர நாற்காலி கள், எட்டு ஊன்றுகோல்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

அத்துடன் நோயாளர்களுக்கான பொது மருத்துவ சேவை, கண் பரிசோதனை என்பனவும் இடம்பெற்றன.

நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட பொருள்களை கொழும்பு ஓசியன் சிற்றி லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 - பி2, கொழும்பு லயன்ஸ் கழகம், கண்டி செங்கடகல லயன்ஸ் கழகம், திருகோணமலை லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து வழங்கியதாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எட்வின் மகேந்திரா தெரிவித்தார். (ம-201-86)

# வேதன உயர்வு வழங்குமாறு கோரி சுத்திகரிப்பு பணியாளர் போராட்டம்

வலி.வடக்கு, நவ.15

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய தனியார் நிறுவன சுத்திகரிப்புப் பணியாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 15 ஆம் திகதி முதல் புதிய நிர்வாகத்தின் கீழ் இவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 450 ரூபா வேதனமாக வழங்கப்பட்டு வந்துள்ளது. கடந்த மாதம் வைத்தியசாலைப் பணிகளைப் பொறுப்பேற்ற நிறுவனம் 510 ரூபா வேதனம் வழங்குவதாகக் கூறியதாகவும் ஆனால் தற்போது குறிப்பிட்ட தொகையை விட குறைந்தளவு வேதனமே வழங்குவதாகவும் கூறி வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளனர்.

புதிய நிறுவனம் குறிப்பிட்ட சம்பளத்தை வழங்காததுடன் தற் போது 425 ரூபா வேதனமாகத் தருவதாகவும் அதில் 25ரூபா ஊழியர் சேமலாப நிதிக்கு கழிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இதனை ஏற்கமுடியாது என கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இன்று காலை குறிப்பிட்ட நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் பொலிஸாருடன் வந்து சுத்திகரிப்புத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய போதிலும் தமது சம்பளப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனக்கூறி அவர்கள் பணிபுரிய மறுத்துள்ளனர். (ம-201-86)

## வைத்தியசாலைச் சுத்திகரிப்பு பணிகளில் நேற்று மாநகரசபை தொழிலாளர்கள்

வலி.வடக்கு, நவ. 15

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனியார் நிறுவன சுத்திகரிப்புப் பணியாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையால் யாழ்.மாநகர சபை சுகாதாரப் பணியாளர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் சுகாதாரப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நேற்று காலை முதல் தனியார் நிறுவன சுகாதாரப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மலசல கூடங்கள் சுத்திகரிக்கப்படாததால் துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டது.

எனவே யாழ்.மாநகர சபை சுகாதாரப் பணியாளர்கள் வைத்தியசாலை நிர்வாகத்தினால் கடமைக்கு அழைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

யாழ்.மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்கள் சுமார் 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இரண்டு மணி நேரம் நோயாளர் விடுதிகளை துப்புரவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-201-86)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் முதியோருக்கு அடையாள அட்டைகள்

நவாலி, நவ.15

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டையைப்பெற விண்ணப்பம் செய்தவர்களில் 103 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

விண்ணப்பம் செய்த ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு விரைவில் அடையாள அட்டை வழங்கப்படும் என்று முதியோர் மேம்பாட்டுக்கழக உத்தியோகத்தர் திருமதி ஸ்பெல்மன் பாலகுமார் தெரிவித்தார். (204-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூகி விடுதலை


விடுதலையான மகிழ்ச்சியில் ஆங்சான் சூகி.

## -15 ஆண்டுகளுக்குப் பின்-

யாங்கூன், நவ. 15

மியான்மரின் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவியும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி (வயது - 65), 15 ஆண்டுகால வீட்டுக் காவலிலிருந்து சனிக்கிழமை மாலை விடுதலையானார்.

அவரின் வீட்டின் முன்னால் கூடியிருந்த ஏராளமான தொண்டர்கள், இந்த விடுதலையை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

மியான்மர் விடுதலைப் போராட்டத் தலைவரான ஜெனரல் ஆங் சான் - கின் கி தம்பதியருக்குப் பிறந்தவர் ஆங் சான் சூகி.

ஆரம்பத்தில் டில்லியில் படித்த சூகி, பின்னர் பிரிட்டன் சென்று ஒக்ஸ்போர்ட் பல்கலையில் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை படித்தார். அங்கேயே மிக்கேல் ஆரிஸ் என்பவரை மணந்து குடும்பத் தலைவியானார்.

ஆங் சான் சூகி 1945 ஜூன் 19இல் யாங்கூனில் பிறந்தார். மியான்மரின் தேசத் தந்தையாகக் கருதப்படும் அவரது தந்தை ஆங் சான், 1947இல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நாட்டிற்கு விடுதலைப் பெற்று தந்தவர். ஆனால், அதே ஆண்டில் இராணுவ அதிகாரிகளால் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

மியான்மரில் 1962ஆம் ஆண்டில் இருந்து இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், 1988இல் தன் தாயாரைக் கவனிப்பதற்காக யாங்கூனுக்கு வந்த சூகி, நாடு முழுவதும் இராணுவ ஆட்சிக்கு நிலவிய எதிர்ப்பைக் கண்டு, தேசிய ஜனநாயக லீக் என்ற கட்சியை ஆரம்பித்து அரசியலில் ஈடுபட்டார்.

இராணுவ ஆட்சிக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தினார். இதனால், அவரின் செல்வாக்கு அதிகரித்தது. இதையடுத்து, 1989ஆம் ஆண்டில், பாதுகாப்புக் காரணங்களை கூறி, அவரை மியான்மர் இராணுவ அரசு, வீட்டுக் காவலில் வைத்தது.

1995ஆம் ஆண்டு வரை அவரது வீட்டுக் காவல் தொடர்ந்தது. அதன்பின்னர் சில காலம் விடுவிக்கப்பட்டிருந்தாலும், மீண்டும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். கடந்த 21 ஆண்டுகளில் 15 ஆண்டுகளுக்கு மேலாக அவர் வீட்டுக் காவலில் அல்லது சிறையில் இருந்துள்ளார்.

அவரை விடுவிக்கும்படி பல நாடுகள் கோரிக்கை விடுத்தும், மியான்மர் இராணுவ அரசு கண்டுகொள்ளவில்லை. இதற்கிடையில், 1990இல் மியான்மரில் முதன் முதலாக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்பட்டது.


ஆதரவாளர்களுடனான முதல் சந்திப்பில் மகிழ்வுடன் கை தொடுகிறார் சூகி.

அதில், சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி பெரு வெற்றி பெற்றது. இருந்தும், அவரிடம் அரசை ஒப்படைக்க இராணுவ ஆட்சியாளர்கள் மறுத்து விட்டனர். அதே நேரத்தில், 1991 ஆம் ஆண்டில் ஆங்சான் சூகிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிலையில், 20 ஆண்டுக்குப் பின்னர் இம்மாதம் 7ஆம் திகதி மியான்மரில் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் சூகியின் கட்சி பங்கேற்கவில்லை.

அதே நேரத்தில், இராணுவ ஆட்சியாளர்களே 80 சதவீத இடங்களை கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், ஆங் சான் சூகியின் வீட்டுக் காவல் வெள்ளிக்கிழமையோடு முடிவடைந்தது.

அன்றைய தினமே அவர் விடுதலை செய்யப்படுவார், அதற்கான ஆவணத்தில் இராணுவ ஆட்சித் தலைவர் தான் ஷ்வே கையெழுத்திட்டு விட்டார் என செய்திகள் வெளியாகின. சனிக்கிழமை மாலை சூகி விடுவிக்கப்பட்டார்.


அதிகாரிகள் சூகியின் வீட்டுக்கு சென்று, அவரது விடுதலைக்கான உத்தரவை வாசித்துக் காண்பித்தனர். சூகியின் விடுதலையால் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய அவரது கட்சித் தொண்டர்கள், அவரது வீட்டு முன், பொலிஸாரால் போடப்பட்டிருந்த தடுப்புகளை உடைத்து முன்னேறினர்.

தன்னைப் பார்ப்பதற்காகக் கூடியிருந்த தொண்டர்களுக்கும் இதுவரை தனது விடுதலைக்காகப் போராடியவர்களுக்கும்,' சூகி தனது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

தற்போதைய நிலையில் அவரது விடுதலை, மியான்மரில் ஜனநாயகம் தழைப்பதற்கு ஒரு வழியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இனி மியான்மர் இராணுவ ஆட்சி ஜனநாயகத்தை நோக்கிச் செல்லுமா என்ற எதிர்பார்ப்பும் உலக அரசியல் அரங்கில் எழுந்துள்ளது.

மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதோ அல்லது எதிர்ப்பைத் தெரிவிப்பதோ, அபாயமானது என்றாலும், சனிக்கிழமை சூகியின் வீட்டின் முன் கூடியிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் அவரின் படம் போட்ட டி-ஷேர்ட்டுகளை அணிந்திருந்தனர். அதில், ''ஆங் சான் சூகிக்கு எப்போதும் துணை நிற்போம்'' என்ற வார்த்தைகளும் இடம்பெற்றிருந்தன.

விடுதலையான ஆங் சான் சூகி, தன் வீட்டின் முன் கூடியிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில், ''இது அமைதியாக இருக்கவேண்டிய நேரமும், பேச வேண்டிய நேரமுமாகும். மக்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். அப்போதுதான் நம் இலட்சியத்தை அடைய முடியும்'' என்றார்.


சூகி விடுதலையான மகிழ்வைக் கொண்டாடுகின்றனர் ஆதரவாளர்கள்.

## குடும்பத் தலைவியாக இருந்து ஜனநாயகப் போராளியான சூகி

★ 1945இல் யாங்கூனில், மியான்மர் விடுதலை போராட்டத் தலைவர் ஜெனரல் ஆங் சான் - கின் கி தம்பதியருக்குப் பிறந்த சூகி, டில்லியில் படித்தார். பிரிட்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலையில் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை படித்தார். அங்கேயே மிக்கேல் ஆரிஸ் என்பவரை மணந்து குடும்பத் தலைவியானார்.

★ 1988இல் தன் தாயாரைக் கவனிப்பதற்காக யாங்கூனுக்கு வந்தவர், நாடு முழுவதும் இராணுவ ஆட்சிக்கு நிலவிய எதிர்ப்பைக் கண்டு, தேசிய ஜனநாயக லீக் கட்சியை ஆரம்பித்து அரசியலில் புகுந்தார்.

★ 1989 ஜூலையில் அவரை வீட்டுக் காவலில் வைத்த இராணுவ அரசு, 1990இல் நடந்த தேர்தலில் தோல்வி அடைந்தும், ஆட்சியை ஒப்படைக்கவில்லை.

★ 15 ஆண்டுகளாக சிறையில் இருந்தபடி, ஜனநாயக அரசியலுக்காக போராடியதற்காக ஆங்சான் சூகிக்கு 1991இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

★ 1999இல் சூகியின் கணவர் பிரிட்டனில் இறந்தார். அவரது இறுதிக் காலத்தில் சூகியைப் பார்க்க இராணுவ ஆட்சி விசா வழங்க மறுத்துவிட்டது.

★ 2009இல் சூகியின் வீட்டுக் காவல் முடிவடையும் தருணத்தில், ஏரி ஒன்றின் அருகிலுள்ள அவரது வீட்டுக்குள், அமெரிக்கரான ஜோன் எட்டாவ் என்பவர் சட்டவிரோதமாக புகுந்து தங்கியிருந்தார் என்றும் அதற்கு சூகி ஒத்துழைத்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டு, 2010 நவம்பர் 12ஆம் திகதி வரை சூகியின் வீட்டுக் காவல் நீடிக்கப்பட்டது.

★ இம்மாதம் 7ஆம் திகதி நடந்த தேர்தலைத் தன் கட்சி புறக்கணிக்கப் போகிறது என சூகி அறிவித்தார். இதனால், அவரது கட்சி இரண்டாகப் பிரிந்தது. பிரிந்த கட்சி தேர்தலில் சில இடங்களில் மட்டுமே ஜெயித்தது. சூகியின் கட்சி சட்டப்படி பதிவு செய்யப்படாததால், விரைவில் கலைக்கப்படும் என இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளன.

★ நடந்து முடிந்த தேர்தலில் இராணுவ ஆட்சி பெரும்பான்மை வெற்றி பெற்றுவிட்ட நிலையில், சனிக்கிழமை மாலை ஆங் சான் சூகியை விடுவித்துள்ளது.

★ 15 ஆண்டு வீட்டுக் காவலிலிருந்தபோது, சூகிக்கு தொலைபேசி, இணையத் தளம் ஆகிய தொடர்பு வசதிகள் மறுக்கப்பட்டன. இரண்டு பெண் உதவியாளர்கள் மட்டுமே அவருடன் இருக்க அனுமதிக்கப்பட்டனர்.

★ தனது இரண்டு புதல்வர்களையும், பேரப் பிள்ளைகளையும் சூகி கடந்த 10 ஆண்டுகளாக சந்திக்கவே இல்லை.

★ சூகியின் விடுதலையை முன்னிட்டு, அவரது இளைய புதல்வர் கிம் ஆரிஸ் (வயது - 35) தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிற்கு வந்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசியல் சாணக்கியம் இன்றைய தேவை

இந்த மாத இறுதியில் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் செய்யும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு இலங்கை அரசுக்கு எவ்வித அழுத்தத்தையும் கொடுக்க மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்பது இந்திய அரசின் உறுதியான நிலைப்பாடு. அது குறித்து தமிழ்த் தலைமைகளிடம் ஏற்கனவே தெட்டத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்று என்று அந்நாட்டின் இராஜதந்திர வட்டாரங்கள் அறுத்து உறுத்துக் கூறிவருகின்றன.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளை, சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான குழுவுடன் நடத்திய சந்திப்பில், இதனை வெளிப்படையாக கூறிச்சென்றார். இனப்பிரச்சனைக்கான தீர்வு உள்நாட்டிலேயே காணப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்குரிய அரசியல் தீர்வில், இந்தியா எந்தவிதத்திலும் தலையிட முடியாது என்று அழுத்திச் சொன்னார். அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் செய்வதற்கு இந்தியா ஆதரவு நல்கும் என்பதே தமது நாட்டின் நிலைப்பாடு என்றும் கூறிச்சென்றார்.

இனப்பிரச்சனைக்கான தீர்வு எங்கள் நாட்டிலேயே வகுக்கப்பட வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அது வரமுடியாது; வரக்கூடாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகவியலாளருக்கு அடிக்கடி அழுத்திக் கூறும் வாய்ப்பாட்டின் 'மறுபிரசுரமே' புதுடில்லி ராஜதந்திர வட்டாரங்களின் - இந்திய அரசாங்கத்தின் - நிலைப்பாடாகவும் உருவெடுத்துள்ளது என்பது இப்போது தானாகவே வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற ஆயுதப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இந்தியாவின் பெரும் பங்களிப்பும் இருந்தது என்பது இப்போது ஒன்றும் இரகசியம் அல்ல. இரண்டு நாடுகளினதும் அரச வட்டாரங்களும் ஒப்புக் கொண்டதால் அது பரகசியமாகி விட்டது.

இத்தகைய பின்புலத்தில், இலங்கைத்தமிழர் விவகாரத்தில் இந்தியா சொல்வதை செய்வதற்கான கடமைப்பாடு இலங்கைக்கு உண்டென்றும், அந்த வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இலங்கை அரசின் தலையில் குட்டிச் செய்வித்து அழுத்தம் கொடுக்கும் என்று தமிழர் தரப்பு தப்புத்தனமாக நம்பிக்கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நிலைப்பாடு இப்போது அதுவல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று இலங்கை அரசிடம் அடிக்கடி 'வற்புறுத்துமே' அன்றி, தீர்வு எவ்வாறு அமையவேண்டும், இவ்வாறு தான் இருக்கவேண்டும் என்று உச்சரிக்க மாட்டாது.

இதனைத்தான் இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் அவ்வப்போது 'மறைமுக மொழி'களில் கூறி வந்தனர். அதுவே இப்போதைய இராஜதந்திர 'செல்நெறி'யாகியும் விட்டது.

அந்தச் செல்நெறியின் தோற்றங்களில் ஒன்றே, அரசியல் தீர்வு ஒன்றுக்கு வெளியாரின் தலையீட்டை எதிர்பார்ப்பதை விட, சொந்த அரசியல் சாணக்கியங்களைக் கடைப்பிடித்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணப்படவேண்டும்' என்பதாகும்.

இலங்கை சீனாவை ஒரு பக்கத்திலும், தன்னை (இந்தியாவை) அடுத்த பக்கத்திலும் அரவணைத்துத் தனது காரியங்களைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகின்றது என்பது இந்தியாவுக்குத் தெரியும். இந்தவேளையில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து அதனைச் சீராக்குவதற்கு இந்திய ராஜதந்திரம் ஒருபோதும் விரும்பாது.

அதனாலேயே தமிழ்த் தலைவர்களைச் சொந்தச் சாணக்கியங்களைக் கண்டுபிடிக்குமாறு புத்திமதி கூறியுள்ளது.

தமது இந்த நிலைப்பாட்டுக்கு உதாரணம் ஒன்றையும் சுட்டிக்காட்டுகிறது இந்திய இராஜதந்திர வட்டாரம். அதாவது இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களுக்குக் குடியுரிமை பெற்றுத் தருவதற்கு மலையகத் தமிழர்களின் முடிசூடா மன்னன் என்று போற்றப்பட்ட அமரர் தொண்டமான் கையாண்ட அரசியல் மூலோபாயங்களை, சாணக்கியங்களைத் தமிழ்த் தலைமைகளிடம் சுட்டிக்காட்டி இருக்கிறது.

சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலமேனும் மலையகத் தமிழ் மக்கள் எல்லோரும் நாடற்றவர்கள் என்ற நிலை முற்றாக மாறாத சூழ்நிலை உருவாகியது.

அதனை மாற்றி அவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜா உரிமையும், வாக்குரிமையும் பெறுவதற்கு வகைசெய்யும் சட்டமூலம் ஒன்றை 1982 ஆம் ஆண்டில் பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரச் செய்த சாணக்கியம் தலைவர் தொண்டைமானிடம் இருந்தது.

காமினி திஸ்ஸாநாயக்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களின் கடும் எதிர்பின் மத்தியிலும் பிரேமதாஸாவைத் தனது பக்கம் திருப்பியவர் தொண்டைமான்.

அத்தகைய சாணக்கியத்தை இப்போதைய தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைவதன் மூலமே கைக்கொள்ள முடியும். இலங்கைத் தமிழ் தலைமைகள் இலங்கை ஜனாதிபதியுடன் பேசுவதற்கான சாணக்கியங்களைக் கற்று அறிய வேண்டிய தேவை எழுந்துள்ளது. அமரர் தொண்டமானுக்கு இருந்த அரசியல் சாணக்கியம் என்ன என்பதனை கற்றுக் கொண்டு ஜனாதிபதி தமது இரண்டாவது பதவிக் காலத்தை இன்னும் மூன்று நாள்களில் ஆரம்பித்த கையோடு பேசுவதற்குத் தயாராக வேண்டும்.

இதுவரை தெரிந்து கொள்ளாத சாணக்கியங்களை கற்று அறிந்துகொண்டு சென்றால், இது விடயத்தில் வெல்ல முடியாவிட்டாலும் தோற்காமல் இருக்கவேனும் பார்த்துக் கொள்ளலாம்.

இதுவிடயத்தில், தமிழ்த் தலைமைகள் ஓரணி சேரவேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது. கட்சி நலன்களை முன்னிறுத்தாமல், மக்கள் நலன்களை முன்னிறுத்திச் செயலாற்ற வேண்டிய வேளை வந்திருக்கிறது.

ஏற்கனவே இருக்கக் கூடிய கசப்புணர்வுகளை ஓரங்கட்டி, சுமார் அறுபதாண்டு காலமாக முன்னிறுத்தி வரும் உரிமைகளைப் பெறுவதற்கு ஒன்றிணைய வேண்டிய தவிர்க்க முடியாத காலம் வந்துள்ளது. தமிழ் மக்களின் இனத்துவத்தையும், மொழி, நில உரிமைகளையும், சுயாட்சி அதிகாரங்களையும் பாதுகாக்கவல்ல சாணக்கியமே வலுவுள்ளதாக அமையும். தமிழர் பூமியின் அரசியல் தலைவர்கள் மக்கள் நலன் கருதி இதனைச் சிந்தனைக்கு எடுப்பார்களா?

# நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும்

## நெல்லியடி அமர்வில் சாட்சியம்

யாழ்ப்பாணம், நவ.15

கடந்த 1996 ஆம் ஆண்டிலி ருந்து 700 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டும் காணாமலும் போயுள்ளனர். அப் பாவிகளான இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், நிவாரணம் கிடைக்கவேண்டும்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களது சாட் சியங்களைப் பதிவு செய்யும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தார் தங்கவடிவேலு விஜயகுமார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முன்தினம் நெல்லியடியிலும் இடம்பெற்றது.

இதன்போதே கைது செய்யப்பட்டு மற்றும் காணாமற் போனோர் சங்கத்தின் யாழ். மாவட்ட குழுவின் உப தலை வரான தங்கவடிவேலு விஜயகுமார் மேற்கண்டவாறு தமது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1996 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் அதிக எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டு காணாமற் போயுள்ளனர். அந்தக் காலத்தில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினோம். அப்போது அப்பாவி மக்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டினோம். ஆறு மாத காலத்திற்கு குழு அமைத்து விடுதலை பற்றி ஆராயப் படுவதாக அப்போது ஜனாதிபதி சந்திரிகா கூறினார். எனினும் நீதி கிடைக்கவில்லை.

1998 இல் உயர் நீதிமன்றத்துக்கு முன்னாலும் போராட்டம் செய்தோம் எதுவித பயனும் கிட்டவில்லை. மனித உரிமைகள் அமைப்பின் தலைவி சட்டத்தரணி ராதிகா குமாரசுவாமிக்கு எமது முழுமையான அறிக்கையை சமர்ப்பித்தோம். அவர் விதவைகளுக்கு உதவுவதாகக் கூறினார். எனினும் இதுவரை எதுவும் நடைபெறவில்லை.

இவ்வாறு பல்வேறு தரப்புகளிடமும் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக முறையிட்டோம்.

எனது சகோதரனும் கூட வேலைக்குச் சென்றபோது இராணுவத்தால் கைது செய்யபட்டு காணாமற் போய் விட்டார்; எனது நான்கு சகோதரிகளும் திருமணமாகாத நிலையில் வாழ்கின்றனர். யுத்த காலத்தில் ஊரடங்கு அமுலில் இருந்ததால் எனது பிள்ளையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் பிள்ளையின் உயிர் பிரிய நேர்ந்தது.

கிளிநொச்சியில் ஆசிரியராகக் கடமையாற்றும் எனக்கு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்று கூறினார். (ஒ-14-15)

# ஷெல்லில் காயமுற்ற அம்மாவை பஸ்ஸில் ஏற்றிச்சென்ற இராணுவத்தினர் இதுவரையிலும் விடுவிக்கவில்லை

## அவரை என்னிடம் சேர்த்து விடுங்கள் என்கிறார் சிறுமி இலக்கியா

சாவகச்சேரி,நவ.15

ஷெல் வீச்சில் காயமடைந்த எனது அம்மாவுக்கு உதவ வழி தெரியாமல் அழுது புலம்பிய வேளையில் காயப்பட்டவர்களுடன் சேர்த்து அம்மாவையும் இராணுவத்தினர் தனி பஸ்ஸில் ஏற்றிச் சென்றனர்.

ஆனால் இன்றுவரை அம்மாவைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் 13 வயதுச் சிறுமி செ.இலக்கியா.

சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள தென்மராட்சி கலை, கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நல்லிணக்க ஆணைக் குழு அமர்வு இடம்பெற்றது. அங்கு சாட்சியமளிக்கையிலேயே மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் தரம்-08 இல் கல்வி பயிலும் மாணவியான செல்வதாசன் இலக்கியா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் எனது அப்பா இறந்து விட்டார். எனது அம்மா கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றியவர்.

போரின் இறுதிக் கட்டத்தின் போது நானும் அம்மாவும் வலைஞர் மடம் பகுதிக்கு வந்தவேளை படையினர் எங்களுடன் வந்தவர்களில் காயப்பட்டவர்களைத் தனியான பஸ்ஸில் ஏற்றினர். அம்மாவும் ஷெல் வீச்சில் காயப்பட்டு இருந்ததால் அவரையும் என்னிடமிருந்து பிரித்து அந்த பஸ்ஸில் ஏற்றிச் சென்றுவிட்டனர்.

நான் சிறுபிள்ளையாக இருந்ததால் காயப்பட்ட அம்மாவுக்கு எவ்வித உதவியும் செய்யமுடியவில்லை.

பின்னர் என்னை வவுனியா முகாமுக்குக் கூட்டிச் சென்றனர். நான் சிறுபிள்ளை என்ற காரணத்தால் 5 மாதத்திலேயே முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டேன்.

ஆனால் இதுவரை எனது அம்மா பற்றிய எந்தத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. தயவுசெய்து எனது அம்மாவை என்னிடம் சேர்க்க உதவுங்கள். இவ்வாறு கதறி அழுதவாறு இலக்கியா சாட்சியமளித்தார்.

அங்கு சாட்சியமளித்த மட்டுவில் அ.த.க.பாடசாலை ஆசிரியை ஸ்ரீஸ்கரன் பத்மினி தெரிவிக்கையில்:-

எனது கணவரை கடந்த 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 10ஆம் திகதியன்று வீட்டில் வைத்துப் படையினர் கைது செய்து அழைத்துச் சென்றனர். அவர் கைது செய்யப்பட்டு 9 மாதங்களின் பின்னர் அவர் வலிகாமம் பகுதி முகாம் ஒன்றில் உயிருடன் இருப்பதாக அறிந்தேன்.

கிராம சேவகரின் உதவியுடன் எனது கணவரைப் பார்வையிட அனுமதிப்பதாக உறுதியளித்தனர். எனினும் இன்றுவரை அவர் விடுவிக்கப்படவில்லை.

எனது கணவர் கைது செய்யப்பட்டதற்கான அடையாளச் சான்றிதழ் என்னிடம் உள்ளது. அவர் இன்னும் உயிருடன் இருப்பதாகவே நம்புகிறேன். எனக்கு இரு மகன்கள் உள்ளனர். தயவுசெய்து எனது கணவரை மீட்டுத் தாருங்கள் என்று கண்ணீர் மல்கக் கேட்டுக்கொண் டார்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் தென்மராட்சியில் ஆரம்பமான ஆணைக்குழு அமர்வில் சுமார் 60 இற்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளித்தனர். (ஒ-16-131)

# தரம் 5 மாணவரின் பெற்றோர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.15

தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சை 2011 ஆண்டு தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு, வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்குக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக தேசிய சேமிப்பு வங்கியின் வடமாகாணப் பிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம், ஈ.எஸ்.பேரம்பலம் அன்சன்ஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாஸன், யா/புனித ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட் சகோதரி எம். ஜீவந்தி, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியால்ய அதிபர் இ.இராகவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் விசேடமாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன், ஆசிரியர் கே.தவயோகராஜா ஆகியோர் வழிகாட்டலை வழங்கவுள்ளனர்.(ஒ-ஐ)

# மனைவியையும் மகனையும் மீட்டுத்தருமாறு சூசையின் சகோதரன் ஆணைக்குழு முன் கோரிக்கை

வடமராட்சி,நவ.15

திருகோணமலை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மனைவியையும், மகனையும் மீட்டுத்தருமாறு விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசையின் சகோதரர் தில்லையம்பலம் தவராசா (வயது 60) நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நெல்லியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற விசாரணையின்போது சாட்சிகளை ஆணைக்குழு உறுப்பினர்கள் குழுக்களாகப் பிரிந்து சென்று சாட்சியங்களைச் சேகரித்த போதே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டதுடன் அது தொடர்பான விவரங்களையும் சமர்ப்பித்தார்.

எனது மனைவியும் மகனும் படகொன்றில் பருத்தித்துறையை நோக்கி வரும்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக் கப்பட்டுள்ளதாக அறிந்துள்ளேன். எனவே அவர்களை மீட்டுத் தருமாறு வேண்டுகிறேன் என தனது சாட்சியத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-236)

## நாளை

ஐப்பசி 30 16.11.2010

செவ்வாய்க்கிழமை

| | | |
|---|---|---|
| திதி: | : | தசமி பி.ப.05.18 வரை |
| நட்சத்திரம் | : | பூரட்டாதி [illegible] 12.23 வரை |
| [illegible] | : | 10.37-12.07 வரை |
| ராகுகாலம் | : | 03.07-04.37 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் இலங்கைவங்கியின் தொலைபேசி எண்கள் மாற்றம்

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட்டு புதிய இலக்கங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இப்போது பாவனையிலுள்ள புதிய தொலைபேசி இலக்கங்கள் - 021 225 5177, 021 225 5188 என்பனவாகும். இந்த இலக்கங்கள் மூலம் பொதுமக்கள் வங்கியுடன் தொடர்பு கொள்ள முடியுமென்று வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா தெரிவித்துள்ளார். (204-100)

## பாராட்டு விழாவும் மணிவிழா நிகழ்வும்

தென்மராட்சி, நவ.15

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற நா.அருட்சோதிக்கு வித்தியாலய சமூகத்தினர் பாராட்டு விழாவுடன் மணி விழாவினையும் நடத்தவுள்ளனர். இந்த நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (204-207)

## நன்றி தெரிவிப்பும் பாராட்டி வாழ்த்துக்களும்

செல்வன்

**அருளானந்தம் அபிநந்தன்**

(யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)



2010 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்றுச் (மாவட்ட நிலை - 10) சித்தியடைய வழிகாட்டியகாசத் திகழ்ந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்புடன் இவர் தரணியில் சாதனைகள் பலபடைத்து தமிழன்னை போற்ற சீரும் சிறப்புமாக பல்லாண்டுகள் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார்.

ஜம்பட்டா வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு- 11

## உள்ளம் உவகை கொண்டு உளமகிழ வாழ்த்துக்கள்



யாழ்.பல்கலைக்கழகத்தின் உன்னத சேவையில் கடந்த பல வருடங்களாக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத் துறைகளின் தலைவராகப் பணிபுரிந்த

**அருட்பணி கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்**

கடந்த வாரம் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். தனது கடமையில் செயல் வீரனாகப் பிரகாசித்த இவரின் கல்விச் சேவை சீடத்துவ வாழ்வு, ஆன்மீக வாழ்வு மேன்மேலும் வளர உளம் மகிழ வாழ்த்துகின்றோம்.

"உங்கள் சேவை அனைவருக்கும் தேவை" என்றும் பணிவன்புடன்
S.K.பூட், கென்ஸ்மன், ஞானதீபன், வீனிஸ்ரன், பிரகாஷ்.

தேவாலய வீதி,
சங்கானை. (105862)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர்களுக்கான மென்பொருள் ஆக்கப் போட்டி - 2010 தரம் 9-11 பிரிவில், எமது பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்

**திரு.நாகலிங்கம் சதீஸ்கரன்**

அவர்கள் பங்குபற்றி மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்,
நீர்வேலி. (சி/572815)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





செல்வி ப.புஸ்பரஞ்சினி B.A (Hons) செல்வி சி.தர்மிகா

கடந்த 06.10.2010 அன்று யாழ்.பல்கலைக் கழகத்தின் 26ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A. (Hons) பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்ற எமது பாடசாலையில் கணினிப் பயிற்சி நெறியினைப் பயிற்றுவிக்கும் ஆசிரியை செல்வி ப.புஸ்பரஞ்சினி அவர்களையும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 147 புள்ளிகளைப் பெற்ற எமது வித்தியாலய மாணவி செல்வி சி.தர்மிகா அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/குடமியன் அ.த.க.பாடசாலை,
வரணி. (105897)

## கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்கள் அழிப்பு

கொம்புத்துறை, நவ.15

அரியாலை கிழக்கு வயல் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்கள் அழிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்தபோது கைவிட்டு வந்த கால்நடைகள் பெருகி கட்டாக்காலியாக அப்பகுதிகளில் திரிகின்றன.

செய்கை பண்ணப்படும் வயல் நிலங்களைச் சுற்றி கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் கட்டாக்காலிகள் காடுகள் கடற்கரை வழியாக வயல்களுக்குள் நுழைந்து பயிர்களை மேய்ந்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (204-135)

## சபரிமலை சபரீச ஐயப்பன் ஆலய மகர ஜோதிப் பெருவிழாக்கள்

யாழ்ப்பாணம்,நவ.15

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மகரஜோதிப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

60 நாள்கள் மகரஜோதிவரை காலை, மாலை விசேட பூசைகள், படிப்பூசைகள், பஜனைகள், விசேட உற்சவங்கள், மஹோற்சவம் என்பன இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி டிசெம்பர் 9ஆம் திகதியுடன் திருவிழா நிறைவடையும்.

ஜனவரி 14ஆம் திகதி மகரஜோதி மகரவிளக்கு மாலை திரு ஆபரணப் பெட்டி வலம் வருதல் இடம்பெறும். மறுநாள் 15ஆம் திகதி ஆஞ்சநேயர் உற்சவம் இடம்பெற்று சாமிமார் மாலை கழற்றுதல் இடம்பெறும். (ம-ற)

* * *

யாழ்ப்பாணம்,நவ.15

அகில இலங்கைச் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தினால் நடத்தப்படும் மகர ஜோதிப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பு-13, சென் அன்ரனீஸ் மாவத்தையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ற)

## கோழிகளுக்கு நோய் தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம்,நவ.15

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கோழிகளுக்கு நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்கும் நோக்குடன் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை கால்நடை அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் மீளவும் குடியேறியுள்ள கோழிப் பண்ணையாளர்களுக்கு மானிய அடிப்படையில் கோழிக் குஞ்சுகளும் விநியோகிக்கப் பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலணை கால்நடை அபிவிருத்தி நிலையத்தில் பறவைக் காய்ச்சல் பற்றிய பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்வதற்காக 40 பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஊர்காவற்றுறை கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (204-300)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1978 செவ்வாய் குற்றமற்ற பாவம் குறைந்த திருவாதிரை நட்சத்திரம் B.Sc.பட்டதாரி அரசாங்கத்தில் நிரந்தர பதவியில் இருக்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. பட்டதாரிகள் விரும்பத்தக்கது. தொடர்பு:விளம்பர இல.4090 C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/572853)

## நேரக் கணிப்பாளர் தேவை

புன்னாலைக்கட்டுவன் 764 சிற்றூர்தி சேவைச் சங்கத்திற்கு நேரக்கணிப்பாளர் தேவை.

தொடர்பு: தலைவர்
சிற்றூர்திச் சேவைச்சங்கம்,
புன்னாலைக் கட்டுவன்.

## சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா சைவ மாநாடு

யாழ்ப்பாணம்,நவ.15

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன் விழா சைவ மாநாடு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் சைவநாதம் பொன்மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது. இதன் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் நிகழ்த்துவார்.

சைவப் பணியாற்றுவோர் கௌரவிப்பும் கலை நிகழ்வுகளும் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொன்விழா சைவக்கலைப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும்.

மேற்படி போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றோரின் விவரம் வருமாறு-

பஞ்சபுராணம் ஓதுதல்- யோ.சிந்துஜா (இணுவில் மத்திய கல்லூரி), பேச்சு - க.பிரதாபன் (யூனியன் கல்லூரி), அபிநய நடனம் - ந.மதுஷா (யூனியன் கல்லூரி), புராணப்படனம் (ஆண்கள்) - த.கபிலதாஸ், ம.பிரதீபன் (இணுவில் இந்துக் கல்லூரி), புராணப் படனம் (பெண்கள்) - த.மதுரா, யோ.அர்ச்சனா (மீசாலை வீரசிங்கம் ம.வி), கதாப்பிரசங்கம் - ஸ்ரீ.பிரதீஸ்வரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வில்லுப்பாட்டு (இணுவில் இந்துக் கல்லூரி), இசை நாடகம் (வட்டு.இந்துக் கல்லூரி). (ம-201)

## மரண அறிவித்தல்

**கந்தையா வேல்முருகு (சுந்தரம்)**

(பொது முகாமையாளர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



புற்றளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேல்முருகு (சுந்தரம்) கடந்த (13.11.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மங்கையர்க்கரசி (ஆசிரியை, புற்றளை மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் சிவசுதன், விதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சபாபதி சுப்பிரமணியம், சாமிநாதன், கணபதிப்பிள்ளை மற்றும் சிவக்கொழுந்து, செல்வராசா, வடிவேலு, இராமச்சந்திரன், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாம்பாள் கணேசலிங்கம், குமாரலிங்கம், காலஞ்சென்ற கிருஸ்ணலிங்கம் மற்றும் பத்மாபதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.11.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள். (சி/572834)

## ஈரவிழிகளுடன் ஆறாம் ஆண்டில்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 20 |
| 10 | 11 |
| 1936 | 2004 |

**நாரணி சுப்பையா திருநாவுக்கரசு**

(உரிமையாளர், விஜயா கூல்பார் இல.6, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்)

திதி: நவமி

பாசத்தின் திருவுருவே!
நீவீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஆறு சென்றிடினும்
உம் நினைவில் இதயம் வாழ்ந்திருக்கும்

101/1, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (105974)

என்றும் நினைவில்:
மனைவி, மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியேற்றம்; என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது

## யாழ்.அரச அதிபர் கைவிரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.15

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியேறியுள்ள காணி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானது. அரசாங்க அதிபர் என்ற வகையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினர்தான் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நாவற்குழியில் அண்மையில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள குடியேற்றம் குறித்து அரச அதிபரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாவற்குழியில் சிங்களக் குடியேற்றம் குறித்து அரசாங்க அதிபர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று தமிழ் அரசியல் பிரமுகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசஅதிபர் என்ற வகையில் என்னால் எதுவிதநடவடிக்கையும் எடுக்க முடியாது. ஏனெனில் அதிகாரசபைக்குச் சொந்தமான காணிக்குள் குடியேற்றம் செய்வது குறித்து அரசாங்க அதிபர் என்ற வகையில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

ஏனெனில் அதிகாரசபைக்குச் சொந்தக் காணியினை விற்பனை செய்வதோ அல்லது குத்தகைக்கு விடுவதோ அது அதிகாரசபைக்கே உரிமையுள்ளது.

எனவே அதுவிடயத்தில் என் மீது மட்டும் அரசியல் பிரமுகர்கள் குற்றஞ்சாட்டுவது ஏன்? இந்தசிங்களக்குடியேற்றம் குறித்து தமிழ் அரசியல் பிரமுகர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பலாம்தானே? அது பற்றி விமர்சனங்களையும், கருத்துக்களையும் கூறிக்கொள்ளலாம்தானே. இவர்கள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள் - என்றார்.

(ம-9)

# நெல்லியடியில் சைக்கிள் திருட்டுகள் தடுப்பதற்குப் பொலிஸார் நடவடிக்கை



நெல்லியடிப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ள சைக்கிள்களை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.டபிள்யூ.டி.கங்கார தலைமையிலான பொலிஸ் குழுவினர் பார்வையிடுகின்றனர்.

யாழ்ப்பாணம்,நவ.15

நெல்லியடிப் பகுதிகளில் அதிகரித்துவரும் சைக்கிள் திருட்டுக்களைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

சைக்கிள்திருட்டுக்கள் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாரின் முறைப்பாடுகளை அடுத்து நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம். டபிள்யூ.டி. கங்கார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களிடம் திருடப்பட்டுள்ள 15 சைக்கிள்களை மேற்படி பொலிஸ் குழுவினர் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இந்தச் சைக்கிள்களை உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-201)

# நாவற்குழியில் குடியேறிய சிங்கள மக்களிடம் காணி உறுதி இருந்தால் உடனடிக் குடியேற்றம்

## மீள்குடியேற்ற அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.15

நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு காணி உறுதி இருப்பது உறுதிப்படுத்தப்படுமானால் 24 மணித்தியாலத்துக்குள் அவர்கள் குடியேற்றப்படுவார்கள்.

நாவற்குழியில் தங்கியுள்ள சிங்கள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது குறித்து தேசிய வீடமைப்பு அதிகார சபையினர்தான் சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வினையொட்டி ஆயிரம் மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில்நேற்றுஇடம்பெற்றபோது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு திரும்புகையில் நாவற்குழி சிங்களக் குடியேற்றம் குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் கடந்த 1985 ஆம் ஆண்டுகளில் வாடகை வீடுகளில் வாழ்ந்த சிங்கள மக்கள் தங்களைக் குடியேற்று மாறுகோரி யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியிருந்தனர்.

இந்த மக்களை நானும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும்சந்தித்து அவர்களின் ஆவணங்களைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மூன்றுமாத கால அவகாசம் கேட்டிருந்தோம்.

ஆனால், அதுவரை பொறுத்திராது அந்த மக்கள் தாமாகவே அதில் மீள்குடியேறியுள்ளனர். அவர்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணிக்குள் குடியேறியுள்ளதால் அவர்களை அங்கிருந்து அகற்றுவது குறித்து நடவடிக்கைகளை வீடமைப்பு அமைச்சுதான் மேற்கொள்ள வேண்டும்.

நாவற்குழியில் உள்ள அரச காணிகளில் காணியில்லாத தமிழ் மக்கள் குடியேறலாமா? என்று ஊடகவியலாளர் கேட்டதற்கு, தமிழ் மக்களும் அங்கு குடியேற விரும்பினால் தாராளமாகக் குடியேறலாம். அதற்கு யாரும் தடை விதிக்கப்போவதில்லை.

இனங்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்தி மீண்டும் ஒரு யுத்தத்தினை எதிர்கொள்ள இலங்கை தயாராகவில்லை - என்றார்.

(ம-9)




# யாழ்.வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பெருள்களின் விலைகள்நாளுக்குநாள்அதிகரித்துச் செல்கின்றன.

சீனி,கோதுமை மா,மைசூர் பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவற்றின் விலைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக ஒரு கிலோ 92 ரூபாவாக விற்கப்பட்ட சீனி கடந்த சனிக்கிழமை முதல் 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனைவிட மைசூர் பருப்பு கிலோ 180 ரூபாவாகவும் சமையல் எண்ணெய் லீற்றர் 200 ரூபாவாகவும் மா ஒரு கிலோ 75 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.

தனியார் வர்த்தக நிலையங்களில் இந்த அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தினமும் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொருள்கள் கடைக்கு கடை வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையங்களில் வேறுபட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-204-26)

# திணைக்கள வளாகங்களில் உள்ள பற்றைகள்; அழிக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.15

வேலணைப் பிரசேத்தில் உள்ள அரசதிணைக்களங்கள் மற்றும் அலுவலக வளாகங்களில் காணப்படும் பற்றைகள் அழிக்கப்படாததால் மேற்படி பிரதேச அரச திணைக்களங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பிரதேச அரச திணைக்கள வளாகங்களில் காணப்படும் பற்றைகளால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வாய்ப்பு காணப்படுகின்றது.

எனவே, அதனைத் தடுக்கும் முகமாக பற்றைகளை அழித்து டெங்கு நோய்வராது பாதுகாக்குமாறு வேலணை பொதுசுகாதாரப் பரிசோதகர் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இவ்விடயம் தொடர்பாக திணைக்களத்தினர் கவனமெடுக்காததால் பொலிஸாரின் உதவி நாடப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-201-7)

# சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்குக; வடமராட்சி கிழக்கு மக்களின் கோரிக்கை

## நடவடிக்கை எடுப்பதாக நல்லிணக்க ஆணைக்குழு உறுதி

வடமராட்சி,நவ.15

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, கட்டைக்காடு, கேவில், சுண்டிக்குளம் ஆகிய கிராமங்களைச் சொந்த இடமாகக் கொண்ட மக்கள் தங்களை மீள்குடியேற அனுமதிக்குமாறு அந்தக் கிராம மக்களைச் சேர்ந்த அல்லாரைநலன்புரிநிலையத்தில் தங்கியுள்ள குடும்பப் பெண்கள் நல்லிணக்க ஆணைக் குழுவிடம் நேற்று முன்தினம் குடத்தனையில் வைத்து வேண்டுகோள் விடுத்தனர்.

குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அல்லாரை நலன்புரி நிலையத்திலும் மற்றும் வெவ்வேறு பகுதிகளில் உள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்து நாளாந்தம் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும், துன்பங்களையும் எதிர்கொண்டு வருகிறார்கள்.

நாங்கள் எமது கிராமங்களில் நிம்மதியாக வாழ, தாமதமின்றி அக்கிராமங்களில் மீள்குடியேற ஒழுங்குகளைச் செய்து தாருங்கள் என அந்தக் குடும்பப் பெண்கள் தமது வேண்டுதலில் குறிப்பிட்டார்கள்.

அதற்குப் பதிலளித்த ஆணைக் குழுவினர், யாழ்.அரசாங்க அதிபருடன் இது தொடர்பாகப் பேசி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சமூக சேவையாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் தனது சாட்சியத்தில் குறிப்பிடுகையில்: வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கிராமங்களிலும் நாகர் கோவில் கிராமத்திலும் இன்னமும் மீள்குடியேற்றம் நடைபெற வில்லை. இந்தக் கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

(ம-236)

## கௌரவிப்பு...





மரியாதை:- காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழா காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது.
நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்[illegible]தையும் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களையும் படங்களில் [illegible] (படங்கள்:-250)

# இரவுப் பொழுதை நடைபாதைகளில் கழிப்போர் மீது பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.நகரிலும் மற்றும் அதனை அண்டிய சுற்றுப்புறங்களிலும் உள்ள நடைபாதைகளில் இரவுவேளைகளில் நித்திரை செய்து பொழுதைக் கழிப்போர் மீது பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் மற்றும் பஸ்தரிப்பு நிலைய இருக்கை மேடைகளிலும் இரவு வேளையில் நித்திரை செய்வோரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்துவதோடு, அவர்களை அவ்விடங்களிலிருந்து விரட்டியும் வருகின்றனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையை அடுத்து நகரில் இரவுத் தூக்கத்தைக் கழிக்கும் பிச்சைக்காரர் உட்பட மற்றும் சிலரின் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(ம-201-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் திரு.எல்.ஓங்காரமூர்த்தி
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யாழ்.மத்திய கல்லூரி.** (105968)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 . 11 . 1925



மறைவு 16 . 10 . 2010

### அமரர் கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
உபதலைவர், சைவவித்தியா விருத்திச் சங்கம்,
முன்னாள் தலைவர், ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி)

இந்து போர்ட் காத்து நின்ற
இமயமே! எங்கள் ஐயா!
பந்தங்கள் தவிக்க விட்டு
போயினீர் பாவி ஆனோம்
வந்தனை செய்வோம் நாளும்
வானுறை தெய்வப் பாதார
விந்தங்கள் அடைவீர் ஐயா!
வீரமா காளி காக்கும்.

(16.10.2010) அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் அமரத்துவமெய்திய செய்திகேட்டு உடன் வந்து ஆவன மேற்கொண்ட அன்பு உள்ளங்கள், நோயுற்றிருந்த வேளை மருத்துவத் தேவைகள் அனைத்தையும் முன்னின்று நிறைவேற்றிய வைத்தியப் பெருந்தகைகள், இறுதி நிகழ்வின் போது நேரில் கலந்து கொண்டும் ஊடகங்கள் வாயிலாகவும் அஞ்சலித்த அன்புள்ளங்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆன்மா வீரமாகாளி அன்னையின் குளிர் நிழலில் நித்திய இளைப்பாறுகை பெறப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அயோத்தியா",
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (105955)

குடும்பத்தினர் சார்பில்:
**ந.நகைகுமாரன் (மருமகன்).**

## கிராம அலுவலரிடையே போட்டி; நெடுந்தீவு மத்தி மேற்கு முதலிடம்

வலி.வடக்கு,நவ.15

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்கிடையே நடைபெற்ற அலுவலக முகாமைத்துவப் போட்டியில் நெடுந்தீவு மத்தி மேற்கு கிராம அலுவலர் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கிராம அலுவலர்களின் திறன்களை மேம்படுத்தும் முகமாக இப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெற்ற போட்டியில் முதலாம் இடத்தை ஜே/03 நெடுந்தீவு மத்தி மேற்குக் கிராம அலுவலர் எம்.நடராசாவும் இரண்டாம் இடத்தை ஜே/05 நெடுந்தீவு மத்தி கிழக்கு கிராம அலுவலர் ப.கதிரேசனும் மூன்றாம் இடத்தை ஜே/06 நெடுந்தீவு கிழக்குக் கிராம அலுவலர் சோ. சண்முகலிங்கமும் பெற்றுள்ளனர். (ம-86)

## முத்தமிழ் விழா

வண்ணை, நவ.15

யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய முத்தமிழ் விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மன்றத் தலைவர் செல்வன் கீ.அருள்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கலைமாமணி கி.கிறிஸ்தோப்பர் ஜே.பி. கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினராக எஸ்.டொமினிக்கும், கௌரவவிருந்தினராக மி.மரியதாசம் கலந்துகொள்வர்.


கலை நிகழ்வுகளும் இதில் இடம் பெறும். (ம-160)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர்
பேராசிரியர் S.T.B. **இராஜேஸ்வரன்** அவர்களது அன்புத் தாய்
**திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், கட்டுரை ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்.
புவியியற்றுறை, **யாழ்.பல்கலைக்கழகம்.** (105966)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 31 . 08 . 1969



அஸ்தமனம் 27 . 10 . 2009

### அமரர் கந்தையா சுபாகரன்

(முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம்
வேலணை, யாழ்ப்பாணம்)
திதி: நவமி (15.11.2010)

**ஆண்டொன்று ஆனாலும் ஆறுமோ எம்துயர்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே தவமே...
ஏற்றமிகு திருமகனே!
என் ஐயா ராசா நீ பார்க்க வைத்து துடிக்க வைத்தாய்
மங்காது உன் வாழ்வு மலருமென்று நாமிருந்தோம்
மறுகணமே அருகிப் போனகதை எம் நெஞ்சில்
வெந்தணலால் சுட்டதுபோல வேதனையைக் கொடுக்குதையா!
கணவனே, தந்தையே, சோதரனே, மகனே உன் நினைவு
விழி மூடும் போதெல்லாம் ஆங்காங்கே கனவிலே தோன்றுகின்ற உன் உருவம்
அலையலையாய் மோதி இங்கு வேதனையைக் கூட்டுதையா!
ஓராண்டு சென்றாலும் ஓயாது உன் நினைவு.

96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

**மனைவி, பிள்ளைகள், தாய்,**
**தம்பி, மைத்துனர், மாமி.** (105967)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 27 - 05 - 1933



விண்ணகம் 15 - 11 - 2004

### அமரர் அந்தோனிப்பிள்ளை இராயப்பு

ஆண்டவரே! என் ஒளி: அவரே என் மீட்பு:
யாருக்கு நான் அஞ்சவேண்டும்? ஆண்டவரே!
என் உயிருக்கு அடைக்கலம்: யாருக்கு நான்
அஞ்சி நடுங்க வேண்டும். (திரு.பா- 27:1)


*அன்பு மழை பொழியும் ஆருயிரே பப்பாவே!*
*முன்னைய தவப்பயனே நாம் முன்பு செய்த நல்வினையே*
*தந்தையாய் உமைப் பெற்றோம். நானிலத்தில்*
*பெருமைதனை நாமடைந்தோம்.*
*கன்னல் மொழி அழகும் உங்கள் கள்ளமில்லா*
*சிரிப்பழகும், வந்தாரை வரவழைக்கும்*
*வள்ளல் குணமும் இன்றும் எம் இல்லத்தில்*
*இருப்பது போல் தோன்றுதையா!*
*மின்னல் போல் மறைந்தீர்கள் மிகத் துயரில் வாடுகின்றோம்*
*ஆறு ஆண்டுகள் என்ன? எத்தனை*
*ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுடன் என்றும வாழும்.*

தவசிகுளம்,
மிருசுவில். (105951)

**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**[illegible]**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 25 - 08 - 1966



மறைவு 16 - 10 - 2010

### அமரர் பரமசாமி ஜெயேந்திரன் (நந்தன)

திதி: நவமி

இன்முகம் உன்முகம் இன்சொல் உன்சொல்
புன்சிரிப்பு உன்சிரிப்பு உன்பாசம் வானதேசம்
எல்லாவற்றையும் உன் நினைவாய் எமக்குத் தந்துவிட்டு
நீமட்டும் எம் நினைவிழந்து தனியாகப் போனதேனோ!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

16.10.2010 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் பரமசாமி ஜெயேந்திரன் அவர்களுடைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் நாளை மறுதினம் (17.11.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

120 ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (105969)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதி வீதிகளின் அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள்

கிளிநொச்சி,நவ.15

சீன நாட்டின் நிதியுதவியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தியின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக முல்லைத்தீவு நகரத்தில் கொக்கிளாய் - புல்மோட்டை வீதி அபிவிருத்தியின் அங்குரார்ப்பண நிகழ்வைப்

## பஸில், பீரிஸ் அங்கு பயணம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து பி.ப. 12.45 மணியளவில் முள்ளியவளை, நெடுங்கேணி, புளியங்குளம் வீதி, பிற்பகல் 1.15 மணியளவில் ஒட்டுசுட்டான் , நெடுங்கேணி வீதி ஆகியவற்றின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் இடம்பெற்றன.

இறுதியாக பிற்பகல் 3.30 மணியளவில் ஏ-9 வீதி அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண நிகழ்வு கிளிநொச்சி நகரத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை. (ஒ-9)

# விளையாட்டு மைதானம்

பூநகரி,நவ.15

பூநகரியில் சீரான பொது விளையாட்டு மைதானம் இன்மையால் விளையாட்டு வீரர்கள் தாம் சிரமங்களுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

பொது விளையாட்டு மைதானம் இல்லாத காரணத்தால் வீரர்கள் முறையான பயிற்சிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இப்பிரதேசத்திலே மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பதக்கங்களை வென்ற வீரர்களும் உள்ளனர். இவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலேயே சாதிக்க முடிந்தது.

பொது விளையாட்டு மைதானம் ஒன்று இருப்பின் அதிகளவு வீரர்கள் பதக்கங்களை வெல்ல முடியுமெனப் பிரதேச விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (க-406)

# உப அலுவலகம் பழைய இடத்தில்

கிளிநொச்சி,நவ.15

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகம் பழைய இடத்திலேயே இயங்கி வருகின்றது.

போரின்போது இந்த அலுவலகக் கட்டடம் சேதமடைந்தது. மக்கள் மீள்குடியேறிய பின்னர் தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது.

தற்போது இந்தக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த இரண்டாம் திகதி கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளரான ஞா.தேவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. (க-110)

## அழிவிலிருந்து எழுந்து......



காத்திருக்கும் கணங்கள்: முல்லைத்தீவு அளம்பில் மகாவித்தியாலயத்தில் நடமாடும் நூலக சேவை அண்மையில் நடைபெற்றது.

# வசந்த மண்டபம்

கிளிநொச்சி,நவ.15

கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரத்தில் அமைந்துள்ள சர்வாத்த சித்தி விநாயகர் ஆலயத்தில் வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

விநாயகர் அடியார்களின் பங்களிப்புடன் இவ் வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு வருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (க-405)

# வைத்தியசாலையைப் புறக்கணிக்கும் பஸ் வண்டிகளால் கிளிநொச்சி மக்கள் சிரமங்களைச் சந்திக்கின்றனர்

கிளிநொச்சி,நவ.15

கிளிநொச்சி மாவட்டத்தினுள் உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைத் தவிர்த்து வருவது ஏனென பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்த பஸ் வண்டிகள் வைத்தியசாலையைப் புறக்கணிப்பதால் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் இருந்து வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சில பஸ்கள் மட்டுமே உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. தனியார் பஸ்களே அதிகளவில் உள்ளூர் சேவைகளில் ஈடுபடுகின்றன.

அக்கராயன், வன்னேரி, பூநகரி, முழங்காவில், ஜெயபுரம், உருத்திரபுரம், வட்டக்கச்சி, விசுவமடு, தருமபுரம், முரசுமோட்டை, கண்டாவளை போன்ற கிராமங்களில் இருந்து வரும் தனியார் பஸ்வண்டிகள் கிளிநொச்சி டிப்போவுடன் தமது பயணத்தை நிறுத்தி விடுகின்றன. இதனால் டிப்போச் சந்தியில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலை வரையான சுமார் 2 கிலோமீற்றர் வரையான தூரத்திற்கு நோயாளிகளும் நோயாளிகளைப் பார்க்கச் செல்பவர்களும் அதிக பணம் செலவழித்து முச்சக்கர வண்டிகளிலும், கால் நடையாகவும் செல்கின்றனர். இதனால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் செல்பவர்கள் உரிய நேரத்தைத் தவற விடுவதுடன் விடுதி நோயாளர்களைப் பார்வையிடச் செல்பவர்களும் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் அனைத்து பஸ்களும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்று வருவதை உரியவர்கள் உறுதிப்படுத்த முயற்சிக்க வேண்டும். கிளிநொச்சியில் இருந்து புறப்படும் போதும், கிளிநொச்சிக்கு வரும் போதும் வைத்தியசாலைக்கு இவை சென்றுவருவதன் மூலம் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு உதவ முடியும்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அதிக அக்கறை கொண்டு பொது மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என அவர்கள் கோருகின்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி அம்பாள்குளத்தில் இயங்கும் பொதுச்சந்தையையும் இவ் பஸ் வண்டிகள் புறக்கணித்துச் செல்கின்றன.

எனவே இவ்விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (க-405)




# அதிகரித்த பஸ் கட்டணங்களால் கிளிநொச்சி மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி,நவ.15

கிளிநொச்சி மாவட்டத்தில் பஸ் கட்டணங்கள் அதிகளவில் அறவிடப்படுவதால் மீள்குடியேறிய மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வழமையாகத் தூரத்தின் அடிப்படையிலேயே பஸ் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. ஆனால் உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் பஸ் கட்டணங்கள் குறிப்பாக, தனியரர் பஸ் கட்டணங்கள் ஆளுக்காள், நாளுக்கு நாள் வேறுபட்ட விதங்களில் அறவிடப்படுவதோடு அதிக தொகையும் அறவிடப்படுகின்றது.

குறிப்பாக ஏ-9 வீதியில் கிளிநொச்சியில் இருந்து ஏறத்தாள 70 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள யாழ்ப்பாணம் செல்வதற்கு 70 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை அறவிடப்படுகின்றது.

ஆனால் ஏறத்தாள 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள விசுவமடுவிற்கு ஏ-9 வீதியில் இருந்து ஏ-35 வீதியூடாகச் செல்வதற்கு 50 ரூபா அறவிடப்படுகின்றது. இது எந்த வகையில் நியாயமானது என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். உள்ளூரில் பயணிப்பவர்களில் பெரும்பாலோர் பல்வேறு துன்பங்களை அனுபவித்து மீள் குடியேறியுள்ள சாதாரண பொது மக்களே இவர்களிடம் இருந்து இவ்வாறு அதிகமான கட்டணத்தை அறவிடுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

எனவே பஸ் கட்டணத்தினைப் பொது வாக தூரத்தின் அடிப்படையில் தீர்மானித்து அறவிடுவதற்கு உரியதரப்பினர் ஏற்பாடுகளைச் செய்ய முன்வர வேண்டும் எனப் பொது மக்கள் கோருகின்றனர். (க-405)

# அதிகரித்துச் செல்லும் பொருள்களின் விலைகள்

முல்லைத்தீவு,நவ.15

மக்கள் மீள்குடியேறிய ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மரக்கறிகள் உட்படப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இங்கு வாழும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போருக்கு முன்னர் இந்தப் பகுதியில் முத்துஐயன்கட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளையொன்றை நடத்தி வந்தது. ஆனால் அது இப்போது இல்லை. ஆகவே ச.தொ.ச. விற்பனை நிலையமொன்றைத் திறந்து வைக்குமாறு இந்தப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்ற னர். இதன் மூலம் தாம் ஓரளவு பொருள்களை நியாயவிலை யில் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அவர்கள் நம்புகின் றனர்.

மரக்கறி வகைகள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுவதோடு தென்பகுதிகளிலிருந்தும் வந்து சேருகின்றன.

ஆனால் இவற்றின் விலை தான் குறையவில்லை. இதே வேளை தேங்காயின் விலை கிடுகிடுவென அதிகரித்துச் செல்கின்றது. தற்போது தேங்காயொன்று 45 ரூபாவுக்கு விற்கப் படுகின்றது. ([illegible])

# வன்னியில் மீள்குடியேறியோரில் மாற்று ஆற்றலுடையோருக்கு உதவிகள்

நாவற்குழி,நவ.15

வன்னிப் பிரதேசத்தில் மீளக் குடியேறியவர்களில் மாற்று ஆற்றலுடையோருக்கு வடமாகாண சமூகசேவைகள் திணைக்களம் யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து பல உதவித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் மாற்று ஆற்றலுடைய பிள்ளைகள், அத்தகைய தன்மையுள்ள குடும்பத் தலைவரின் பிள்ளைகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிள்ளைகள், அதிக பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் பிள்ளைகள் ஆகியோருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. [illegible] தொழில் உதவிப் பணமாக 25 ஆயிரம் ரூபாவரை வழங்கப் படுகின்றது.

குடும்பத்திற்கான உடனடித் தேவைகளை நிறைவேற்ற ஆறாயிரம் ரூபா உதவி வழங்கப்படுகின்றது.

மாற்று வலுவுள்ளோரின் பாவனையிலுள்ள உபகரணங்களைத் திருத்தியமைக்க நாலாயிரம் ரூபா வரையும் மாற்று வலுவுள்ளோருக்குத் தேவையான வசதிகளை விரிவுபடுத்த 15 ஆயிரம் ரூபா வரையான உதவியும், அவசர சிகிச்சை நிமித்தம் மாற்று வலுவுள்ளோர் சென்று வர போக்குவரத்துச் செலவாக ஆயிரத்து ஐநூறு ரூபா வரையான உதவியும் வழங்கப்படுகிறது.

வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் க.சிவகரன், மாவட்ட சமூக சேவைகள் அதிகாரிகள், பிரதேச செயலக பிரிவின் சமூக சேவை அதிகாரிகள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், சமூக சேவையாளர்கள் ஊடாக இவ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

இந்த உதவியைப் பெறத் தகுதியுள்ளோர் தமது கிராம அலுவலர்கள் ஊடாகவோ, அல்லது பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

பிரான்ஸில் பிறந்து அங்கு நல்ல வேலையில் இருக்கும் 27 வயதுடைய பெண்ணுக்கு பிரான்ஸில் வதிவு உரிமை (PR) உள்ள மணமகன் தேவை.

தொடர்பு:- 0033139826450
0033626092194( கைபேசி)
0771600507


# பெண் சாரணியர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,நவ.15

வடமாகாண பெண் சாரணிய மாணவிகளுக்கான ஒன்று கூடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையிலுள்ள சாரணிய மாணவிகளையும் (சாரணிய சீருடையில்) வழி காட்டுநர்களையும் ஒன்று கூடலுக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை சாரணியர் சங்கத்தின் வடமாகாண ஆணையாளர் கேட்டுள்ளார். (201)


## கேள்வி கோரல்

எமது சங்கத்திலுள்ள பழுதான சம்பா அரிசி கால்நடைத் தீவனத்துக்குப் பயன்படுத்தக்கூடியது. கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் அலுவலக நேரத்தில் பொருளைப் பார்வையிட்டுக் கேள்விப்பத்திரங்களை 20.11.2010ஆம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி/572820)

## தவறிவிட்டது

கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் என்னும், முகவரியுடைய கணேசமூர்த்தி பிரசாத் என்பவரது தே.அ.அ (911992167 V) திருநெல்வேலிக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

075 6231615, 077 0759897 (105964)


## உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 575
திகதி 2010/11/13

சுப்பர் இலக்கம்: 11
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 11 50 55 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 33,060,584.00 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 329 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 652 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 16,041 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 9,256 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 232,290 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 37,240 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 10,374,940.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிகட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 33,516,683.20

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம்: www.nlb.lk

## ஜாதிக சம்பத (Jathika Sampatha)

சீட்டிழுப்பு இலக்கம் - 73
திகதி - 13.11.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Z | அதிர்ஷ்ட இலக்கம்: 08 | வெற்றி இலக்கம்: 5 5 7 1 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z | 08 | 5 | 5 | 7 | 1 | 1 | ரூ. 22,545,369.00 | - |
| 1 பரிசு | | 08 | 5 | 5 | 7 | 1 | 1 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 5 | 5 | 7 | 1 | 1 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 5 | 7 | 1 | 1 | ரூ. 10,000.00 | 28 |
| 4 பரிசு | | | | | 7 | 1 | 1 | ரூ. 1,000.00 | 261 |
| 5 பரிசு | | | | | | 1 | 1 | ரூ. 50.00 | 2569 |
| 6 பரிசு | | | | | | | 1 | ரூ. 20.00 | 24700 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 5 | 5 | 7 | 1 | | ரூ. 1,000.00 | 25 |
| 8 பரிசு | | | 5 | 5 | 7 | | | ரூ. 100.00 | 251 |
| 9 பரிசு | | | 5 | 5 | | | | ரூ. 50.00 | 2593 |
| 10 பரிசு | Z | | | | | | | ரூ. 20.00 | 10068 |
| 11 பரிசு | Z | 08 | | | | | | ரூ. 100.00 | 1123 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,956,860.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 22,923.594.00




∴புபே செட்
வீட்டுக்கும் மற்றும் ஹோட்டலுக்கு
ரூபா 3950/-யிலிருந்து
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422


## சித்த வைத்திய நூல்

வாதரோகம் பாரம்பரிய சித்த வைத்திய அணுகு முறையும் அனுபவங்களும் ஓர் ஆய்வு
பாகம் - 1
சுளுக்கு என்னும் நூல்
சித்த வைத்தியர் செல்லத்துரை பரமசிவம் பிள்ளை அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.
சிறிலங்கா புத்தகசாலையில் (K.K.S.வீதி, யாழ்ப்பாணம்)
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை 360 ரூபா
(105898)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
சின்னத்தம்பி துரைசிங்கம்

தோற்றம் 05*03*1941
மறைவு 16*10*2010

கடந்த 16.10.2010ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னத்தம்பி துரைசிங்கம் அவர்களின் இறுதி நிகழ் வுகளில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபங்க ளைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது இல்லத்தில் இன்று (15.11.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கல ந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி வைரவர் கோயிலடி,
உடுவில்.
(105901)
குடும்பத்தினர்.

# சித்தராஜர் வழிவந்த சித்த வைத்தியர் குணரத்தினம் - முத்துப்பிள்ளை தம்பதியினர் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியரே.



டாக்டர் திருமதி
தெய்வானைப் பிள்ளை
பூலோகசுந்தரம்
10 ஆம் ஆண்டு நினைவில்



டாக்டர் திருமதி
சிவக்கொழுந்து கந்தசாமி
09 ஆம் மாத நினைவில்

தோற்றம் 03 . 01 . 1927
மறைவு 15 . 11 . 2000



அமரர் டாக்டர்
குணரத்தினம் செல்லத்துரை
(ஓய்வு பெற்ற அதிபர்)



டாக்டர்
பொன்னம்மா செல்லத்துரை



டாக்டர்
குணரத்தினம் சங்கரப்பிள்ளை



டாக்டர்
குணரத்தினம் திருச்செல்வம்

ஒரு தாயின் வயிற்றில் உதித்தோம் - நாங்கள்
ஒற்றுமையாய் அகிலமதில் வாழ்ந்தோம் - நாங்கள்
பார்மீது எங்கள் குலத்தொழில் தான்
பரிகார வைத்தியமும் செய்து வந்தோம்
பரமசிவன் அடியில் சென்று பத்தாண்டு தன்னில்
உம்பத்தினியாம் எம்தாயையும் அழைத்துக் கொண்டு
சீர்மேவும் எங்கள் குலப்பெருமை பேசச்
செகத்தினிலே ஒற்றுமையாய் வைத்தியமும் செய்து வந்தோம்
பேர் போன வைத்தியரே நாங்கள்- என்ற
பெருமையை மீண்டும் பேசப் பிறப்பெடுப்போம்
பிறப்பெடுப்போம் - பிறப்பெடுப்போமே

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### நீரிழிவு நோய் வராமல் சித்தவைத்தியத்தில் சித்தர்கள் கையாண்ட வைத்திய முறைகள்

உணவினை மருந்துபோல் உண்ண வேண்டும். அதற்கு திருக்குறள் கூறுகின்றது எவ்வாறெனின்

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி உணின்''

இதன் பொருள் முன்பு உண்ட உணவு சமிபாடு அடைந்ததை அறிந்து மறுவேளை உணவு உண்டவனுக்கு மருந்து என்ற ஒன்று தேவையில்லை.

''இழிவறிந்துண்பான் கண் இன்பம் போல் நிற்கும்
கழிபேர் இரையான் கண்நோய்''

அளவோடு உண்பவன் இடத்தில் இன்பம் இருப்பது போல அளவின்றி உண்பவனிடத்தில் நோய் குடியிருக்கும்.

''காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு''
''மாலையில் கடுக்காய் மண்டலம் உண்ணில்
கோலை ஊன்றி குலுங்கி நடப்பவர் குமரனாகி குலாவி நடப்பரே''

என்ற வாகடப்பாடல் குறிப்பது நீரிழிவு நோயாளிக்கும் பொருத்தமானதே. நீரிழிவு நோய் என்பது இன்சுலின் குறைபாட்டால் ஏற்படுகிறது. 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மருந்து வில்லைக ளைப் பாவித்தும் உணவுக் கட்டுப்பாட்டை கைக்கொண்டும் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். இது தவிர தியானம், உடற் பயிற்சி மூலம் நோய் வராமல் தவிர்க்கலாம்.

1. உள்ளத்தை சந்தோசமாக வைத்திருத்தல்.
2. நேரத்துக்கு ஏற்ற உணவை உண்ணுதல்.
3. சுத்தமான நீர் பருக வேண்டும்.
4. இனிப்புப் பதார்த்தம்,மாப்பதார்த்தம் ஆகியவற்றை முடிந்தவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
5. இயற்கையான உணவுகளை உண்பதால் எமது தேகத்தை பொன்போல பாதுகாத்துக் கொள்ளலாம்.

கீரைவகைகள், பொன்னாங்காணி,வல்லாரை, அறக்கீரை, முடக் கொத்தான், தூதுவளை, கறிமுருங்கை இலை, சிறு குறிஞ்சா, மொசு மொசுக்கை போன்ற கீரை வகைகளை மதியம், இரவு நேரங்களில் உண்ண வேண்டும். அத்துடன் சுண்டங்கத்தரி, வட்டுக்கத்தரி, சுண்டங்காய், முள்ளங்கி மற்றும் பருப்புவகை ஆகியவற்றைச் சேர்த்தும் சாப்பிட்டு வரவேண்டும்.

குரக்கன், சாமை, வரகு,கறுப்புசாமை, திணை போன்ற உணவுகளையும் பனங்கிழங்கு சம்பந்தப்பட்ட ஒடியற் பிட்டு, ஒடியற்கூழ் ஆகியவற்றையும் வாரத்தில் 3 முறை சாப்பிட்டு வர வேண்டும். வந்தால் இந்த நோய் வராமல் உடம்பைப் பாதுகாக்க வேண்டும்.

#### குடிபானவகை

* சீரகம் ஊறவிட்டு தண்ணீர் குடிக்க வேண்டும்.
* தோடம்பழச்சாறு * விளாம்பழச்சாறு
* மாதுளைச்சாறு * வில்வம் பழச்சாறு

இவற்றில் ஏதாவது ஒன்றை மதியம் உணவுக்குப் பின்பு மெல்ல மென்று குடிக்க வேண்டும்.

#### பழவகையில்

* பப்பாளிப்பழம்,வாழைப்பழம்,விளாம்பழம்,பனம்பழம், முந்திரிகைப்பழம் இவற்றில் ஒரு பழத்தை ஒரு நாளைக்கு ஒன்று வீதம் தவறாது உண்ண வேண்டும்.

#### உறங்கும் முறைக்கும் உற்சாக வாழ்வுக்குமான வழிகள்

* இரவு 10 மணிக்கு முன் உறங்க வேண்டும்.
* காலை 5 மணிக்கு முன் [illegible] வேண்டும்.
* எழுந்தவுடன் குளிர்ந்த நீரைப் பருக வேண்டும்.
* தேக அப்பியாசம் (உடற்பயிற்சி)செய்தல் வேண்டும்.
* தோட்டவேலை செய்தல் வேண்டும்.
* வீட்டில் வேலை செய்தல் வேண்டும்.
* தினமும் இரண்டு மைல் நடக்க வேண்டும்.
* சுத்தமான ஆடைகளை நீரில் அலசி அணிய வேண்டும்.
* கால்,கை நகம் வாரத்தில் ஒருமுறை வெட்ட வேண்டும்.
* ஆறுண நாண் கைடி கட்டுதல் வேண்டும்.
* நல்ல சுத்தமான காற்றோட்டம் உள்ள இடத்தில் இருத்தல் வேண்டும்.
* மனதுக்கு வேதனை தரும் நாடகம், படம், கதைகள் ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையில் வாழ்வாராயின் அவர்களிடமிருந்து நீரிழிவு நோய் (சலரோகம்) இரத்தக் கொதிப்பு ஆகிய நோய்கள் வராது வாழலாம் என பாம்பாட்டிச் சித்தர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

#### நீரிழிவு நோய்க்கான அறிகுறி

* தண்ணீர்த் தாகம் அதிகமாக இருத்தல்.
* அதிக தடவை சிறுநீர் வெளியேறல்.
* அதிக வியர்வை வெளியேறல்.
* எவ்வளவு உணவு உண்டாலும் எடை குறையும்.
* புண் ஏற்பட்டால் மாறாது பெருக்கும்.
* கை, கால்களில் விறைப்பு ஏற்படும்.
* நீரிழிவு நோய் உண்டாவதால் உடம்பில் எல்லா உறுப்புகளும் பாதிக்கப்படும்.

#### இதற்கு மருந்து

* மதுமேகசூரணம். * மதுமேக ஆசவம்.
* அமுது சர்க்கரை. * தேற்றாங் கொட்டை.
* லேகியம் காலை, மாலை சாப்பிட வேண்டும்.

#### இந்த நோய்க்குரிய குடிநீர் வகை

* அத்திப்பட்டை. * நாவற்பட்டை.
* ஆவாரம்பட்டை. * கொன்றைப்பட்டை.
* கடல்நாஞ்சிப்பட்டை.

இதனை 4 மடங்கு நீரில் கொதிக் வைக்க வேண்டும். ஒரு பங்குவரை வற்றாக்காய்ச்சிக் காலையில் இக்காயத்தைச் சாப்பாட்டுக்கு முன் ஒரு தேக்கரண்டி வீதம் 10 நாளைக்குக் குடித்து வந்தால் நீரிழிவு நோய் குணமடையும்.

* அமரத்துவம் அடைந்த எமது தாயார் திருமதி பொன்னம்மா செல்லத்துரை அவர்களுடன் சென்ற ஆண்டு நேரடியாக வந்து கதைத்து உறவாடியதுடன் அம்மாவின் இறப்புச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து ''அம்மையாரின் இழப்பு ஆயுள்வேத வைத்தியத்துறைக்கே பேர் இழப்பாகும்'' என (Fax) தொலைநகல் மூலம் இறுதி அஞ்சலி நிகழ்வுக்கு இரங்கல் செய்தி அனுப்பிய ஆயுள்வேத அமைச்சின் பதிவாளர் சுனில் அத்தப்பத்து அவர்களுக்கு எமது நன்றிகள்.

''உடையார் வளவு'',
சுன்னாகம்.

அமரர் செல்லத்துரை
ஞாபகார்த்த வைத்தியசாலை,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

செல்லத்துரை கிருபாரத்தினம்,
பொருளாளர்
வலிகாமம் தெற்கு
வலிகாமம் மேற்கு } ஆயுள்வேத பாதுகாப்புச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் குடியமர்ந்த குடும்பங்களை அங்கிருந்து உடனடியாக அகற்ற வேண்டும்

## தமிழரசுக் கட்சி தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.15

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் வாழ்ந்தவர்கள்-யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். அந்தப் பகுதியில் தெற்கில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த சிங்கள மக்கள் அத்துமீறி குடியேறியமையை தமிழரசுக்கட்சி கடுமையாகக் கண்டிப்பதுடன் அவர்களை அங்கிருந்து அகற்றி அங்கு முன்னர் இருந்த தமிழ் மக்களை மீள்குடியமர்த்த வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக் கூட்டம் நேற்று முன்தினம் அதன் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற போது அதில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானம் வருமாறு:-

குடாநாட்டில் அத்துமீறிய குடியேற்றமானது நுணுக்கமான முறையில் திட்டமிட்டு நடைபெறுகிறதென்பது தெளிவாகிறது.இது இந்தப் பகுதியின் இன ஐக்கியத்தைக் குழப்பும் செயல் என்பதால் அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

சிங்கள மக்கள் தாங்கள் முன்பிருந்த இடங்களை முறைப்படி நிரூபித்தால் மீளக்குடியமர்வை எவரும் எதிர்க்க முடியாது. இடம்பெயர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டு ரயில் நிலையத்தில் வந்து தங்கியுள்ள சிங்கள மக்களுக்கு அதிகரித்த நிவாரணமாக வாரம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருவதும் மீள்குடியேற்ற அமைச்சர் நேரில் வந்து பார்த்துச் செல்வதும் வருத்தத்துக்குரியதாகும்.இந்த விடயத்தில் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ ஆகியோரின் பங்களிப்பு இருப்பதையும் உணரக்கூடியதாக உள்ளது.சிங்கள மக்கள் எங்கும் குடியேறலாம் என்று கருத்துக்களைக் கூறி இவர்களது குடியேற்றத்தை மறைமுகமாக ஆதரித்து வருகின்றனர்.

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ தாராக்குளம் வீடமைப்புத் திட்டத்தில் குடியிருந்த மக்களையும், குருநகர் வீடமைப்புத் திட்டத்திலுள்ள மக்களையும் வெளியேற்ற முயற்சி எடுத்தார்.இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது நாவற்குழி திட்டம் உட்பட மூன்று குடியிருப்புத் திட்டங்களும் வீரவன்ஸவின் அமைச்சின் பொறுப்பில் உள்ளவையே. இதன் மூலம் இது மேலிடத்து தீவிர ஆதரவுடனேயே இந்த அத்து மீறல் இடம்பெற்றுள்ளமை தெளிவாகக் காட்டுகின்றது.

இங்கு சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட்டு அத்து மீறல் குடியேற்றங்களை அகற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது.(ஒ-9)

# இந்து சமுத்திரத்தில் சட்டவிரோத செயற்பாடு; தடுக்க இந்தியா- இலங்கை கூட்டு நடவடிக்கை

கொழும்பு, நவ.15

இந்து சமுத்திரத்தின் ஊடாக நடைபெறும் சட்டவிரோதச் செயற்படுகளைக் கட்டுப்படுத்துமுகமாக இந்திய - இலங்கை கடலோரக் காவல்படைகள் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

கடற்படைத் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இலங்கை, இந்தியக் கடற்படை உயரதிகாரிகள் சந்திப்பின் போது இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் இலங்கை கடலோரக் காவல்படை பணிப்பாளர் நாயகம் ரியர்அட்மிரல் தயா தர்மபிரிய உட்பட பல உயரதிகாரிகளும், இந்தியக் காவல்படை பிரதிப் பணிப்பாளர் நாயகம் வீ.எஸ்.ஆர். மூர்த்தி உட்பட பல உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை கடற்படை, சுங்கத் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புச் செயலணி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (சி)

# பரிசளிப்பு விழாக்கள்

நவாலி, நவ.15

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் சர்வதேச எழுத்தறிவூட்டல் போட்டிக்கான பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-100)

* * *

பண்டத்தரிப்பு, நவ.15

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை அதிபர் அருட்சகோதரி எ.எம்.ஜே.றீற்றா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் பிரதம விருந்தினராகவும் பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எம்.திருத்தேவி சிறப்பு விருந்தினராகவும் பண்டத்தரிப்பு பங்குதந்தை அருட்பணி எம்.ஜேசுரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம-130)

# நிலுவையிலுள்ள இறைவரிகளைச் சேகரிக்க பிரதி ஆணையாளர் ஒருவர் நியமனம்

## பிரதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு நவ-15

இறைவரித் திணைக்களத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பிரதி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகப் பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலுவையிலுள்ள வரிக் கொடுப்பனவுகள் சம்பந்தமான கோப்புக்களைத் துரிதப்படுத்தி கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வது இப்பிரதி ஆணையாளரின் முக்கிய பொறுப்பாகும்.

இறைவரித் திணைக்களத்தின் வரிநிலுவைப் பாக்கி பற்றிய விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போதே பிரதியமைச்சர் சரத் அமுனுகம மேற்கண்டவாறு கூறினார்.

வரியிறுப்பாளர் மரணமடைதல், வெளிநாட்டுக்கு நிரந்தரமாகச் செல்தல் போன்றவற்றால் வரி அறவீடு முறையாக நடப்பதில்லையெனத் தெரிவித்த அமைச்சர் இவ்விடயங்களில் தலையிட்டு தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியொருவரின் தலைமையில் குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் கூறினார். (ம-5)

# இலவச மருத்துவ முகாம்

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்கள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த மருத்துவ முகாமில் சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதுடன் தகுந்த வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், அனுபவமிக்க வைத்திய உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொள்வர். மருத்துவ முகாமில் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-204)

# 8 வருடம் ஒரே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களை இடமாற்ற விசேட குழு

கொழும்பு, நவ.15

ஒரே பாடசாலையில் எட்டு வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றுவதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சிறிசேன தெரிவித்தார்.

இதற்கென கல்வியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 9,700 பாடசாலைகளில் ஆசிரியர்களது சேவைக்காலத்தை ஆராய்ந்து அவர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளில் இக்குழு ஈடுபடும் - என அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# மாகாண சபைகளின் அதிகாரங்களில் வெட்டு; முதலமைச்சர்கள் கடும் அதிருப்தி தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக முதலமைச்சர்கள் மன்றம் கவலை வெளியிட்டுள்ளது.

மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் அண்மையில் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது குறித்து மாகாண முதலமைச்சர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மாகாண சபைகள் சுற்றுநிருபங்களை வெளியிடுவதற்கு முன்னரும் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னரும் தொடர்புடைய துறைகளைச் சார்ந்த மத்திய அமைச்சர்களிடம் அனுமதிபெற வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. இதன் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்படுமென முதலமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் முதலமைச்சர்கள் மன்றத்தின் கூட்டத்தின் போது விவாதிக்கப்படவிருப்பதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் எக்கநாயக்க கூறினார். (க)

# வெள்ளத்தால் நாடாளுமன்றுக்கு 2 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம்

கொழும்பு, நவ.15

கொழும்பில் தொடர்ச்சியாகக் கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் நாடாளுமன்றத்துக்கு ஏற்பட்ட இழப்பு இரண்டு கோடி ரூபா எனப் பூர்வாங்க மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றக் கட்டடத்தின் கீழ் தளத்தில் போடப்பட்டிருந்த நிலவிரிப்புக்கள் (காபெற்) மற்றும் அங்கிருந்த பெருள்கள் உபகரணங்கள் என்பவற்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நூலகத்திலிருந்து நூல்கள், ஆவணங்கள், மரத்தளபாடங்கள், குளிரூட்டும் சாதனங்கள் என்பவற்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றக் கட்டடத்தின் கீழ் தளத்தில் விரிக்கப்பட்டிருந்த நிலவிரிப்புக்களிலிருந்து நீரை அகற்றிச் சுத்தப்படுத்தும் பொறுப்பு தனியார் நிறுவனமொன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. நாடாளு மன்றக் கட்டடத்தின் சில பகுதிகளில் இன்னமும் நீர் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-22)

## வெற்றி.....



ஊக்குவிப்பு:-கொக்குவில் ஸ்ரீ வாராஹி சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எம்.சி. முஹம்மது அமீன் ஆனைக்கோட்டை இலவன் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கினார். (படம்: சோபா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
உங்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட நண்பர்கள் சிலரைச் சந்திப்பீர்கள். தம்பதியர் இடையே அன்நியோன்யம் அதிகரிக்கும். குறுக்கு வழிச் சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர்மையாகச் செயற்படுவீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். நாவன்மை கூடும்.



**இடபம்:**
மாமன், மைத்துனர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு செல்லலாம். குடும்பப் பெரியவர்கள் ஆசி கிடைக்கும். நினைத்தது நடக்கவேண்டும் எனப் பிரார்த்தனைகளை மேற்கொள்வீர்கள். பலனை எதிர்பாராமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வாக்கு கொடுப்பீர்கள்.



**மிதுனம்:**
நீங்கள் செய்வதே சரி என நினைத்து செயற்படும் நாள். உறவினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் பாசமாக நடந்து கொள்வர். உடல் ரீதியான உபாதைகளால் அவதிப்பட லாம். உங்களின் பெருமையான செயல்பாடுகளை பற்றி மற்றவர் களிடம் சொல்வீர்கள்.



**கடகம்:**
எதிர்பார்ப்பு ஒன்று ஏமாற்றத்தைத் தரலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று இழுபறியாகலாம். வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாக கையாள வேண்டும். கணவன் மனைவி இடையே சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். எதிலும் விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள்.



**சிங்கம்:**
கலகலப்பாக, அன்பாகப் பேசி மற்றவர்களின் மனதில் இடம் படிப்பீர்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் அணிவதில், வாங்குவதில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். பழைய அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய விடயங்களில் இறங்குவீர்கள். உறவுகளுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள்.



**கன்னி:**
புதியவர்கள் சிலரின் உதவிகள் கிடைக்கலாம். மனைவி குழந்தைகள் மீதான பாசம் அதிகரிக்கும். சாமர்த்தியமான பேச்சுக்களால் நினைத்ததைச் சாதிப்பீர்கள். சுபகாரிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அலைந்து திரிந்து முடிக்க நினைத்த வேலை ஒன்றைச் சுலபமாக தொலைபேசி மூலம் முடிப்பீர்கள். புதிய அனுபவம் பெறலாம்.



**துலாம்:**
பிள்ளைகள், குடும்ப பெரியவர்கள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். கணவன் மனைவி இடையே அன்நியோன்யம் கூடும். சிலர் உங்களிடம் கடனுதவி கேட்கலாம். உங்களிடம் பேச விரும்பும் உறவினர் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வீண் பயம் உண்டாகும்.



**விருச்சிகம்:**
பிறர் யோசனையை கேட்காமல் எதிலும் சுயசிந்தனையோடு செயல்படுவீர்கள். கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள். முக்கிய மான சில விடயங்களைப் பற்றி மனக்கோட்டை கட்டுவீர்கள். வாகனங்களில் நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். சில விடயங்களில் தவறான முடிவுகள் எடுத்து விட்டு வருந்துவீர்கள்.



**தனுசு:**
மனதில் உயர்வான சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். வெளிநாட்டு தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நண்பர்கள் சிலர் நீங்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்யலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தவறு எனத் தெரிந்தும் சில காரியங்களைச் துணிச்சலாகச் செய்வீர்கள். பெண்கள் உதவி கிடைக்கும்.



**மகரம்:**
கனவுகளால் தொல்லைகள் உண்டு. கடந்த கால சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். உறவுப் பெண்கள் வழியில் செலவுகள் ஏற்படலாம். சிலரின் வார்த்தைகளுக்கு, அன்புக் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள்.



**கும்பம்:**
எந்த விடயத்திலும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே காரியங்களை சாதிப்பீர்கள். சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். பகட்டான ஆடைகள் அணிவதில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் செலவில் உங்களின் சில ஆசைகள் பூர்த்தியாகலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். எதிர்பாராதது நடக்கலாம்.



**மீனம்:** மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளை சந்திக்கலாம். உங்களின் வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். கோபம், வேகம் தவிர்க்கவும். வேலையாள்கள் வழியில் தொல்லைகள் உருவாகலாம். அனுபவம் இல்லாத சில காரியங்களில் இறங்கி அவதிப்படலாம். பக்தி நாட்டம் கூடும்.

## அறிவூட்டல்...



கருத்தரங்கு-யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தால் அண்மையில் 'நனோ தொழில்நுட்பம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நடத்தப்பட்டது.
இந்தக் கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜே.அகிலவாசன் கருத்துரை வழங்குவதையும் பங்குபற்றிய மாணவர்களைப் படங்களில் காணலாம்.

# பணி நீக்கம் செய்யப்பட்ட கான்ஸ்டபிள் 12 மணிநேரத்தில் பிடித்தார் கைதியை

கொழும்பு, நவ.15

சிலாபம் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் தப்பியோடிய சம்பவத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவர் பணிநீக்க உத்தரவு கிடைத்த 12 மணித்தியாலங்களில் தனியே சென்று அக்கைதியைப் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

கொள்ளைச் சம்பவமொன்றில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் பிடிபட்டு மேலதிக விசாரணைகளுக்காகச் சிலாபம் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் பொலிஸாரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் பற்றி உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின் கைதிகளுக்குப் பொறுப்பாகவிருந்த இந்த கான்ஸ்டபிள் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்தப் பணி நீக்க உத்தரவு கடந்த 8 ஆம் திகதி இக்கான்ஸ்டபிளுக்கு வழங்கப்பட்டது.

அதனையடுத்து விரைந்து செயற்பட்ட இவர் தப்பியோடிய கைதியை தன்னந் தனியாகச் சென்று சிலாபம் காக்காப்பள்ளி பிரதேசத்தில் கைது செய்து சிலாபம் பொலிஸில் ஒப்படைத்துள்ளார். (ம-5)

## வால்



ஒவ்வொரு பிராணிகளும் ஒவ்வொரு விதமாக தமது வாலை உபயோகப்படுத்துகின்றன. அந்த வகையில் குரங்கு அடிக்கடி அங்கேயும் இங்கேயும் தாவிக் கொண்டு இருக்கும். அந்த சமயம் எதையாவது கெட்டி யாகப் பிடிப்பதற்கு வாலைப் பயன்படுத்தும்.

'பீவக்ஸ்' என்கிற பிராணி தட்டையாக இருக்கும் தனது வாலை தரையில் தட்டி மற்றைய தோழர்களுக்கு எதிரி வருகிறான் என்று எச்சரிக்கை காட்டும்.

முதலைக்குத் தண்ணீரில் நீந்துவதற்கு அதன் வால் உதவி செய்கிறது.

அணில் உயரமான இடங்களில் வேகமாகத் தாவி ஓடும் போது தவறிக் கீழே விழாமல் இருப்பதற்கு சமநிலைப்படுத்த அதன் வால் உதவும். கங்காரும் இவ்வாறு தான் தனது வாலைப் பயன்படுத்துகிறது.

எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக வேகமாக முயல் ஓடும் போது தாய் முயலின் வாலின் அசைவைப் பார்த்துத்தான் குட்டி முயல்கள் ஓடுகின்றன.

மயிலுக்கும் வால் இருக்கின்றது. அதைத்தான் 'தோகை' என்கிறோம்.

வால் இயற்கையாகவே எதற்கு இருக்கிறதோ அதற்கெல்லாம் அதை அர்த்தத்தோடு பயன்படுத்தப் படுகின்றது.

அனுமார் கூட இலங்கேஸ்வரனுக்கு முன்னால் தன்னுடைய தன்மானத்தைக் காட்டுவதற்கு வாலை உபயோகப்படுத்தினார்.

இருக்கும் வாலை இப்படி எல்லோரும் உபயோகப் படுத்தினார்கள். ஆனால் மனிதன் இல்லாத ஒன்றை கற்பனை செய்து கொண்டிருக்கிறான். அதாவது எல்லா இடங்களிலும் வாலை ஆட்டிக் கொண்டிருக்கிறான்.

''என்னிடம் வாலாட்டினால் ஒட்ட நறுக்கி விடுவேன் என்று எச்சரிக்கை போடுகின்றான்'' மனிதன். தான் என்கிற அகந்தைதான் இதற்குக் காரணம்.

கோ.சுவாமிநாதன்.

## பிச்சைக்காரிக்குக் கிடைத்த வைரமூக்குத்தி

லோகமான்ய பாலகங்காதர திலகருக்குப் 15 வயதில் திருமணம் நடந்தது. மனைவிபெயர் தபிபாய். பணக்காரக் குடும்பத்துப் பெண். நல்ல குணமுடையவர். இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்ந்து வந்தனர்.

அக் காலத்தில் திருடர்கள் தொல்லை அதிகரித்திருந்தது. ஆனால் காலத் திருடனுக்கு அந்தக் கால திருடனுக்கும் வித்தியாசம் உண்டு. இக்காலத் திருடன் நியாயம், அநியாயம் எதையும் பார்ப்பது கிடையாது. அந்தக் காலத் திருடனுக்கு ஒரு தார்மீக உணர்வு உண்டு. எதைக் களவெடுத்தாலும் அரிசியை மட்டும் திருடுவதில்லையாம்!

அதனால் அந்தக் காலத்துப் பெண்கள் நகைகளை பெட்டியில் வைக்காமல் அரிசியில் போட்டு வைப்பார்கள். திருடன் தான் அரிசிப்பானைப் பக்கமாகவே போவதில்லையே!

திலகரின் மனைவியும் தன்னுடைய ஆபரணங்களை ஓர் அரிசிப் பானைக்குள் போட்டு மூடி வைத்திருந்தார்.



ஒருநாள் பிச்சைக்காரப்பெண் வீடுவீடாகப் பிச்சை கேட்டுக் கொண்டே வந்தாள். "தர்மம் போடுங்க தாயே!'' என்றாள். அந்தப் பிச்சைக் காரியின் குரல் தபிபாயின் காதில் விழுந்தது. உடனே அரிசியைக் கொண்டு வந்து பாத்திரத்தில் போட்டார். போட்ட பின் அரிசிக்குள் மூக்குத்தி ' பளீச்' என்று கண்ணில் பட்டது.

அந்தப் பிச்சை அம்மாவிற்கு மனதில் ஒரே குழப்பம்! ''மூக்குத்தி போய்விட்டதே... எப்படி எடுப்பது'' என்ற குழப்பம்,

திண்ணையில் இருந்து திலகர் பார்த்துக் கொண்டு இருந்தார். பின் அவர் மனைவியைப் பார்த்து ''தபிபாய்! அது தெய்வ சம்மதம்! அவளுக்குச் சேர வேண்டிய மூக்குத்தி அவளிடம் சேர்ந்து விட்டது! பிச்சைப் பாத்திரத்தில் விழுந்த மூக்குத்தியைத் திரும்பவும் எடுக்கவேண்டாம்!'' என்றார்.

''சரி'' என்று தபிபாய் வீட்டுக்குள் சென்று விட்டார். இந்தக் காலத்தில் அந்த மாதிரியெல்லாம் நடக்குமா? பெறும் அரிசியைப் போட்டுவிட்டே நாம் விவகாரம் பண்ணியிருக்கமாட்டோமா?

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு பற்றிய பயம்... சாவதை விட மோசமானது!

**நாவின் மனிதாரந்த செயற்திட்டத்திற்கான இணையத்தளம் IRIN**

**மட்டக்களப்பு நிலைமை தொடர்பாக வெளியிட்டுள்ள ஆக்கத்தின் தமிழாக்கம்.**

விடுதலைப்புலிகளால் கடத்திச் செல்லப்படும்போது சேரனுக்கு 15 வயது. இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2009 இல் அவர் தப்பியோடினார்.

புலிகளுடன் இருப்பது அழிவுக்குச் சமனானது. நான் அவர்களின் கொள்கையைப்பற்றி ஒருபோதுமே கவனத்தில்கொள்ளவும் இல்லை. அதனை நம்பவுமில்லை. பொதுவாகவே எனக்கு வன்முறையில் விருப்பமில்லை. என்னை ஒரு பயங்கரவாதியாக அல்லது ஒரு வன்முறையாளனாகவே மற்றவர்கள் பார்த்திருப்பார்கள் என நான் நினைக்கிறேன். இது எனக்குக் கவலையளிக்கிறது.

விடுதலைப்புலிகளை இலங்கை அரசாங்கம் வெற்றிகொண்டு ஓராண்டு கடந்துவிட்ட நிலையில் சேரன் போன்ற பல முன்னாள் சிறுவர் போராளிகள் தமது வீடுகளுக்குத் திரும்பக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பலர் இன்றும் உளவியல் ரீதியான காயங்கள் மற்றும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் நிலையைப் பெற்றுக்கொள்வது போன்றவற்றால் மீண்டும் சமூகத்துடன் இணைந்துகொள்வதற்கான இன்னொரு போராட்டத்தை எதிர்கொள்வதுடன் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

'யுனிசெப்' இன் தகவல்களுக்கமைய 2002 முதல் 2007 வரையிலான காலப்பகுதியில் 6903 சிறுவர்கள் படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

1980 இல் சிறுவர்களைச் சாரணர்களாகவும் காவல் நிலைகளிலும் பயன்படுத்தியதுடன் 1990 முதல் படையிலும் சேர்த்துக்கொண்டனர் என முன்னாள் சிறுவர் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

2009 மே மாதத்தில் போர் முடிவுக்கு வந்தபோது, உளவள ஆலோசனைகள் மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்கி இந்தச் சிறுவர்கள் மீண்டும் சமூகத்துடன் இணைவதற்கும், அவர்கள் மீண்டும் பாடசாலைகளில் இணைந்துகொள்வதற்கும் அரசாங்கம் உதவியது.

சிறுவர் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கென வவுனியாவிலிருந்த இறுதி புனர்வாழ்வு நிலையத்தையும் ஏப்ரலில் அரசாங்கம் மூடிவிட்டது.

'யுனிசெப்' இன் தகவல்படி, 588 சிறு வர்கள் மீண்டும் அவர்களின் குடும்பங்களுடன் சேர்க்கப்பட்டுள்ள அதே வேளையில், ஒன்பது சிறுவர்கள் சிறுவர் காப்பகங்களிலும் 54 சிறுவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்காக பாடசாலை விடுதிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.


அனைத்து சிறுவர்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட மீள் இணைவு நடைமுறையைக் கொண்டு வருவது தொடர்பில் அரசாங்கமும் ஐ.நாவுக்கான சிறுவர் அமைப்பும் இணைந்து செயற்பட்டுவருகின்றன.

எப்போதும் போரினால் பாதிக்கப்படுபவர்களாக சிறுவர்களே இருக்கின்றனர். அவர்கள் ஒருபோதும் வன்முறையின் சூத்திரதாரிகள் அல்ல. எந்தவித பாரபட்சமுமின்றி இந்த சிறுவர்களை மீண்டும் சமூகத்துடன் இணைத்துக்கொள்ளவேண்டிய கடமை சமூகத்திற்கு உண்டு, என முன்னாள் சிறுவர்போராளிகளுடன் பணியாற்றிய சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டவாளர் ஹேமல் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நாம் அவர்களை நம்புவதற்குத் தவறினால், நாம் அவர்களை வித்தியாசமாக நடத்தினால், அவர்களது கடந்த காலங்கள் அவர்களின் மனங்களைக் குடையும் சூழ்நிலையை நாமே தோற்றுவித்துவிடுவோம். பின் நாம் செய்த அனைத்துப் புனர்வாழ்வுப் பணிகளும் பயனற்றுப் போய்விடும்.

''சிறுவர்களுக்குக் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவுக்கு சமாளிக்கும் திறன் உண்டு. அவர்களால் தமது கடந்த கால உளவியல் வடுக்கள்பற்றிய நினைவுகளையும் தடுத்து நிறுத்த முடியும்'' என ஜெயவர்த்தன கூறினார்.

''ஒப்பீட்டு ரீதியில் இயல்பு வாழ்க்கையை வாழும் முன்னாள் சிறுவர் போராளிகள் தமது சமாளிக்கும் திறனையும் சிறுவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படும்



ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றனர். காலப்போக்கில், அநேக மானவர்கள் தமது கடந்த கால பயங்கர அனுபவங்களை மறந்துவிடுவார்கள்.''

எவ்வாறிருந்தும், சிறுவர்களின் தேவைகளை எவரும் கவனத்திலெடுக்காத போர்க்கால வாழ்க்கை வடுக்கள் சிறுவர்களின் உளவியல் வளர்ச்சியில் ஈடுசெய்ய முடியாத தாக்கத்தை ஏற்படுத்தும்.

''சாதாரண சிறுவர்கள் வாழும் சூழலுக்கு முற்றிலும் நேர்மாறான சூழலில் சிறுவர் போராளிகள் வாழ்கிறார்கள். சிறுவர் போராளியாக இருப்பது ஒரு குழந்தையின் பார்வையை மாற்றியமைக் கிறது'', என்கிறார் கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உள வளத்துணையாளராகப் பணியாற் றும் மகேசன் கணேசன்.

பல முன்னாள் சிறுவர் போராளிகள் தன்னம்பிக்கையை இழந்திருப்பதால் உறவுகளில் நம்பிக்கை வைப்பதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய பிரச்சினைகளால் அவர்கள் மீண்டும் குடும்பத்துடன், பாடசாலையுடன் மற்றும் சமூகத்துடன் இணைந்து கொள்வதில் சவால்களைத் தோற்றுவிக்கிறது.

''ஆயுதக்குழுக்களுடனான அவர்களின் முன்னாள் தொடர்பு காரணமாக, நண்பர்களைத் தேடிக்கொள்வதிலும் ஓய்வு நேரங்களைக் கழிப்பதிலும் அவர்களுக்குச் சவால்களைத் தோற்றுவிக்கிறது'', என்கிறார் இலங்கையிலுள்ள ''சேவ்த சில்றன்'' அமைப்பின் சிறுவர் பாதுகாப்பு தலைமை நிதியத்தின் அதிகாரிவின் மாமா அய்.

பாதுகாப்புத் தொடர்பான சம்பவம் ஏதாவது நிகழும்போது, ''மக்கள் இந்த முன்னாள் சிறுவர் போராளிகள் தொடர்பு பட்டிருப்பார்களா என சந்தேகிப்பது அவர்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்குத் தடையாக உள்ளது. இவை யாவும் மன அழுத்தத்தையும் மேலும் ஆக்ரோச உணர்ச்சியைத் தூண்டிவிடுவதற்கும் வழிசெய்கிறது'', என அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் இவர்கள் பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதும் கடினமாகவுள்ளது.

நான்கு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இளையவளான சுசிலா 2001 இல் புலிகளால் பலவந்தமாக இணைக்கப்பட்டாள். அவள் தாக்கப்பட்டு இறுதியில் போரிடுவதற்குப் பலவந்தப் படுத்தப்பட்டாள். ஆறு ஆண்டுகளின் பின்னர் அவள் புலிகளிடமிருந்து தப்பி ஓடினாள்.

தற்போது சுசிலாவுக்கு 24 வயது. வேலை எதுவும் இன்றித் தனது குடும்பத்துடன் கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் இருக்கிறாள். அவள் போர்பற்றி மறப்பதற்கு மிகவும் பிரயத்தனப்படுகிறாள்.

''நான் இறந்துவிடுவேன் என நான் நினைத்தேன். குறிப்பாக, 2006 இல் போர் உக்கிரமடைந்து நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சிலவேளைகளில் நான் இறந்துவிடவேண்டும் என நினைத்தேன். வரப்போகும் சாவு பற்றிப் பயப்படுவது சாவதைவிட மிகவும் மோசமானது'', என்றாள் அவள்.

(நன்றி: புதினப்பலகை)

# அலுவலகங்களில் அர்ப்பணிப்புடன் பணி புரிவோர் வீட்டிலும் தெளிந்த மனத்துடன் இருப்பர்

**ஓர் உளவியல் ஆய்வின் விளக்கம்**

அலுவலகங்களில் உயர் பதவிகளிலும் அல்லது வேறு எந்தப் பதவியிலும் அர்ப்பணிப்புடன் நாளாந்தக் கடமைகளில் தெளிந்த மனோ நிலையுடன் பணியாற்றுவோர் தத்தமது அலுவலகங்களில் மாத்திரம் அல்லாது வீட்டிலும் தெளிந்த மனோ நிலையுடன் இருப்பார்கள். இப்படியானவர்கள் தத்தமது கடமைகளைப் பதற்றம், சஞ்சலம், கோபம் போன்ற எதுவிதத் தடுமாற்றக் குணங்களும் இன்றி முழுமனதுடன் செவ்வனே செய்து வருபவர்களாய் இருப்பார்கள் இவ்வாறு உளவியல் தத்துவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். காளாஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நடத்திய ஓர் ஆய்வில் இது வெளியாகியுள்ளது.

''உளவியல் பேராசிரியர் கிளைவ் புல்லாகர், உதவி-உளவியல் பேராசிரியர் சற்ரோறிஸ் கல்பேட்சன் ஆகியோருடன் மான் கற்றன் உளவியல் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவன் மௌருமில்ஸ் ஆகியோர் இணைந்து நியூ ஓலீனில் இவ் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.''

மன அழுத்தங்கள், மனக் கிலேசங்கள் எதுவும் ஏற்படாதவாறு பரஸ்பரம் பிறர் மனதில் இடம் பெற்று அல்லது பிறர் மனதைக் கவரக்கூடியதாகத் தத்தமது நாளாந்தக் கடமைகளை மேற்கொள்வோர் வீட்டிலும் தனது குடும்ப அங்கத்தினருடன் அந்நியோன்யமாகி வீட்டுச் சூழலுக்கேற்ப தமக்குரிய வீட்டுக் கடமைகளையும் சரிவர மேற்கொண்டு வருகின்றனர் என்பது உளவியல் துறைப் பேராசிரியர் சற்றேறிஸ் கல்பேட்சனின் கருத்தாகும்.

நாளாந்தக் கடமைகளில் ஈடுபட்டு வருவோரது குண இயல்புகளையும் இவர்களது வீட்டு நடவடிக்கைகளையும் கற்றறிந்து தீர்மானம் மேற்கொள்வதற்கு இப்பேராசியர் குழு இருவாரத்தைச் செலவிட்டிருந்தது. நாளாந்தக் கடமை முடியும் நேரத்தில் ஒரு ஆய்வையும் இரவு படுக்கைக்குப் போகும் முன்னர் ஒரு ஆய்வையும் இவர்கள் மேற்கொண்டிருந்தனர். ஒரு வாரத்தில் ஒவ்வொரு நாளும் இவ்விரு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இவ்விரு வாரநாள்களின் ஆரம்பத்திலும் இறுதி நாள்களிலும் தனியானதோர் ஆய்வையும் இப்பேராசிரியர்கள் மேற் கொண்டிருந்தனர்.

இதன் பெறுபேறாக வேலை அழுத்தங்கள் ஒரு திசையிலும், வீட்டு அழுத்தங்கள் இன்னோர் திசையிலும் பிரதிபலிப்பதாகப் பேராசிரியர் சற்ரோறிஸ் கல்பேட்சன் கூறியுள்ளார். அதாவது நாளாந்தம் ஒருவரது மனோநிலை பற்றிய ஆய்வுகளின் வெளிப்பாடுதான் இவை. அலுவலகக் கடமைகளின் போது மனோ நிலையில் மாறுபாடுகள் ஏற்படின் குறித்த நபர் வீடு செல்லும் போது இம் மாறுபாடுகள் அவரைப்பின் தொடர்ந்து மன உறுத்தல்களை ஏற்படுத்துவதனால் வீட்டு நடவடிக்கைகளில் குழப்ப நிலை உருவாகலாம்.

அலுவலகக் கடமைகளின் போதும் வீட்டு வேலைகளின் போதும் இவ் ஆய்விற்குட்படுத்தப் பட்டோரின் மனோ நிலை நாளுக்கு நாள் மாறுபட்டிருந்ததை

தொகுப்பு:- **காரை ஆனந்தன்.**

அவதானிக்க முடிந்ததெனவும் இப் பேராசிரியர் கூறுகின்றார்.

வாரத் தொடக்கத்தில் திங்கட்கிழமை கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் ஒருவருக்குச் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2173 திகதி 13 – 11 – 2010

ஆங்கில எழுத்திற்கும் **L**

வெற்றி எண்கள் **31 45 53 56**

போனஸ் இல: **47**

ஜக்பொட் பரிசு ரூ. **22,113,500/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 188184 | 20/- | 3,763,680/- |
| 2 இல | 13403 | 100/- | 1,340,300/- |
| 3 இல | 283 | 1,000/- | 283,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7642 | 40/- | 305,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 561 | 1,000/- | 561,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 22,113,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 8921 | 100/- | 892,100/- |
| 2 இல + போனஸ் இல | 431 | 500/- | 215,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 398 | 200/- | 79,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,994,360/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 219861 | | 9,594,360/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 302530553-4-26 |
| கொழும்பு | 302539723-8-04 |
| கம்பஹா | 302540495-8-33 |
| பொலன்னறுவை | 302536304-5-18 |
| மட்டக்களப்பு | 302529960-1-05 |
| அம்பாறை | 302527534-3-11 |
| பதுளை | 302524812-7-19 |
| இரத்தினபுரி | 302527243-0-11 |
| திருகோணமலை | 302525500-8-42 |
| மொனராகலை | 302522973-3-28 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 22,627,425/-**

சதா நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 17ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே.: 2333546/7


# குழந்தைகள் தினம்

யாழ்ப்பாணம், நவ.15

புங்குடுதீவு சர்வோதயம் புஸ்பா மணிமண்டபத்தில் நாளை செவ்வாய்க் கிழமை குழந்தைகள் தினம் இடம்பெற வுள்ளது.

தீவக வலய முன்பள்ளி உதவிப் பணிப் பாளர் எஸ்.விக்னேஸ்வரன் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகச் சர்வோதய அமைப்பாளர் செல்வி பொ.ஜமுனதேவி கலந்துகொள் வார். (ம-204-7)

# ஆங்கில தினம்

கோப்பாய்,நவ.15

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி யில் ஆங்கிலதின நிகழ்வு நாளை செவ் வாய்க்கிழமை பாடசாலை மண்டபத் தில் ஆங்கில மன்றத் தலைவர் செல்வன் எஸ்.சிவோதயன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை திருமதி தே. பரிமேலழகப்பிள்ளை கலந்துகொள் வார். (204-72)

# வேலணைப் பிரதேச செயலகத்துக்கு சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், நவ.15

வேலணைப் பிரதேச செயலர் பிரி வுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் சிறு வர் அபிவிருத்தி உத்தியோகத்தர் நிய மிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செய லக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு மதி பொ.மோகனேஸ்வரன் தெரிவித்துள் ளார். வேலணைப் பிரதேச செயலகத்தில் இதுவரை சிறுவர் அபிவிருத்தி உத்தி யோகத்தர் நியமிக் கப்படவில்லை என் பது குறிப்பிடத்தக் கது. (204-7)

# முற்றத்தில் இருந்த சைக்கிள் பட்டப்பகலில் பறிபோனது

கொழும்புத்துறை, நவ.15

யாழ்ப்பாணம் ஆனைப்பந்திப் பகுதியில் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் பட்டப் பகலில் திருட்டுப் போயுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யில் உள்ள குறிப்பிட்ட வீட்டின் முற்றத்தில் இருந்த சைக்கிளைத் திருடன் சந்தடியின்றி எடுத்துச் சென்றுள்ளான். அண்மைக்காலங் களில் யாழ்.நகரப்பகுதிகளில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித் துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-135)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 . 04 . 1928



மறைவு 30 . 10 . 2006

## அமரர் செல்லையா தியாகராஜா

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், தரம்- 1)

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே!
தங்களின் ஆத்ம சாந்திக்காக நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலை வடக்கு, மானிப்பாய். (105917)

மனைவி, மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

ஓம் ஸ்ரீசாயிராம்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி நேசமலர் சின்னத்துரை

(மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்டவர்)



மலர்வு: 17.08.1949 உதிர்வு: 15.11.2006

திதி: பூர்வபட்ச ஏகாதசி

அன்புக்கு அணிகலனாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சுமைதாங்கியாய் வாழ்ந்து
எமது இருதயத்தில்
என்றும் அணையாத் தீபமாய்ச் சுடர் வீசும்
எங்கள் தங்க அம்மாவே!
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
உங்கள் அன்பு முகத்தை
மறக்க முடியவில்லையே!
அம்மா! உங்கள் ஆத்மாசாந்தியடைய
எல்லாம்வல்ல கரைப்பிரான்
ஆதி விநாயகப் பெருமானையும்
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளையும்
வேண்டுகின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

மானிப்பாய் வீதி,
3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.
தொலைபேசி இல.: 0114010126.

(105[illegible])


# VACANCIES

1. **Course Counselors** Female
should be qualified in G.C.E (A/L) having good command in English and computer literacy.
2. **Lecturers** Male/Female (Full or part time)
Computer Hardware or Graphics or Programming or accounting and experience is an added qualification.
3. **Instructors** Male/female
Office application or Graphics or Programming or web designing or animation or accounting and previous experience is an added qualification.

**கணினிப் பட்டதாரிகள் (B.Sc or BCA or BIT) அல்லது உயர் டிப்ளோமா (HND) தகைமை உடையவர்களுக்கும் கற்பித்தலில் முன்னனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.**

தற்பொழுது வெற்றிடம் உள்ள எமது பின்வரும் கிளைகளில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்,
**யாழ்ப்பாணம், திருநெல்வேலி, மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி மற்றும் வவுனியா.**

**Apply within two weeks**

கடித உறையின் இடதுபக்க மேன்மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, பணியாற்ற விரும்பும் இடம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.

**TECHNO WORLD Studies (Pvt) Ltd**

அனுப்பவேண்டிய முகவரி
The Human Resource Manager
TECHNO WORLD Studies (Pvt) Ltd
No.344,Kasturiyar Rd,
Jaffna.



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

12.11.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2317

வெற்றி எழுத்து **R** வெற்றி எண்கள் **0 2 3 2 9 7**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | R 0 2 3 2 9 7 | ரூபா.17,195,717/= | பரிசு - |
| 1 பரிசுகள் | ■ 0 2 3 2 9 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | ■ ■ 2 3 2 9 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | ■ ■ ■ 3 2 9 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 123 |
| 4 பரிசுகள் | ■ ■ ■ ■ 2 9 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1216 |
| 5 பரிசுகள் | ■ ■ ■ ■ ■ 9 7 | ரூபா. 100/= | பரிசுகள் 12451 |
| 6 பரிசுகள் | ■ ■ ■ ■ ■ ■ 7 | ரூபா. 20/= | பரிசுகள் 123068 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | ■ 0 2 3 2 9 ■ | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | ■ 0 2 3 2 ■ ■ | ரூபா. 1,000/= | பரிசுகள் 119 |
| 9 பரிசுகள் | ■ 0 2 3 ■ ■ ■ | ரூபா. 100/= | பரிசுகள் 1245 |
| 10 பரிசுகள் | ■ 0 2 ■ ■ ■ ■ | ரூபா. 50/= | பரிசுகள் 12324 |
| 11 பரிசுகள் | R ■ ■ ■ ■ ■ ■ | ரூபா. 20/= | பரிசுகள் 49175 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 13,325,660.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000. Hotline: 2433631. மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் பாவனைக்கு உதவாத பொருள்கள்: ஆறு நபர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம்

மட்டக்களப்பு, நவ.15

மனித பாவனைக்கு உதவாத, காலாவதியான உணவுப் பொருள்களையும், உணவுச் சட்டத்துக்கு ஒவ்வாத முறையில் சுட்டுத் துண்டுகள் இடப்படாத உணவுகளையும் விற்பனைக்காக வைத்திருந்த ஆறு நபர்களுக்கு கடந்த புதன்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். ஐ.எம். றிஸ்வி தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களும், கல்முனைப் பொலிஸாரும் இணைந்து கடந்த புதன்கிழமை கல்முனை நகரத்திலுள்ள உணவகங்கள், உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது சிக்கிய மேற்படி ஆறு நபர்களுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, மனித பாவனைக்கு உதவாத, காலாவதியான உணவுப் பொருள்களும், உணவுச் சட்டத்துக்கு ஒவ்வாத முறையில் சுட்டுத் துண்டுகள் இடப்படாத உணவுகளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்தோடு, அவ்வாறான பொருள்களை எதிர்காலத்தில் விற்பனைக்காக வைத்திருக்கக் கூடாது என சம்பந்தப்பட்டோரை பொதுச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்தனர்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல். கலீல் தலைமையில் இந்நடவடிக்கை இடம்பெற்றது. இந்நடவடிக்கையில் - பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான நியாஸ் எம்.அப்பாஸ், ஏ.எம்.பாறூக், ஏ.எல்.நிஜாமுதீன் ஆகியோர் உள்ளிட்ட குழுவினரும், கல்முனை பொலிஸ் நிலையப் பரிசோதகர் வீரசேன தலைமையிலான பொலிஸ் குழுவினரும் கூட்டாக ஈடுபட்டனர். (எி)

# அமைச்சர் டி.யூ.குணசேகர மட்டு. சிறைச்சாலைக்கு வருகை

மட்டக்களப்பு, நவ.15

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.யூ.குணசேகர கடந்த வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு பயணம் செய்து அங்குள்ள ஆண், பெண் சிறைக் கைதிகளின் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைக் குழந்தையுடன் நீண்ட நாள்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதியொருவரை விடுவிப்பதற்குத் தாம் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேசி நடவடிக்கை எடுப்பார் என்றும் அமைச்சர் டி.யூ.குணசேகர அங்கு தெரிவித்தார்.

அமைச்சர் டி.யூ.குணசேகர இங்கு கருத்துத் தெரிவிக்கையில், ''நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடியைக் குறைப்பதற்கு எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மது மற்றும் போதைவஸ்துக்கு அடிமையான 4,000 கைதிகள் வெலிக்கடை உட்பட சிறைச்சாலைகளில் உள்ளனர். சிறைச்சாலைகளில் போதைவஸ்து பாவனையைத் தடுப்பதற்கு விசேட திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு விசேட மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் தரங்களை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

அத்துடன், சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் குறைபாடுகளையும் அமைச்சர் கேட்டறிந்தார்.

அமைச்சர் டி.யூ.குணசேகரவுடன் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சி.ஆர்.த. சில்வா, அமைச்சு உயர் அதிகாரிகள் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் 26 பெண் கைதிகள் உட்பட 468 சிறைக் கைதிகள் உள்ளனர். (204-21)




# நொச்சிமுனை மாணவி ரஷ்யாவில் அகாலமரணம்

மட்டக்களப்பு, நவ.15

ரஷ்யா உக்ரேன் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் கல்விகற்றுவந்த மட்டக்களப்பு நொச்சிமுனையைச் சேர்ந்த சத்தியா வாமதேவன் என்ற 22 வயதுடைய மாணவி, கடந்த சனிக்கிழமை 6ஆவது மாடியிலிருந்து விழுந்து அகாலமரணமானார். இவரது சடலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு இவரது சொந்த இடமான நொச்சிமுனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணத்தில் சந்தேகம் நிலவுகிறது என மரணமானவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். பதிவுத் திருமணம் செய்து கொண்ட சத்தியா தனது கணவருடன் ஒன்றாகவே ரஷ்ய பல்கலைக்கழகத்திலே கல்வி கற்று வந்தார்.

இந்நிலையிலேயே கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை அவர்கள் தங்கியிருந்த கட்டடத்தின் 6ஆவது மாடியிலிருந்து விழுந்து இவர் இறந்துள்ளார்.

கட்டடத்திலிருந்து தவறுதலாக விழுந்தாரா அல்லது வேறு ஏதாவது அசம்பாவிதம் இடம்பெற்றதா? என்பது பற்றிய விசாரணைகளை ரஷ்ய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மரணமாகிய சத்தியாவின் சடலம் தற்சமயம் அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எி)

# கொடுவாமடு பிரதேசத்தில் வன பூங்கா அமைக்கப்படும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொடுவாமடு பிரதேசத்தில் வனபூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு இந்த வன பூங்காவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் மரம் நடும் பிரதான வைபவம் எதிர் இன்று திங்கட்கிழமை கொடுவாமடு பிரதேசத்தில் நடைபெறவுள்ளது என்றும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 8,600 மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே ஐம்பதாயிரம் மரக்கன்றுகளை நடத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் தற்போது ஒரு லட்சத்து 8,600 மரக்கன்றுகள் நடப்படவுள்ளன என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இம்மரநடுகை இன்று திங்கட் கிழமை காலை இடம்பெறுமென அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலும் தெரிவித்தார். (204-21)

# ரூ.200 கோடி செலவில் கண்டியில் மின்திட்டம்

கண்டி,நவ. 15

கண்டி மாநகரசபையின், குப்பைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் கடந்த வியாழக்கிழமை கட்டுகஸ் தோட்டை, கொஹா கொடவில் முதலமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 200 கோடி ரூபா செலவில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கணிசமான வருமானத்தை பெறுவதோடு சூழலையும் பாதுகாக்க முடியும். மேலும் மின்சாரத்துடன் எரிவாயுவை உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு 2,000 மில்லியன் ரூபா செலவு செய்யப்படும். இதற்கு வெளிநாட்டு உதவியும் பெற்றுக்கொள்ளப்படும் - என திட்டச் செயற்பாட்டாளரான பேராதனை பல்கலைகழகப் பேராசிரியர் கலாநிதி பஸ்நாயக்க தெரிவித்தார். (எி)

# மாரடைப்பினால் மரணமடைந்தவரின் சடலம் நீதிமன்ற உத்தரவுக்கமைய தோண்டி எடுப்பு

கண்டி,நவ. 15

பொகவந்தலாவை கொக்கஸ் வோல்ட் மத்தியபிரிவு தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த சடலமொன்று ஹற்றன் நீதிவானின் உத்தரவுக்கேற்ப தோண்டி எடுக்கப்பட்டது.

குறித்த தோட்டத்தில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலையில் தொழில்புரிந்து வந்த முத்து விஜயகுமார் (வயது 33) என்பவர் கடந்த ஓகஸ்ட் 21 ஆம் திகதி நெஞ்சுவலி காரணமாக பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22 ஆம்திகதி உயிரிழந்தார்.

மார்டைப்புக் காரணமாக இவர் மரணமடைந்தார் என மரண விசாரணையில் அறிவிக்கப்பட்டது. சடலம் 23 ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்டது.

குடும்பஸ்தவரான இவருக்கு 5 வயதில் ஒரு பிள்ளை உள்ளார். மனைவி கர்ப்பிணி. இந்த நிலையில் இவரின் மரணம் தொடர்பில் சந்தேகம் தெரிவித்து ஹற்றன் பொலிஸாருக்குத் தகவலொன்று கிடைத்தது. இவ்விடயம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

சடலத்தைத் தோண்டி சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு ஹற்றன் நீதிமன்ற நீதிவான்-சதுன் விதாரண பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து கடந்த 8 ஆம் திகதி சடலம் தோண்டியெடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. பரிசோதனையில், மாரடைப்பு காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சடலத்தைப் பொறுப்பேற்ற உறவினர்கள் அதனை நாவலப்பிட்டி பொதுமயானத்தில் மீண்டும் அடக்கம் செய்தனர். (எி)

# போட்டி மனப்பாங்கில் பஸ்களைச் செலுத்தும் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

நுவரெலியா, நவ.15

பொகவந்தலாவை - ஹற்றன் வழித் தடத்தில் சேவையிலீடுபடும் அரச, தனியார் பஸ் சேவைகள் குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காலைவேளைகளில்பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு புறப்படும் இந்த பஸ்கள் ஒன்றையொன்று முந்திச் செல்லும் நோக்கில் அதிவேகத்தில் பயணிக்கின்றன.

இதன்காரணமாக விபத்துகள் ஏற்படலாம் எனப் பலரும் அஞ்சுகின்றனர்.

அத்துடன்பயணிகள்பஸ்ஸுக்குள் ஏற முன்னரே சாரதிகள் பஸ்களை எடுத்துவிடுகின்றனர். இதனால் பல மாணவர்கள் மிகவும் தாமதமாகவே பாடசாலை செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு போட்டி மனப்பாங்கில் பஸ்களைச் செலுத்தி பயணிகளுக்கு கிலியை உண்டுபண்ணும் சாரதிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் - எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எி)




# தெய்வச்சிலைகள் அன்பளிப்பு

கண்டி, நவ.15

ஜனாதிபதியின் இரண்டாம் பதவியேற்பு மற்றும் அவரது 65 ஆவது பிறந்ததினம் ஆகியவற்றை முன்னிட்டு மத்திய மாகாண ஆளுநர்,மாகாணப் பாடசாலைகளுக்கு தெய்வச் சிலைகளைப் பரிசளிக்கவுள்ளார்.

பௌத்த பாடசாலைகளுக்கு புத்தர் சிலைகளும், இந்துப் பாடசாலைகளுக்கு விநாயகர் சிலைகளும், கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு சிலுவையும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு குர்- ஆனும் வழங்கப்படவுள்ளன. இதுதொடர்பான வைபவங்கள் நாளை மறுதினம் 17 ஆம்திகதி கண்டி ஹில்வூட் கல்லூரி மண்டபத்திலும், 21 ஆம்திகதி மாத்தளையிலும் நடைபெறவுள்ளன. (எி)

# பன்விலப் பிரதேசத்திற்கான நீர் விநியோகம் நிறுத்த முடிவு

கண்டி, நவ.15

பன்வில பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில் 60 சதவீதமானோர் குடிதண்ணீர்க் கட்டணங்களை முறையாகச் செலுத்து வதில்லை.

இதனால் இப்பகுதிகளுக்கான குடிதண் ணீர் விநியோகத்தை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிரதேசசபைத் தலைவர் சரத் கீர்த்தி ரத்ன தெரிவித்தார்.

தண்ணீருக்கான கட்டணம் முறையாகச் செலுத்தப்படாததால் பிரதேசசபை பல்வேறு நிதிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

இதன்காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எி)

# தலவாக்கலை லிந்துலைப் பகுதி வீதிகளைப் புனரமைக்க ஏற்பாடு

தலவாக்கலை – லிந்துலைப் பகுதியிலுள்ள மெரயா, எல்ஜின், போபத்தலாவ, டெஸ்போர்ட் பாதைகளைப் புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்படும் என நுவரெலியா பிரதேசசபையின் உபதலைவரும், இ. தொ. கா. உதவிச் செயலாளருமான ஏ.பி. சக்திவேல் தெரிவித்தார்.

நுவரெலியா பரிசுத்த திருத்துவக் கல்லூரியில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில், பாதைகளின் புனரமைப்புக் குறித்து தெரிவிக்கப்பட்டது. அப்போது இதற்கான நிதியை ஒதுக்கித் தருமாறு அமைச்சர் அதிகாரிகளைப் பணித்தார்.

புனரமைப்பு வேலைகளை டிசம்பருக்குள் நிறைவுசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, லிந்துல-டயகம, டிக்கோயா-போஸ்ட், மஸ்கெலியா- கார்மோட் பாதைகளும் புனரமைக்கப்படும் எனத் தெரிவித்தார். இதில் அமைச்சர் ஆறுமுகன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1242 சிகப்பு

மேடம்

06 19 47 50 12-11-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 3,045,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 219,625 | 20/- | 4,392,500/- |
| 2 இலக்கங்கள் | 20,142 | 40/- | 805,680/- |
| 1 இல. + லக்கினம் | 19,951 | 60/- | 1,197,060/- |
| 2 இல. + லக்கினம் | 1,807 | 200/- | 361,400/- |
| 3 இலக்கங்கள் | 532 | 1000/- | 532,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,045,050/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 7,978,640/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 586 | | 492,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 262,693 | | 8,470,640/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 4,025,750/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு

05 29 33 40 ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 584 | 500/- | 292,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 586 | | 492,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-


## அலுவலகங்களில் அர்ப்பணிப்புடன் பணி.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில மனக்குழப்பங்கள் உருவாகியது எனக் கொள்வோம். அவ்வாறாயின் செவ்வாய்க்கிழமையும் இவர் மாறுபட்ட மனோ நிலையிலேயேதான் இருப்பார் எனக் கூறமுடியாது.

### வேலையில் மட்டும் மூழ்கிக்கிடப்போர்

குறித்ததோர் தினத்தில் யாருக்காவது மனக்குழப்பம் ஏற்பட்டு; அலுவலகத்தில் இருந்து வீடுவரை இக் குழப்பம் அவரைத் தொடந்து சென்றிருந்தாலும் கூட, அது அன்றைய ஒரு நாள் நிகழ்வே எந்நேரமும் வேலை-வேலையென இசைவாக்க முற்று வேலையில் மாத்திரம் மனதைச் செலுத்தி வருவோர் வீட்டில் திருப்தியான சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது. இப்பழக்கம், வீட்டில் பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கும்.

தொழில் வழங்குநர்,தொழில் புரிவோருக்கிடையே சுமுகநிலை வேண்டும். அவ்வாறாயின் இத்தகைய பிரச்சினைகளை ஓரளவு சுலபமாகத் தீர்த்துக் கொள்ளமுடியும். பேராசிரியரின் கூற்றுப்படி தொழில் வழங்கும் நிறுவனங்கள் இது போன்ற சிக்கலான விடயங்களைப் பொது நோக்கில் ஆய்வு செய்து தொழிலாளர்களின் மேலதிக வேலைகளை உரியவாறு ஒழுங்குபடுத்தி அவர்களது சுய வாழ்க்கையில் இத்தகைய பிரச்சினைகள் உருவாகாது வழி சமைப்பார்களாயின் நாளாந்தம் அலுவலகங்களில் ஏற்படக்கூடிய அழுத்தங்களையும் நிவர்த்தி செய்து கொள்ளமுடியும். வேலைப் பழுவைக் கூட்டி அவ்வப்போதைய நிலமைகளுக்கேற்ப ஊழியரைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நினைப்பதால் ஊழியர் மத்தியில் மனக் குழப்பங்கள் உருவாகும். இவ்வாறு பேராசிரியர் கல்பேட்சன் தனது ஆய்வின் பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்றார்.

இது பற்றி ஏச்.மாசி,பெஞ்ஜமின்போன்ற பல்வேறு உளவியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கையில் தொழிலாளரின் நலன்களைப் பாதிக்காதவாறு வேலைகளுக்குரிய விதி முறைகளை ஒழுங்குபடுத்திப் பிரயோகிக்க வேண்டிய பொறுப்பு நிறுவனங்களையே சாரும் எனக் கூறியுள்ளதுடன் மனித உரிமைக் கழகங்கள் மற்றும் இத்துறை சார் உயர்கற்கை நிறுவனங்கள் இவ் விடயத்தில் அக்கறை காட்டி அவ்வப்போது கருத்துக் களை வெளியிடினும் இவர்களின் கூற்றுக்களில் தெளிவில்லை என்றனர்.


# பிறந்ததின வாழ்த்து

## மணிவிழா நாயகன் திரு.பா. வெற்றிவேல்

(அதிபர்,S.L.P.S.- I, யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை)



இன்று (15.11.2010)திங்கட்கிழமை மணிவிழாக்காணும் எமது மாமா வெற்றிவேல், அத்தை ரதி தம்பதியினரை ஆலடிஐங்கரன் துணையுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

சாரதா, அல்வாய். (104480)

அன்பு மருமக்கள்: வி.செந்தூரன், வி.குமரன், வி.துவாரகன்



# பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையில் 2010 தரம் ஐந்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்ற

**செல்வன் சந்திரமோகன் சங்கமன்**

அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற

1.செல்வன் வி.திவாகரன்
2.செல்வன் ந.கவிதரன்
3.செல்வி ச.துஷானி
4.செல்வி கி.டிலக்சிகா
5.செல்வி வ.கௌசிகா
6.செல்வி ஜீ.நிவேதி
7.செல்வி சோ.சானுஜா

ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**பாடசாலைச் சமூகம்**

யா/புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.

(சி/572513)


# பொற்காலநாயகன்

## யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையின் அதிபர் (25.09.1993 - 14.11.2010)

## திருமிகு.பாலசிங்கம் வெற்றிவேல் அவர்களின்

# பெரும்பணிநயப்பு

### பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்த அதிபர்



இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த திரு.பாலசிங்கம் வெற்றிவேல் அவர்கள் ஒரு தசாப்தத்திற்கு மேலாக யா/கொற்றவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

மென்மையான போக்கும் கடினமான சொற்கள் எதுவுமே தெரியாத அதிபர் அவர்கள் ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியராகவும் கடமையாற்றியவர். அதிபருக்கான ஒழுக்கக் கோவைகளுக்கு மேலாக சிறப்பான பண்புகளையுடைய இவ் அதிபரின் காலத்தில் இப்பாடசாலை உரிய பௌதீக வளங்களைப் பெற்றது. சிறிய மண்டபத்துடன் இருந்த இப்பாடசாலையில் கணினி அறை, நூலகம் போன்ற நவீன கற்றல் வளத்தைப் பெற்றதில் அதிபரின் பங்கு அளப்பரியது. அவர் ஓய்வு காலம் சிறப்புற இருக்கவும் தொடர்ந்தும் கல்வித் தொண்டாற்றவும் எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக்
கல்விப்பணிப்பாளர்,யாழ்.மாவட்டம்.

### கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் அவர்கள் சிறப்பான அதிபர்களுள் ஒருவராகக் காணப்படுகிறார். பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அதீத அக்கறை செலுத்தி அப்பாடசாலையின் பெயரினை மாகாண, தேசியமட்டத்திற்கு உயர்த்திய பெருமைக்குரியவர்.

பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளிலும், எமது வலயக்கல்வி நிர்வாக நடவடிக்கைளிலும், சமூகத்தன்மையைப் பேணி அன்பினால் பல அரிய சாதனைகள் படைத்த அதிபர் இவரைப் போல் வேறுயாருமில்லையென்றே கூறலாம். நாம் இவரை நட்புடன் வெற்றி என்று அழைப்பதுண்டு. ஆனால் இவரோ உண்மையிலே வெற்றிபெற்ற வெற்றி அதிபராகக் காணப்படுகின்றார். இவரைப் பற்றிக் கூறுவதானால் நிறைய விடயங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.... வெற்றி அதிபர், என்றும் வெற்றியாளனாக வாழ வாழ்த்துகிறேன்.

பா.இரகுநாதன்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை



### இலங்கை அதிபர் சேவை வகுப்பு -I

### கல்விகற்ற பாடசாலைகள்

யா/தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்
ஆசிரிய சேவை -01.12.1975-31.05.1991
அதிபர் சேவை - 01.06.1991-14.11.2010

### பாடசாலைச் சமூகத்தின் வாழ்த்துச் செய்தி

வகை -III பாடசாலையாக இருந்து எமது பாடசாலை வகை-II பாடசாலையாக தரம் உயர்ந்த, கண்ணைக்கவரும் வகையில் பௌதீகவளத்தால் எமது பாடசாலை பொலிவடைந்ததும், கற்றல் நடவடிக்கைகளிலும் மெய்வன்மைப் போட்டிகளிலும் எண்ணத்தக்க வகையில் எமது பாடசாலை பெயர் பொறித்ததும், கல்விசார், ஊழியர்களாலும் கல்விசார ஊழியர்களாலும் எமது பாடசாலை சிறப்புற்றதும் எமது அதிபர் உயர்திரு.பா.வெற்றிவேல் அவர் களின் காலத்திலேயாகும். அவரது அரசபணி முழுமைபெறும் இந்நாளில் 17 வருடங்கள் அவர் எமக்கு ஆற்றிய அரும்பணிகளினை நினைத்து நயந்து மகிழ்வடையும் இவ்வேளை எமது பாடசாலையின் பொற்கால அதிபராக அவரை அறிவிப்பதில் அக மகிழ்வடைகின்றோம். வார்த்தைகளினால் விவரிக்க முடியாத எல்லையில்லாச் சேவையாளன் எல்லாப் புகழும் பெற்று என்றென்றும் வாழ்கவே.

பாடசாலைச் சமூகம்
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை
வல்வெட்டித்துறை.

### வெற்றிக்கு வழி காட்டிய முதல்வர்



ஆசிரியராக கனிப்புலத்திலே தடம் பதித்து, அதிபராக பதவியுயர்ந்து, அகவை அறுபதை நிறைவு செய்யும் பா. வெற்றிவேல் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

வெற்றிவேல் அவர்கள் ஏழை மாணவர்கள் மிகுந்து வாழும் கொற்றாவத்தையில் பல்லாண்டுகள் அதிபராகப் பணியாற்றிப் பெருமை சேர்த்தவர். கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் பாடசாலை அவரது பதவிக்காலத்தில் பௌதீகவள விருத்தியில், பரீட்சை அடைவுகளில் பல படிகளில் உயர்வடைந்தது. அமைதியும், அடக்கமும், பண்பும் அவரது அணிகலன்கள். இதுவே அவரது வெற்றியின் இரகசியம். வெற்றிவேல் அவர்கள் வெற்றிக்கான பாதையை எமக்கு காட்டியுள்ளார். அவரது பாதை அதிபர்களுக்கான நல்லதோர் காட்டி. வெற்றிவேல் அவர்கள் வாழ்க்கைப் பாதையில் மேலும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

வ.செல்வராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.

### எங்கள் அதிபர்




அல்வாயூர் தந்த எங்கள் அதிபர் பா.வெற்றிவேல் அவர்கள் எமது பாடசாலையின் வரலாற்றிலேயே ஒரு மைல்கல் எனத் திகழ்ந்தார். ஆசிரியர்கள், மாணவர்கள் உடன் மட்டுமன்றி பெற்றோருடனும் அன்பாகப் பழகும் பண்பாளன். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் தோளோடு தோள் கொடுத்து பல்துறை வளர்ச்சிக்கு வித்திட்டு ஓர் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். விளையாட்டுத்துறை, கல்வி கலாசார நிகழ்வுகளில் மாணவர்கள் மாவட்ட, மாகாண மட்டங்கள் வரை நின்றுவிடாது தேசியமட்டம் வரை உயர்வதற்கு உறுதுணையாக நின்ற உத்தமன். ஆரம்பத்தில் தரம் 8வரை இருந்த எமது பாடசாலை தரம் 11வரை உயர்வு பெறுவதற்கு, கல்வித் திணைக்களத்தினருடனான இவரது இடைவிடாத வேண்டுதல் காரணமாக அமைந்தது, மேலும், எமது மாணவர்களின் அத்தியாவசியப் பிரச்சினையாக இருந்த குடிதண்ணீர்த் தேவையை பொருட் நிறுவனத்தின் உதவியுடன் நிவர்த்தி செய்த பெருமையும் இவரையே சாரும். இவை தவிர, கிராமப்புற மாணவர்களுக்குக் கிடைக்குமோ என ஏங்கியிருந்த கணினிக் கல்வியைக் கூட வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர்களினதும் நலன் விரும்பிகளினதும் ஒன்றுபட்ட உழைப்பினால் ஆரம்பிப்பதற்கு அத்திபாரம் இட்டதோடு, ஒரு நலன்புரி நிதியத்தையும் உருவாக்கிய பெருந்தகையும் எமது அதிபரே. இவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் இவரது ஓய்வுகாலம் ஒளி மயமானதாக மிளிர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

திரு.மு.சின்னராசா,
[செயலாளர், பாட.அபி.சங்கம்], யா.கொற்றாவத்தை
அ.மி.த.க.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில்லா இறைபணியில் நல்லை ஆதீனம்



எல்லையில்லா இறைபணி ஆற்றும் நல்லை திருஞான சீம்பந்தர் ஆதீனம்.

சிவபூமி என்று அழைக்கப்படும் ஈழநாட்டின் வட பகுதியில் யாழ்ப்பாணத்தின் நல்லூர் சிறந்த புனித நகராகத் திகழ்கிறது. சைவமும் தமிழும் இருகண்ணெனப் போற்றி அருந் தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பிறந்த புண்ணிய நகர் நல்லூர் பதியே.

வேண்டுவோருக்கு அருள்பாலிக்கும் வேலவன் வள்ளி தெய்வயானி சமேதரராக வீற்றிருந்து அகிலம் முழுவதும் தெய்வீக மணம்பரப்பிவரும் ஆலயம் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பையும் கொண்டு தமிழரின் அரசோச்சிய தலைநகராகவும் நல்லூர் விளங்குகிறது.

இத்தகைய சீருஞ்சிறப்பும் மிக்க பகுதியில் சமயத்திற்கும், தமிழுக்கும், கலை, பண்பாட்டு உயர்வுக்கும் தொண்டாற்றிவரும் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம் அமைந்துள்ளது.

இந்த ஆதீனத்தை நிறுவியவர் மணிஐயர் என்று மக்களால் மதிப்புடன் அழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமி களாகும்.

நல்லூர் கோயில் வீதியில் திருமதி பாக்கியம் என் பவர் மனமுவந்து கொடுத்த இல்லத்தில் 1966 ஆம் ஆண்டு ஆவணி 6ஆம் நாள் முதன் முதலில் நல்லை ஆதீனம் ஆரம்பிக்கப்பட்டு அறப்பணிகளில் ஈடுபட்டு வந்தது.
சைவப்பெரியார்களும், தமிழறிஞர்களும், பக்தர்களும் பேராதரவு கொடுத்து ஆதீனப் பணி களுக்கு உற்சாக மூட்டி வந்தனர்.

சைவத்தின் காவலனாக விளங்கிவரும் ஞானக் குழந்தையாக மூன்று வயதிலேயே தேவாரம் பாடி இறைவனை வழிபட்ட பெருமையுடைய திருஞான சம்பந்தப் பெருமானின் பெயர் கொண்ட இந்த ஆதீனம் இளம் சிறார்களுக்கான தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள், சைவ சமயபாட வகுப்புக்கள், வெள்ளிக் கிழமை தோறும் வீதி பஜனைகள் என்பவற்றை நடத்தி வந்ததோடு, சமய தீட்சைகளையும் வழங்கி வருகின்றது.
இளைய தலைமுறையினரை சமய அறிவிலும், சமய அனுஷ்டானங்களிலும் வளர்த்து ஆசார சீலர்களாக உருவாக்குவதில் பெரும்பாங்காற்றி வருகின்றது.

சேவையும், தொண்டர்களின் தொகையும் தொடர்பாடல்களும் பெருகியதையடுத்து விசாலமான இடத்தின் தேவை உணரப்பட்டது. புத்தூர் மழவரா யர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தற்போதைய இடத்திற்கு 1972 இல் ஆதீனம் மாற்றப்பட்டது.

நல்லை ஆதீன ஸ்தாபகரும் முதலாவது குரு மஹா சந்நிதானமுமாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் எண்ணத்தில் உதித்ததுதான் இந்த நல்லை ஆதீனம்.

சைவநெறியை மதித்து வாழ்ந்த செல்லையா ஐயருக்கும் கனகாம்பாள் அம்மையாருக்கும் புத்திரனாக 08.02.1918 இல் வண்ணை சிவன் ஆலயப் பகுதியில் பிறந்தார் சிவசுப்பிரமணிய ஐயர். கல்வியையும் ஆகம விதிமுறைகளையும் கற்றுணர்ந்து ஆன்மீகப் பற்றுடையவரானார். சங்கீதத்திலும் நடிப்பிலும் தேர்ச்சி பெற்ற கலைஞனாக விளங்கினார். பாரிஜாத புஷ்பகரணம், கிருஷ்ணார்ஜுனா, அல்லி அர் ஜுனா, சகுந்தலை முதலிய நாடங்களை மேடை யேற்றினார்.

கதாப்பிரசங்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் சங்கரசுப்பையர் சுவாமிகளின் ஆசீயுடன் 18ஆவது வயதிலேயே கதாப்பிரசங்கம் செய்ய ஆரம் பித்து இறைவனின் புகழை, அருளை, மக்களுக்கு அரங்கு களில் எடுத்தியம்பினார். இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியாவிலும் கூட பல கதாப் பிரசங்களை நிகழ்த்தியுள்ளார். ''மணிபாகவதர்'' என்று அழைக்கப்படும் இவரின் கணீரென்ற குரலும் அபிநயங்களுடன் கதை சொல்லும் தன்மையும் பக்தர்களை இவர்பால் ஈர்த்தது.

தொண்டையினாலே சமயத் தொண்டாற்றி 45 வருடங்களில் 50 ஆயிரம் பிரசங்கங்களை நிகழ்த்திப் பெருமை பெற்ற நல்லை ஆதீன ஸ்தாபகர் 1966ஆம் ஆண்டு மதுரை ஆதீனத்திற்குச் சென்றவேளை அவரது எண்ணத்தில் ஆதீனம் அமைக்கும் அவா உருவானது.

சைவ மக்கள் சைவத்தின் மேன்மையை உணர வேண்டும். நிலையான இறையின்பத்தை மக்கள் சுவைக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு நல்லூர் முருகனின் சூழலில் ஓர் ஆதீனத்தை நிறுவத்திடங்கொண்டார். முருகப் பெருமானிடம் விடை கேட்டபோது ''நம் பக்தனே'' நல்லையில் தொல்லை நீங்க ஆதீனம் அமைக்கும் என கன வில் கட்டளையிட்டார்.

மதுரை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞான சம்பந்த பராமாசார்ய சுவாமிகளிடம் சென்று இல்லறம் நீங்கித் துறவறம் நாடுவதாகத் தெரிவித்தார். மணிஐயரின் பக்குவ நிலையையும் சமயப்பற்றையும் உணர்ந்து 1966 ஆம் ஆண்டு




ஆடிக்கார்த்திகை யில் காவியுடை தரித்து உருத்திராட்சம் அணிந்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதர் தம்பிரான் சுவாமிகள் என்ற நாமம் சூட்டி துறவி யாக்கினார்.

துறவறத்தைக் கைக்கொண்டு தம் பிரான் சுவாமியாக மாறி மந்திரோபதேசம் பெற்று ஆதீன குருமஹா சந்நிதானமாக இலங்கை வந்த மணிஐயர் நல்லூர் மேற்குவீதியில் நல்லை ஆதீனத்தை ஆரம்பித்தார். அறப்பணித் தொண்டுகளில் தம்மை அர்ப்பணித்தார். பின்னர் புத்தூர் மழவராயருக்குச் சொந்தமான நாற்சார வடி வில் அமைந்த தற்போதைய ஆதீனவளாகத்தில் நிரந் தரமாக நல்லை ஆதீனம் தன் சேவைகளை ஆற்றி வந்தது.

ஆதீன குருமுதல்வரின் போதனைகளாலும் கதாப்பிரசங்க அறிவுரைகளாலும் மக்கள் இறைவன் பால் ஈர்ப்பதில் ஆதீனம் முன்னோடியாக விளங்கியது. நல்லை ஆதீன சுவாமிகள் நல்லூர் மஹோற்சவ காலத்தில் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தலிலே தினமும் சம்பூர்ண கம்பராமாயணம், மகாபாரதம், திருவிளை யாடற்புராணம், பெரியபுராணம் போன்ற சங்கீதகதாப் பிரசங்கங்களை நிகழ்த்துவார். இரவு 10.30 மணிக்குப் பின்னரும் கூ[illegible] கூட்டுப்பிரார்த்தனையில் [illegible] வரைக்கும் அடியார்கள் அமர்ந்திருந்து ஆர் வமுடன் செவிமடுத்துச் செல்வது அன்றைய வழக்கமாகும்.

சைவமக்கள் சைவநெறி தவறாது ஒழுக்க நல்வழி காட்டிய ஆதீன முதல்வர் சாந்தமும் இறையருளும் ஆன்மீகப்பலமும் நிறையப்பெற்று இறைதொண்டனாவார். ஒருமுறை இந்தியாவில் திருவனந்தபுரத்தில் ரயிலில் செல்லவிருந்த சமயம் தவிர்க்க முடியாத காரணத்தால் ரயில் பயணத்தை இரத்துச் செய்துவிட்டுக்காரில் பயணத்தை மேற்கொண்டார். அந்த ரயில் விபத்துக் குள்ளாகிப் பலர் மரணித்ததோடு இவர் செல்லவிருந்த பெட்டியில் பயணித்தவர்கள் எவரும் தப்பவில்லை. அற்புதமாக இறைவன் இவரைக் காப்பாற்றினார்.

நல்லை ஆதீன குருவின் பிரதம சீடர்களாகவும் ஆதீ னப்பணிகளைக் கவனிக்கவும், சமய வகுப்புகளை நடத் துவதிலும் பலர் பங்கேற்றனர். அமரர் வீ.எஸ். கணேச சுந்தரம், பொன்னம் பலம் ஆசிரியார், சிவ.வை.நித் தியானந்த சர்மா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமுதல் வராகிய மணிஐயர் தாம் இருக்கும் போதே தற்போதைய குருமுதல்வரை இளவரசராக நியமனம் செய்து வைத்தார்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்''என சமயம் வளர்த்த சுவாமிகள் ஒரு நாள் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் கதாப் பிரசங்கம் நிகழ்த்திவிட்டுத் திரும்பும் போது உடல் நிலை பாதிக்கப்பட்டார். இதுவே அவரது கடைசி இறைபுகழ்ப்பணியானது. 10.04.1981 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை பூதவுடல் நீத்து புகழுடல் பெற்று சிவபதம் சென்றார்.

ஆதீன வளாகத்திலே அவரது உடல் சமாதி யிடப்பட்டு அவ்விடத்தில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கே சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூசை வழிபாடுகளும், ஆராதனைகளும் நடைபெற்றுவருகின்றன.

மணிஐயர் சமயப்பணிகளில் 10 வயது முதல் தம்மை அர்ப்பணித்து உழைத்த இளவரசரான, இன்றைய ஆதீன முதல்வரான இரண்டாவது குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆன்மீகப் பணிகள் தொய்ந்துவிடாது தொண்டாற்றி வருகின்றார். பார்ப்போரை வணங்கவைக்கும் தோற்றமுடைய சுவாமிகள் பணிவு, அடக்கம், பொறுமை, அருளின் சின்னமாக விளங்கி வருகின்றார்.

ஆதீனத்தின் சமயக்கல்விச் [illegible] [illegible],சொற்பொழிவுகளை நிகழ்த்துவது மட்டுமல்லாது பிரதேச சமூக அபிவிருந்தி அமர்வு களில் பங்கேற்று ஆசிகளையும் கருத்துக்களையும் எடுத்தியம்பி வருவதோடு சைவ சமயத்தின் பிரதிநிதியாக பல தரப்பினராலும் நோக்கப்படுகிறார்.

சமயப்பெரியோர்கள், புத்திஜீவிகள் அடக்கிய நிர்வாக அமைப்பின் கீழ் இயங்கும் நல்லை ஆதீனத் தில் 2000 ஆம் ஆண்டில் ஸ்தாபகரான மணிஐயரின் சிலை திறந்து வைக்கப்பட்டது. பழமையான கட் டடம் அரச மற்றும் அபிமானிகளின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டில் நல்லை ஆதீனம், கலாமண்டபம் என்பன புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டன.

மதுரை ஆதீனத்துடன் சமயம் சார்ந்த தொடர்புகளைப் பேணிவரும் எமது ஆதீனத்தில் இன்றைய இளைய தலைமுறையினர் ஆன்மீக வழியிலான பயிற்சிகள், வகுப்புகளில் ஈடுபடுவது குறைந்து வருவது கவலையளிக்கிறது. இறைவன் பால் பிள்ளைகளை வழிநடத்துவதில் பெற்றோர் ஆர்வம் காட்ட வேண்டும். உதவிகள் தேவைப்படுவோருக்கு எம்மாலான சேவைகளை செய்து வருகிறோம். சமய அமிமானிகள் மற்றும் வசதிபடைத்தோர் ஆதீனத் தின் எதிர்கால வளர்ச்சிக்குத் தாராள உதவிகளைச் செய்து இறைவனுக்கு உரிய பணியாக அமையும் என நம்புகிறேன் என தற்போதைய ஆதீன

**எஸ். யேசுதாஸ்**

முதல்வர் தெரிவித்தார்.

அதேவேளை, நவநாகரிக காலச்சூழல் இந்து சமய துறவற சீடத்துவத்திற்கு பெரும் சவாலாக அமைந் துள்ளது. தொடர்ந்தும் ஆதீனத்தை வழிநடத்தக் கூடிய பக்குவ நிலையுடைய இளைய சீடர்களை ஆதீனத்திற்கு தந்தருள வேண்டுமென்று முருகப்பெருமானை வேண்டி நிற்கிறேன். என மன ஆதங் கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையிலுள்ள ஒரே ஒரு ஆதீனமாக விளங்கும் நல்லை ஆதீனம் இந்துக்கள், சைவசமயிகள், சமயம்சார் அமைப்புக்களின் மணிமுடியாக மதிப்புடனும் கௌரவத்துடனும் நோக்கப்படுகின்றது. இந் துக்களினதும் தமிழர்களினதும் இருப்பை உலகுக்கு உணர்த்தி வருகின்றது. ''என்றும் வேண்டும் இன்ப அன்பு'' என்பதற்கிணங்க குருமஹா சந்நிதானத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கக் கைகொடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்


நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்

திரு.வி.தங்கத்துரை (பகுதி I)
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்-ஜெயந்திபுரம்
திருமதி கி.சண்முகநாதன் (பகுதி II)
மகாஜனாக் கல்லூரி, மட்டக்களப்பு.
திரு.மு.இராசரட்ணம், (பகுதி III)
13, வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.


G.C.E.(O/L)
வலம்-5
வெளியீடு-1
மட்டக்களப்பு

## தமிழ்மொழி - I

நேரம்: 1 மணித்தியாலம்

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப் பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. ''மருப்பூசி யாக மறங்கனல் வேல் மன்னர்'' - மருப்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
1) எதிர்ப்பு 2) சிறப்பு. 3) கொம்பு. 4) துதிக்கை.

02. ''நஞ்சுமஞ் சும்வெற்றி வேலோ வுனது நயங்களே '' - நயனம் என்பதன் ஒத்தகருத்துச்சொல்,
1) இடை 2) கண். 3) நெற்றி. 4) புருவம்.

03. ''கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிக எளிது'' - எளிது என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
1) சிறிது. 2) நெடிது, 3) தெளிவு. 4) அரிது.

04. ''கவலைப்படாதே உன் பூவிற்கு ஒருநாளும் குறைவில்லை '' - குறைவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
1) பெரிது. 2) நிறைவு. 3) விரிவு. 4) துணிவு.

05. ''மென்முலையா ராச்சியர் கை வந்ததற்பின்'' ஆச்சி (ஆய்ச்சி) என்பதன் எதிர்ப்பாற்சொல்,
1) ஆயன். 2) ஆடவன். 3) குயவன். 4) வேடன்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

06. ஒரு நாட்டினது பொருள்களுக்கும் சேவைகளுக்கும் வெளிநாட்டிலுள்ள பெறுமானம்.
1) பண்டமாற்று. 2) பணவீக்கம்.
3) நாணயமாற்று. 4) பெறுமதி.

07. ஒரு நூலிலே விடுபட்ட சில விடயங்கள், அந்நூலில் பிற்பகுதியிலே புறம்பாகச் சேர்க்கப்படும் பகுதி,
1) அணிந்துரை. 2) அனுபந்தம். 3) பிழைதிருத்தம். 4) அனுவாதம்.

08. சபையிலே சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறொரு வகையிலே கூறுவது,
1) அறம்பாடுதல். 2) நிறைமொழி.
3) புனைந்துரை. 4) இடக்கரடக்கல்.

09. கலகங்களை விரைவாக அடக்கி, அமைதியை ஏற்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட படைப் பிரிவு,
1) தூசிப்படை. 2) அதிரடிப்படை.
3) இராணுவப்படை. 4) இரகசியப்படை.

10. எழுத்தில் அல்லது பேச்சில் வெளிப்படையாகவன்றி மறைந்து நிற்கும் பொருள்.
1) இலக்கணை. 2) சிலேடை. 3) அங்கதம். 4) மடக்கு.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் இடைவெளியை நிரப்புவதற்கேற்ற பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

11. எவரும் உட்செல்லக் கூடாதெனத் தடைவிதிக்கப்பட்ட போதிலும் .................................... இருவருக்கு மாத்திரம் அனுமதி அளிக்கப்பட்டது.
1) கள்ளத்தனமாக. 2) வேண்டாவெறுப்பாக.
3) விதிவிலக்காக. 4) உத்தேசமாக.

12. எதிர்க்கட்சிகளின் செய்திகளை வெளியிடாது சில வெகுசன ஊடகங்கள் .............................. செய்கின்றன.
1) தணிக்கை. 2) இடையீடு. 3) இடைநிறுத்தம். 4) இருட்டடிப்பு.

13. குப்பையிலே கிடந்தாலும் .................. மங்காது,
1) குண்டுமணி. 2) குன்றுமணி. 3) குந்துமணி. 4) குன்றிமணி.

14. இரகசியமாக இயங்கிய தீவிரவாதக்குழுவினரில் சிலர் ...................... ஆக மாறி, அக்குழுவைக் காட்டிக்கொடுத்தனர்.
1) காவற்படை. 2) ஐந்தாம்படை.
3) வேவுப்படை. 4) ஓம்படை.

15. கோயிலிலே கண்ட அந்தக்குழந்தை ............. என்று வாளிப்பாய்க் காணப்பட்டது.
1) புலபுல. 2) கொழுகொழு. 3) மொழுமொழு. 4) வழுவழு.

16. ஒரு காரியத்தைச் செய்து முடித்துவிடல் வேண்டும் என்று மனவுறுதி கொண்டு, அக்காரியத்தில் முனைந்துநிற்றல் என்னும் பொருளைப்புலப்படுத்தும் மரபுத்தொடர்,
1) தலைகீழாய் நிற்றல். 2) கங்கணங்கட்டுதல்.
3) கண்ணாயிருத்தல். 4) கசகரணம் போடுதல்.

17. ''தாங்கள் கேட்பனவற்றில் நல்லனகொண்டு, தீயன விலக்கல் அறிஞர்களின் இயல்பாகும்'' என்பதை விளக்கப் பொருத்தமான உவமைத்தொடர்,
1) நுனிப்புல் மேய்ந்ததுபோல. 2) நீரொழியப் பாலுண் குருகுபோல.
3) நீறுபூத்த நெருப்புப்போல. 4) கனி இருக்கக் காய் கவர்வதுபோல.

18. ''ஒருவருடைய தகுதியை அறிந்துகொள்வதற்கு அவரது செயலொன்றே போதும்'' என்பதை விளக்கப் பொருத்தமான பழமொழி.
1) விரலுக்குத்தக்கது தான் வீக்கம். 2) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
3) ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம். 4) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

19. ''குண்டு வீச்சின் காரணமாக அந்நகரம் அடையாளந் தெரியாதபடி சிதைந்து போயிருந்தது'' என்பதைக் குறிக்கப் பொருத்தமான இணைமொழி,
1) சின்னம்பின்னம். 2) சின்னபின்னம்.
3) சின்னாபின்னம். 4) சின்னோபின்னம்.

20. ''சதை'' என்பது பின்வரும் எத்தொகுதிக்குரிய உள்ளீடு?
1) கம்பு, வரகு. 2) பலா, தோடை.
3) மா, வாழை. 4) அவரை, துவரை.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

21. வேற்றுமை ஏற்கும்போது சாரியை பெற்றே அமையக்கூடிய சொற்கூட்டம்,
1) விரல், வேர், கனி. 2) அவன், அவள், அது.
3) மனம், அவை, தேகம். 4) நீ, நான், தான்.

22. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்மயக்கமாக மாத்திரமே வரக்கூடிய எழுத்துக்கூட்டம்,
1) க், ச், த், ப். 2) ர், ழ், வ், ள்
3) ங், ஞ், ட், ண். 4) வ், ள், ற், ன்.

23. தொடர்களைப் பிரிக்கும் வகையால் இருவேறு பொருள் தராத ஒருதொடர்,
1) வனமிருகம். 2) கானகம். 3) அரசனல்லன். 4) கண்ணீர்.

24. வல்லின மெய்யாகிய பகரம் சொல்லிலே தன்சார்பு காரணமாக, வல்லொலியிலிருந்து திரிந்து ஒலிப்பதற்கு ஓர் உதாரணம்,
1) அப்பம். 2) துப்பு. 3) சிற்பம். 4) சுபம்.

25. ''அப்பிள்'' மிகுந்த சுவையுடையதாய் இருந்தது. இதில் அப்பிள் என்பது,
1) பொருட்பெயர். 2) சினைப்பெயர்.
3) பொருளாகுபெயர். 4) சினையாகுபெயர்.

26. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' இவ்வாக்கியத்தில் அமைந்திருக்கக்கூடிய வழு,
1) திணைவழு. 2) பால்வழு.
3) எண்வழு. 4) காலவழு.

27. பின்வருவனவற்றுள் இயல்புப்புணர்ச்சியாய் அமையும் புணர்மொழி,
1) கண்ணிமை. 2) தேனினிமை.
3) புள்ளொலி. 4) மெய்யுறு.

28. பின்வருவனவற்றுள் தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமைந்த எழுத்துக்கள்,
1) க், ஞ், ண், ட. 2) ச், த், ம், ய்.
3) ர், ய், ல், வ். 4) ள், ழ், ற், ன்.

29. எழுவாயும் செயற்படுபொருளும் தொக்குநிற்கும் வாக்கியம்,
1) வேகமாய் நீந்தாதே. 2) நன்றாகப்படி.
3) நீ நிலை தளராதே. 4) நாயைக்கட்டு.

30. ஒரு பொருள் தரும் வேற்றுமை உருபுகள் இரண்டு இணைந்து வந்த சொல்,
1) யானையை. 2) கோவிலின். 3) குடபாலிடை. 4) கண்ணினது.

* பின்வரும் வினாக்களில் உள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

31. ஐம்பூதங்கள் என்று சொல்லப்படுவன,
1) நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ. 2) மெய், வாய், கண், மூக்கு, செவி.
3) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
4) ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம்.

32. விடாமுயற்சியாவது ஒரு கருமத்தை மன எழுச்சியோடு;
1) இடைவிடாது செய்தலே விடாமுயற்சி எனப்படும்.
2) இடைவிடாது செய்தல் விடாமுயற்சி.
3) இடைவிடாது செய்தலாம்.
4) இடைவிடாது செய்தலே விடாமுயற்சி.

33. நுட்பங்கள் கூடிய செல்லிடத் தொலைபேசியை வைத்திருந்தாலும், அவன் அதை;
1) உபயோகிக்கத் தெரிந்தவனன்று. 2) பாவிக்கத் தெரிந்தவனல்லன்.
3) உபயோகிக்கத் தெரிந்தவனல்லன். 4) பாவிக்கத் தெரிந்தவனல்ல.

34. முன்னிலை எழுவாயோடு படர்க்கை எழுவாய் தொடர்ந்து வந்தால், அவ்வாக்கியத்தின் பயனிலை,
1) முன்னிலைப் பன்மையாய் இருக்கும். 2) முன்னிலை ஒருமையாய் இருக்கும்.
3) படர்க்கைப் பன்மையாய் இருக்கும். 4) படர்க்கை ஒருமையாய் இருக்கும்.

35. பொய்பேசுதலும், புறங்கூறுதலும் நமது முன்னேற்றத்திற்கு;
1) உகந்ததல்ல. 2) உகந்தனவன்று.
3) உகந்ததன்று. 4) உகந்தனவல்ல.

* பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

எல்லையில் லாததோர் வானக் கடலிடை
வெண்ணிலாவே - விழிக்
கின்ப மளிப்பதோர் தீவென் றிவகுவை
வெண்ணிலாவே.
சீத மணிநெடு வானக் குளத்திடை
வெண்ணிலாவே - நீ
தேசு மிகுந்த வெண்டாமரை போன்றனை
வெண்ணிலாவே.

மோத வருங் கருமேகத் திரளினை
வெண்ணிலாவே -நீ
முத்தி னொளிதந் தழகுறச் செய்குவை
வெண்ணிலாவே.
தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும்
வெண்ணிலாவே - நலஞ்
செய்தொளி நல்குவர் மேலவரா மன்றோ
வெண்ணிலாவே.

36. வானக்கடல், வானக்குளம் என்னும் தொடர்கள்,
1) தற்குறிப்பேற்றம். 2) உவமை.
3) உருவகம். 4) உயர்வு நவிற்சி.

37. மேலவர் செயல் எதுவென்று கூறப்பட்டுள்ளது?
1) தீது செய்ய வருபவர்களுக்கு நன்மை செய்தல்.
2) தீது செய்ய வருபவர்களுக்கு அறிவு புகட்டுதல்.
3) தீது செய்ய வருபவர்களுக்கு நன்மையும் செய்து, அறிவும் புகட்டுதல்.
4) தீது செய்ய வருபவர்களுக்கு எதுவும் செய்யாதிருத்தல்.

38. கருமேகத்திரள் யாருக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
1) வெண்ணிலவுக்கு. 2) தீயவர்களுக்கு.
3) மேலவர்களுக்கு. 4) வெண்டாமரைக்கு.

39. 'மோதவரும்' என்னும் தொடர்,
1) பெயரெச்சம். 2) ஆகுபெயர். 3) வினையெச்சம். 4) செய்வினை.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.
அ. நான் ஆடையாற் போர்க்காத பகுதியை மக்கள் தரை என்கிறார்கள்.
ஆ. என்னுடலிற் பெரும்பாகத்தை நீலப்பட்டாடையாற் போர்த்திருக்கிறேன்.
இ. என் பெயர் பூமி.
ஈ. மக்கள் அதைக் கடல் என்று சொல்கிறார்கள்.
உ. அது ஆடி அசைந்து சலசலத்துக்கொண்டே இருக்கிறது.
1) இ,அ,ஈ,உ,ஆ. 2) இ,ஆ,உ,ஈ, அ. 3) ஆ,இ,ஈ,உ,அ. 4) இ,உ,ஈ,ஆ,அ.

## தமிழ்மொழி - II

நேரம்: 2 மணித்தியாலங்கள்

* சுருக்கமான விடை தருக.
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. 1) பின்வரும் தொடரைப் பிரித்தெழுதுக.
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த.
2) எரி - எறி இச்சொற்களைக் கருத்து புலப்படத் தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
3) ''அங்கதான் விதான ஒண்ட கெட்டித்தன மிருக்கி'' இவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
4) தனது அந்தரங்கம் அலட்சியம் செய்யப்பட்டபோது கமலா துடித்துப் போனாள்.
இவ்வாக்கியத்தில் வந்த வட சொற்களைத் தருக.
5) தொழிற்பெயர் விகுதிகள் இரண்டை உதாரணத்துடன் எழுதுக.
6) தறி ஒன்றை ஆக்குவதற்காக மரத்தைத் தறித்தான். - இவ்வாக்கியத்தில் வரும் ''தறி'' என்னும் இரு சொற்களதும் வேறுபாடு யாது?
7) வாழ்நாள், அருமருந்தன்ன - இச்சொற்களின் மரூஉ வழக்குகளை எழுதுக.
8) துண்டுபிரசுரம் ஒன்றை எழுதும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் இரண்டு கூறுக.
9) சுவரொட்டியொன்றை எழுதும்போது பின்வருவனவற்றுள் எவற்றைத் தவிர்க்க வேண்டும்?
மக்களை கவரும்படி எழுதுதல், ஒரே நிறம் பாவித்தல், கருத்தாழம் மிக்க சிறிய வசனம் எழுதுதல், மக்களுக்குரிய பேச்சு மொழியில் எழுதுதல்.
10) செவ்வி காணச்செல்லும் ஒருவரை விட மக்களே செவ்வியால் அதிக பயனைப் பெறுகின்றனர்.
- இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
1) இயற்கையை அழிப்பதனால் எத்தனையோ அனர்த்தங்களை மனிதன் சந்திக்கவேண்டியுள்ளது. சூழலியலாளர்களும் விஞ்ஞானிகளும் சூழலைப் பேண வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். மனித நடவடிக்கைகளோ இவற்றுக்கு எதிராகவே நடந்துகொண்டிருக்கின்றன. இயற்கையை பாதுகாப்பதோடு சூழல் மாசடையாமல் தடுக்கும் வழிவகைகளையும் எடுத்துக் காட்டி ஒரு விளக்ககட்டுரை.
2) இலங்கையின் எழில் கொஞ்சுமிடம் மலைநாடு, அருவிகளும், மலைகளும் தேயிலைத் தோட்டங்களும் மலையகத்தை அழகுபடுத்துகின்றன. உமது பாடசாலை ஒழுங்கு செய்த கல்விச் சுற்றுலாவில் மலைநாட்டுக்குச் சென்றுபார்த்து ரசித்த காட்சிகள் பற்றிய வர்னணைக் கட்டுரை.
3) சர்வதேச மகளிர் தினம் இன்று உலகளாவியரீதியில் கொண்டாடப்படுகிறது. சகல துறைகளிலும் இன்று பெண்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். எனினும், பெண்களில் ஒருசாரார் அடிமைப் படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சர்வதேச மகளிர் தினம் பற்றி [illegible] உமது நண்பருக்கு நீர் அளிக்கும் விளக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19 ஆம் பக்கம் பார்க்க)

# சகல துறைகளிலும் திறமை கொண்டவர்களாக தீவக மக்கள் மீண்டும் வளர்ச்சி பெற வேண்டும்

## வேலணைப் பிரதேச செயலர் உரை

யாழ்ப்பாணம்,நவ.15

வேலணை மற்றும் தீவகப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பல்வேறு துறைகளிலும் திறமை கொண்டவர்களாகக் கடந்த காலங்களில் கொழும்பில் கொடி கட்டிப்பறந்தவர்கள். அந்த நிலை மீண்டும் ஏற்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்கான சிறுவர், முதியோர் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:-

நாங்கள் சிறுவர்களாக இருந்த போது எமது மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் பெற்றோர்கள். அவர்கள் மகிழ்ச்சியான அனுபவங்களைத் தந்தவர்கள். எனவே அவர்களைக் கௌரவித்து மகிழ்ச்சியடைய வைப்பது எமது கடமை. அதே போன்று நமது சிறுவர்களின் எதிர்காலத்துக்காக நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. தீவகத்தில் கல்வி நிலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குக் காரணம் இப்பிரதேசம் பின்தங்கிய நிலையில் உள்ளது. அத்துடன் போக்குவரத்து மின்சாரம் போன்ற வசதிகள் இல்லை என்கின்றனர்.

கடந்த காலங்களில் இங்குள்ள மக்கள் மேற்கூறப்பட்ட வசதிகளுடன் வாழ்ந்தனர். குப்பி விளக்கில் போக்குவரத்து வசதிகளின்றி சிறிய படகுகளில் சென்று கல்வி கற்று சிறப்பான நிலையில் இருந்துள்ளனர்.

ஆனால் இன்று பல்வேறு வசதிகளைக் கொண்டதாக இப்பகுதி வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலும் கூட பின்தங்கிய பகுதி எனக் கூறிக்கொண்டு இருப்பது ஏற்புடையதல்ல.

எனவே எமது சிறுவர்களின் கல்வியில் சம்பந்தப்பட்ட அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வருடம் தரம் 5 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழமைபோன்று துவிச்சக்கர வண்டிகளை வழங்குகின்றோம். மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பகுதியும் இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சியில் தேவையான உதவிகளை வழங்குகின்றன -என்றார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல், யாழ்.செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (ம-201-7)



வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற சிறுவர், முதியோர் தின நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகபுள்ளி பெற்ற மாணவன் ஒருவனுக்கு யாழ்.செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி பொ.மோகனேஸ்வரன் சைக்கிள் வழங்குவதையும்-

மாணவனுக்குக் கல்வி கற்பித்த துறையூர் ஐயனார் பாடசாலை ஆசிரியையைப் பாராட்டி ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப் பாளர் கமல் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு

வலி.வடக்கு,நவ.15

நுணாவில் கிழக்கு அமிதாம்பிகை வித்தியாலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற இரு மாணவர்களும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற ஒன்பது மாணவர்களும் பாடசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறும்.

க.பிரவிந்தன் (169), பா.வைஸ்ணவன் (153) ஆகிய இரு மாணவர்களுடன் பரீட்சையில் 100க்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற ஒன்பது மாணவர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-207)

* * *

பண்டத்தரிப்பு,நவ.15

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் (பண்டத்தரிப்பு) திருமதி ஜெ.தர்சினி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவுக்கான நிரந்தர வைப்புப் பத்திரமும், 500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

(ம-130)

## கட்டடங்கள் புனரமைப்பு

நாவற்குழி, நவ. 15

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கட்டடத் தொகுதி ஒன்றும், பெண்கள் மலசலகூடம், நீர்த்தாங்கி, சுற்றுமதில் ஆகியனவும் அறிவுசார் சமூகத்திற்கான கல்வித்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒரு கட்டடம் கேள்வி முறைக்கு அமைவாக தேசிய போட்டிக் கேள்விக் கோரல் நடத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (204-121)

## மரநடுகை நிகழ்வு

நாவற்குழி, நவ. 15

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலகத்தின் மர நடுகை நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.07 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையப் பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி கலந்து கொள்வார். (204-121)

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

4) முருகவேள் ஒரு சிறந்த வைத்திய அதிகாரி. செல்வமும், செல்வாக்கும் மிக்கவர். அவரது ஒரே ஆசை தன் மகன் முரளியை கன்னைப்போல் வைத்தியதுறையில் ஈடுபடுத்தி புகழ் பெறச் செய்வதே. ஆனால் முரளியோ தன்னை ஒரு இசைக்கலைஞனாக உருவாக்கி கொள்ளவே விரும்புகிறான். தந்தைக்கும் மகனுக்குமிடையே முரண்பாடுகள் வலுப்பெறுகின்றன. இறுதியில் யார் வெற்றி பெற்றார்? முரண்பாடுகளை வெளிக்கொணரும் வகையில் ஒரு சிறுகதை.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 25-27 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)
கலைகளைப் பொதுவாக இரண்டு வகைகளிற் பிரிக்கலாம். சில கலைகள் அறிவினாலேயே தெரிந்து பழகி இன்புறத்தக்கவை. அக்கலைகள் கொண்டு உடம்பு முயற்சியினாலே தொழில் செய்ய இயலாது. இலக்கியம், இசை முதலியன இவ்வகையில் அடங்கும். சில கலைகள் அறிவினால் அறிந்து இன்புறுதலோடு உடம்பு முயற்சியினாலும் தொழில்கள் செய்து கொள்ளத்தக்கவை. பெரும்பாலும் மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து முதற் பொருள்களைப் பற்றி ஆராய்கின்ற இயற்கைப் பொருள் ஆராய்ச்சிகள் தொழில்கள் செய்வதற்கு உதவும். இங்ஙனம் அறிவின்பத்துக்கு மட்டும் ஏதுவான கலையைப் பொதுவாக உணர்வுக்கலை என்றும், தொழிலுக்கும் ஏதுவான கலையைப் பொருட்கலை என்றும் சொல்லலாம். சங்க காலத்திலிருந்த தமிழ மக்கள் இவ்விருவகைக் கலைகளிலும் வளம் பெற்றிருந்தனர். இவற்றைப்பற்றிய கலை நூல்களும் அப்போது தனித்தனியே இயற்றப்பட்டிருந்தன. அதனால் அவர்களுக்கு அறிவு வளம், தொழில் வளம் என்னும் இரு வகை வளங்களுஞ் செழித்திருந்தன.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

வறுமைப் புயலிற் சிக்கிவிடில்
வாழ்க்கை தன்னை வெறுப்பதுவோ?
சிறுமைக் குணமே நீ கொண்டு
சிரமே தாழ்ந்து செல்வதுவோ?

ஏழ்மை எம்மிற் குடி கொண்டால்
எதிர்த்து வெற்றி கொள்ளாமல்
தாழ்வுச் சிக்கல் கொண்டேங்கல்
தகுமோ, முறையோ, என் தோழா?

வறுமைப் பட்டே வாழ்ந்துலகில்
வளமும் புகழும் பெற்றுப் பின்
பெருமை பூண்டு வாழ்ந்திட்ட
பெரியார் வாழ்க்கை பாடமடா

இன்பம் துன்பம் வாழ்வினிலே
இரவு பகலைப் போல் வருமே
துன்பம் அந்தோ மாய்ந்தோடும்
துணிவைத் துணையாய் கொண்டாலே.

1) வறுமைப்புயலில் சிக்கியதும் மனிதன் என்ன செய்கின்றான்?
2) எதை எதிர்த்து வெற்றி கொள்ள வேண்டும் என கவிஞர் கூறுகிறார்?
3) நாம் யாருடைய வாழ்க்கையை பாடமாக கொள்ள வேண்டும்?
4) எச்சந்தர்ப்பத்தில் துணிவை துணையாகக் கொள்ள வேண்டும்?
5) வறுமைப்புயல் என்பது என்ன அணி என விளக்குக.

05. நூலக வாரத்துக்கான விழா ஒன்றை கொண்டாட உமது பாடசாலை கலாமன்றம் தீர்மானித்துள்ளது. அம் மன்றத்தின் செயலாளராக உம்மை கருதிக்கொண்டு அவ்விழாவை எவ்வாறு நடத்த திட்டமிட்டுள்ளீர்கள் என்பதை விளக்கி 100 சொற்களில் ஓர் அறிக்கை எழுதுக.

## தமிழ்மொழி - III

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

முக்கியம்: அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை எழுதுக.
1) ''வெட்டனவை மெத்தனவை வெல்லா''
   1. இத்தொடரின் பொருளை எழுதுக.
   2. இத்தொடர் இடம்பெற்ற நூல் எது?
2) ''நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள்''
   1. ''நன்னுதல்'' எனப்பட்டவர் யார்?
   2. ''அன்னாள்'' என்பதால் குறிப்பிடப்பட்டவர் யார்?
3) ''பிள்ளாய் உன்னை அதிகமாக மதித்துக்கொள்ளாதே''
   1. இப்படிக் கூறியவர் யார்?
   2. ஏன் இப்படிக் கூறினார்?
4) ''சினவெங் களியானை திங்கள்மேல் நீட்டுந் தன்கை''
   1. இத்தொடர் எம்மன்னனைப் பற்றியது?
   2. இதனால் வெளிப்படுத்தப்படுவது என்ன?
5) நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
   கல்லார் கட்பட்ட திரு - என்பதைக் கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக.
6) கல்லைத்தான் மண்ணைத்தான் ............'' என்னும் பாடலின் ஆசிரியர் யார்? இதில் நிந்திக்கப்படுபவர் யார்?
7) சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனோ'' இதில் சிங்கம், செந்நாய் என்பன யார் யாரைக் குறித்துவந்தன?
8) ''முன்னோக்கு'' என்ற கவிதை யாரால் பாடப்பட்டது? அதன் பாடுபொருள் யாது?
9) தாழம்பூ, மகிழம்பூ என்பவற்றுக்கிடையே ஔவையார் கூறும் ஒப்பீடு யாது?
10) கு.ப.ராஜகோபாலன் தமிழைத் தவிரக் கற்றிருந்த வேறு மொழிகள் இரண்டு எழுதுக.

02. பின்வரும் செய்யுள்கள் உரைநடைப் பகுதிகள் என்பனவற்றின் பொருளை உமது நடையில் எழுதுக. அவற்றில் தடித்த எழுத்துப் பகுதிகளின் சிறப்பினை விளக்குக.

1) பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்ணடக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் - நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்.
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து.

2) கோட்டை இடித்தகழ் குன்றாக்கிக் குன்றகள் ஆக்கித்தெவ்வர்
நாட்டை மிதிக்கும் கடாக்களிற் றான்நந்தி நாட்டினில் பொன்
தோட்டை மிதித்தந்தத் தோட்டு பாய்ந்து சுருள் அளகக்
காட்டை மிதிக்கும் கயற்கண்ணியோசுரம் கால்வைப்பதே.

3) பட்டணத்தில் இருக்கும்பொழுது குழந்தை இயந்திரதேவியின் குழந்தைகளைப் பற்றிப் புதிய கேள்விகளைக் கேட்பாள். கிராமத்திற்கு வந்தவுடன் அவளுடைய கேள்விகள் அதியாச்சரியகரமாக மாறிவிடும். இயற்கைத் தேவியின் சிறு விளையாட்டுகளின் இடையே அவளுடைய உள்ளம் சென்று கலந்துகொள்ளும். அவளுடைய எண்ணங்கள் இயற்கை அன்னையுடன் இறக்கை விரித்துப் பறப்பவையாக இருக்கும்.

4) அவன், மரத்தருகே நின்ற இருவரையும் இனிது நோக்கிய ''ஐயா! நீங்கள் இருவரும் அயலூரார் என்பதை அறிந்தேன். ஏனெனில், இவ்வூரார் எவரும் இப்பாழான பழுமரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள். இம்மரத்தில் எந்நாளும் இலைகளும் தழைகளும் இல்லாமையால் விலங்குகளும் இதனடியில் நில்லாமல் விலகிப்போகும்; கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த இக்கனிகளும் நச்சுக் கனிகளாய் இருத்தலின், உண்டாரைக் கொன்றுவிடும். இம்மரத்தின் கொம்புகளை விறகாய் வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முள் இடையூறாயிருக்கிறது. இப்பாழ் மரம் கடுங்காற்றில் அகப்பட்டு முறிந்து வேரற்று விழவேண்டும் என்று இவ்வூரார் இறைவனை நாளும் வழிபடுகிறார்கள். இம்மரம் என்று விழுமோ, அன்றே இவ்வூராருக்கு நன்றாகும் என்று அதன் தன்மையை விரிவாகக் கூறிமுடித்தான்.

* பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

03. ''மங்கையர்க்கரசியின் காதல்'' என்ற சிறுகதை ஆசிரியர் சூழ்நிலையை வர்ணிப்பதில் வல்லவர் என்பதை விளக்குக.

அல்லது

பார்வைகள் என்ற சிறுகதையில் விமலன் பெறும் முக்கியத்துவத்தைத் தருக.

04. நீர் கற்ற திருக்குறள் கருத்துக்கள் எக்காலத்துக்கும் ஏற்றவை என்பதை விளக்குக.

அல்லது

முத்தொளாயிரம் நூலில் காதல் காட்டப்பட்டுள்ள விதத்தினைத் தருக.

* 5,6,7 என எண்ணிடப்பட்ட வினாக்களுள் ஏதேனும் ஒன்றுக்கு விடை எழுதுக.

05. ''கவிச்சக்கரவர்த்தி'' நாடகத்தில் படைப்பிலக்கியம் பற்றி கு.அழகிரிசாமியின் கருத்துக்கள் எவை?

06. கடற்புறம் என்ற கவிதையில் கவிஞர் வெளிப்படுத்தும் செய்தியைத் தருக.

07. நட்சத்திரக் குழந்தைகள் என்ற கதையில் தந்தை பற்றி உமது மனப்பதிவைத் தருக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது மணற்காடு சென்.அன்ரனீஸ்

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறை உதைபந்தாட்ட 'லீக்'கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்திய கழக ஸ்தாபகர் நா.சின்னத்தம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 9 பேர் பங்குகொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இறுதியாட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் கழக அணிமோதியது.

இரண்டு அணியினரும் தலா ஒரு கோல் பெற்றிருந்ததனால் ஆட்டம்சமநிலையில்முடிவுற்றது.

இதனால் ஆட்டத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மணற்காடு சென்.அன்ரனீஸ் அணி தன்னை எதிர்த்து விளையாடிய வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி சம்பியன் ஆனது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் எ.மேரிதாசன் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாட்டத்தில் சிறந்த கோல் காப்பாளராக மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரன் டேவிட் அன்ரன் விஜயகுமாரும், ஆட்டத் தொடர் நாயகனாக திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் சதீஸ்குமாரும் தெரிவுசெய்யப் பட்டார்.

சுற்றுப்போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரன் ஜேம்ஸ் கொலின்ஸ்ரனும் வளர்ந்து வரும் சிறந்த வீரராக டயமன்ஸ் கழக வீரர் பிரதீஸும் சிறந்த பின்கள வீரராக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் உஷனந்தும் தெரிவாகினர். (எ-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன். விபுலாணந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலைகளுக்கு இடையே நடத்தி வரும் லீக் முறையிலான இரு பாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 2.30 மணி வேம்படி மகளிர் கல்லூரி 'பி' அணி எதிர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி.

மாலை 3.30 மணி கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் திருக்குடும்ப கன்னியர் மடம். (எ-23)

* * *

வலி வடக்கு, நவ. 15

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி அழைக்கப்பட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் மூன்றாம் இடத்துக்கான போட்டி இறுதிப்போட்டி என்பன இன்று இரவு 7.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளன.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதவுள்ளன. (எ-88)




## திறமைக்கு மரியாதை...





ஊக்குவிப்பு: சர்வதேச நீரிழிவு தினத்தையொட்டி உதயன் ஊடக அனுசரணையுடன் சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி லக்ஷ்மன் பரிசில்களை வழங்கினார். நிகழ்வின் போது நீரிழிவு தொடர்பான கருத்தரங்கும் இடம்பெற்றது.

# பெண்களுக்கான முப்பாய்ச்சலில் கீர்த்திகாவின் சாதனைப் பதிவு

வலி.வடக்கு, நவ.15

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மெய்வண்மைப் போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கீர்த்திகாவின் பெறுபேறு பெண்களுக்கான முப்பாய்ச்சலின் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2007,2009 ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கலைவாணி முறையே 10:09, 9:95 மீற்றர் தூரம் பாய்ந்தும் 2010 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கே.கீர்த்திகா 10:72 மீற்றர் பாய்ந்த பெறுபேறுகளும் கடந்த 3 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கீர்த்திகாவின் பெறுபேறு மாகாண ரீதியிலான சாதனையாகப் பதிவு செய்யப் படவுள்ளது. (எ-86)

## ஜெயரூபனுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம்,நவ.15

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இந்த வருடத்துக்கான தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவன் இ.ஜெயரூபன் உயரம் பாய்தல் நிகழ்வில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (எ-23)

## கூடைப்பந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 15

பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் லீக் முறையிலான ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 'பி' அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி களமிறங்கியது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி யாழ்.மத்திய கல்லூரி 'பி' அணியை 51:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (எ-23)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் முத்தமிழ் விளையாட்டுக் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 15

கரம்பொன் விளையாட்டுக் கழகத்துடனான இரண்டாவது சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பருத்தியடைப்பு முத்தமிழ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

கரம்பொன் ஞானி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. இரு அணிகளுக்கும் இடையில் முதலில் இடம்பெற்றிருந்த சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் ஞான விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றிருந்தது. வெற்றியை தக்க வைக்க வேண்டும் என்ற உறுதியுடன் போராடிய ஞான ஒளி விளையாட்டுக் கழக வீரர்களம் இம்முறையாவது வெற்றி பெறவேண்டும் என்று போராடி முத்தமிழ் விளையாட்டுக் கழக வீரர்களும் களத்தில் ஆக்ரோஷத்துடன் மோதினர். இதனால் ஆட்டத்தில் தொடக்கம் முதல் முடிவு வரை மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. இறுதியில் முத்தமிழ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் ஞான ஒளி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி வெற்றி பெற்றது. (எ-325)

## வெற்றிக்களிப்பு...



யாழ்.கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையேயான 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற நாவாந்துறை ஆர்.சி. பாடசாலை அணி வீரர்கள்,பயிற்றுநர், பொறுப்பாசிரியர் ஆகியோருடன் வெற்றிக்களிப்பில் அமர்ந்திருக்கின்றனர். (படம்:-தமிழினியன்)

## குண்டெறிதலில் அனுஷாவுக்குப் பதக்கம்

வலி.வடக்கு,நவ.15

தேசிய இளைஞர்கள் சேவை மன்றம் அகில இலங்கை ரீதியில் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் மெய்வன்மைப் போட்டிகளில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி. அனுஷா குண்டெறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்று வரும் இந்த மெய்வன்மைப் போட்டியில் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் 20 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான போட்டியில் வெண்கலப் பதக்கத்தை அனுஷா பெற்றுள்ளார்.

இவர் ஏற்கனவே மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை மோதல் கொழும்பில் இன்று



கொழும்பு, நவ. 15

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிக்கிடையிலான முதலாவது டெஸ்ட் மோதல் இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, இலங்கை அணியுடன் 3 டெஸ்ட்போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு 'இருபது-20' போட்டி கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்கிறது.

இதில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது.

சொந்த மண்ணில் விளையாடுவதால் ரசிகர்களின் முழுமையான ஆதரவு இலங்கைக்கு உண்டு. அத்துடன், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை முதல் முதலாக அதுவும் ஆஸ்திரேலியாவில் வைத்துக் கைப்பற்றிய வெற்றிக் களிப்புடன் இலங்கை களமிறங்கிவதாலும் வீரர்கள் புதிய உத்வேகத்துடன் இன்றைய போட்டிக்குக் களமிறங்குவார்கள்.

அதேவேளை, மறுபுறம் பார்க்கையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சாதாரண அணி அல்ல. அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் போட்டியின்போக்கை மாற்றக் கூடிய வல்லமை படைத்தவர்கள்.

மொத்தத்தில் இரு அணிகளும் பலமிக்க அணியாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் இன்று ஆரம்பமாகும் இந்த மோதல் சவால் நிறைந்ததாகவே அமையும்.




தென்னாபிரிக்க வீரரான அம்லா, பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரரான மிஸ்பா உல் ஹக் அடித்த பந்தைப் பாய்ந்து பிடித்தபோது...

## லக்ஷ்மன், ஹர்பஜன் அரைச் சதம்
# நியூஸிலாந்துக்குப் பதிலடி



ஹைதராபாத்தில் நடந்துவரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தின் நேற்றையதினம் லக்ஷ்மன், ஹர்பஜன்சிங் ஆகியோர் அசத்தலாக அரைச்சதம் அடிக்க, நியூஸிலாந்துக்கு இந்தியா பதிலடி கொடுத்துள்ளது. நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இந்தியா ஒன்பது விக்கெட்டுகள் இழப்புக்கு 436 ஓட்டங்களைக் குவித்து, 86 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியா-நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் ஆட்டம் ஹைதராபாத்தில் கடந்த வெள்ளியன்று தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, தனது முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 350 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் தனது இனிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரமுடிவின்போது, 49 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ராகுல் டிராவிட் (7), சச்சின் டெண்டுல்கர் (11) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

தனது இனிங்ஸை நேற்றுத் தொடர்ந்த இந்திய அணி, சச்சினை உடனேயே இழந்தது. அவர் 14 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

எனினும், டிராவிட் (45), லக்ஷ்மன் (74), ஹர்பஜன் சிங் (84-ஆட்டமிழக்காது) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக, முதல் இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுகள் இழப்புக்கு 436 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சச்சின் இந்த இனிங்ஸிலும் ஏமாற்றினார். அதேவேளை, லக்ஷ்மன், ஹர்பஜன்சிங் ஆகியோர் முன்னைய ஆட்டத்தைப் போலவே இந்தப் ஆட்டத்திலும் அசத்தினர்.

ஹர்பஜன்சிங், ஸ்ரீசாந்த் ஆகியோர் இன்னும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

நியூஸிலாந்து அணி சார்பாகப் பந்துவீச்சில், விக்றோரி 4 விக்கெட்டுகளையும், சௌத்தி 3 விக்கெட்டுகளையும், மார்டின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்ட நிலவரப்படி இந்திய அணி, நியூஸிலாந்தை விட 86 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

## நியூஸிலாந்தை மிரட்டினார் சஹீர்

- ஹர்பஜன்

"நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் சஹீர்கானின் பந்துவீச்சு மிரட்டல் விடுத்தது." - இவ்வாறு ஹர்பஜன் சிங் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டம் குறித்து ஹர்பஜன்சிங் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

சஹீர்கானின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. தொடக்கத்திலேயே அவர் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றி நெருக்கடி கொடுத்தார். கடந்த 2 ஆண்டுகளாக சஹீர்கான் சிறப்பாகப் பந்துவீசி வருகிறார்.

'எனது பந்து வீச்சுத் திருப்தி அளிக்கிறது. ரைடரின் விக்கெட்டை எப்படிக் கைப்பற்றினேன் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் அவரது விக்கெட் மிகவும் முக்கியமானதாகும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ,சஹீர்கான் 69 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், ஹர்பஜன்சிங் 46 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

## பாகிஸ்தானுடனான டெஸ்ட்: தென்னாபிரிக்கா முன்னிலை!

துபாயில், பாகிஸ்தான்-தென் ஆப்ரிக்கா அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் நடந்துவருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் தாக்குதலில் சிக்கி, முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 144 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் முதல் இன்னிஙஸிற்காக, மொஹமட் ஹபீஸ் ஆகக் கூடுதலாக 60 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்மூலம் அந்த அணி 271 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

## பயிற்சியாளருக்குத் தடை

நடுவரைத் தரக்குறைவாக விமரசித்த ரியல்மாட்ரிட் அணியின் பயிற்சியாளரான ஜோஸ் மோரின் ஹோவுக்கு இரு போட்டிகளில் பங்கேற்க ஸ்பெயின் உதைபந்தாட்டச் சங்கம் தடை விதித்துள்ளது.

'கோபா டெல்ரே' உதைபந்தாட்டத் தொடரின் ஒரு போட்டியில் ரியல்மாட்ரிட், முர்சி அணியுடன் மோதியது. இந்தப் போட்டியின்போது ரியல்மாட்ரிட் பயிற்சியாளர் ஜோஸ் மோரின்ஹோ தொழில்நுட்பப் பகுதியை அடிக்கடி தாண்டிச் சென்று உரக்கக் கத்தியவாறு இருந்தார்.

பல தடவைகள் நான்காவது நடுவர் இது குறித்து எச்சரித்தும், ஜோஸ் மோரின்ஹோ காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இதையடுத்து போட்டி நடுவர் அவருக்கு சிவப்பு அட்டைக் காட்டி வெளியேற்றினார். தொடர்ந்து ரசிகர்களுடன் சென்று அந்தப் போட்டியை பார்க்கும் நிலை மோரின்ஹோவுக்கு ஏற்பட்டது.

இதையடுத்துத் தமக்கு சிவப்பு அட்டையைக் காட்டிய நடுவர் ஜோஸ் பாரடைஸ் குறித்து ரியல் மாட்ரிட் இணையதளத்தில் ஜோஸ் மோரின்ஹோ தரக்குறைவாக விமர்சித்திருந்தார். இதனால், மோரின் ஹோவுக்கு அடுத்துவரும் இரு போட்டிகளில் பங்கேற்க ஸ்பெயின் உதைபந்தாட்டச் சங்கம் தடை விதித்துள்ளது.

## 1000 தங்கங்களை வென்றது சீனா!

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் 1,000 தங்கப்பதக்கங்களை வென்று சீனா சாதனை படைத்துள்ளது.

16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் குவாங்சு நகரில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் நீச்சல் போட்டியின் 200 மீற்றர் பிரீஸ்டைல் பிரிவில் கியான்வி தங்கம் வென்றார். இதன் மூலம் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சீனா 1,000 ஆவது தங்கத்தைப் பதிவு செய்தது.

1974ஆம் ஆண்டு ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதன் முறையாக சீனா கலந்து கொண்டது. தொடர்ந்து பதக்கப் பட்டியலில் தன்னை முன்னி லைப்படுத்தியும் வருகிறது. 2006ஆம் ஆண்டு நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் சீனா 165 தங்கங்களைப் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மகசின் சிறைச்சாலையில் வாடும் தேவதாசன் உண்ணா விரதத்தில் குதிக்கிறார்

கொழும்பு, நவ. 15

கடந்த இரண்டரை வருடம் புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரியான க. தேவதாசன் இன்று உண்ணா விரதத்தை ஆரம்பிக்கவிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தன்னை விடுதலை செய்யவேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தப் போராட்டத்தை அவர் ஆரம்பிக்கவுள்ளார். 2008ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர் கரவெட்டியைச் சேர்ந்தவராவார். (ஒ-ஐ)


### தவறிவிட்டது

நவாலி தெற்கு சென். பீற்றேஸ் வீதியைச் சேர்ந்த ஜேம்ஸ் மரியசீலி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 756733729V யாழ்ப்பாணத்துக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். போன் சொப் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

### தவறிவிட்டது

சண்முகநாதசர்மா லோகேந்திரசர்மா என்பவரது தேசிய அ.அட்டை (752683506V) 07.11.2010 அன்று வேலணைக்கும் அராலிச் சந்திக்கும் இடையில் வங்களாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 74/1 பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் 0776150965

# அறிவித்தல்

சாவகச்சேரி, புகையிரத வீதி, 12/8, விஜயா லேன், 'திருபவன்' என்ற விலாசத்தில் வசிக்கும்

**திருமதி திருமலர் பெலிசீயா இராஜநாயகம்**

ஆகிய நான் அறிவிப்பது யாதெனில், குறித்த விலாசத்தில் உள்ள எனது ஆதனத்தை விற்க எவருக்கும் உரித்துக்கிடையாது என்றும் அந்த ஆதனத்தை எவரும் வாங்கவேண்டாம் என்றும் பகிரங்கமாக அறிவிக்கிறேன்.

'திருபவன்'
புகையிரத வீதி, 12/8, விஜயாலேன்,
சாவகச்சேரி.

(சி-572832)

தகவல்:
திருமலர் பெலிசீயா
இராஜநாயகம்.


## பணிப்பெண் ரிஷானா விடயத்தில் சவுதி மன்னர் கவனம் செலுத்துகிறார்

கொழும்பு, நவ.15

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஷானாவின் விடயத்தில் சவூதி அரேபிய மன்னர் கவனம் செலுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சவூதியில் தான் வீட்டுப்பணிப் பெண்ணாகப் பணிபுரிந்த வீட்டிலிருந்த குழந்தையொன்றைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ரிஷாணாவுக்கு சவூதி அரேபிய உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. ஆனால் இக் கொலையைத் தான் புரியவில்லையென ரிஷானா மறுத்து வருகிறார்.

இவருக்கு கருணை வழங்குமாறு இலங்கை ஜனாதிபதி. மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் சவுதி மன்னரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ், ரிஷானாவை மரண தண்டனையிலிருந்து விடுவிக்குமாறு சவூதியின் அரச குடும்பத்தினருக்கு வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை பல தரப்பிலான இராஜதந்திர மட்டத்திலும் நிசாணாவின் விடுதலைக்கு ஆதரவு பெருகி வருகின்றது. இறந்த குழந்தையின் பெற்றோரும் ரிஷாணாவுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான சமிக்ஞையை வெளிக்காட்டுவதாகத் தெரியவந்துள்ளது.

மன்னர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தியிருப்பது ஊக்க மளிப்பதாக உள்ளபோதிலும் சில இராஜதந்திர முயற்சிகள் காரணமாக தாமதம் ஏற்படுகின்றது எனவும் தெரிகின்றது. (க)


# மரண அறிவித்தல்

## திருமதி வின்சென்ற் மோட்சலங்காரம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வின்சென்ற் மோட்சலங்காரம் நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோ. வின்சென்றின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபமாலை - சுவானம் தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான யோசேப்பு - சுவார்க்கீன் தம்பதியரின் அன்பு மருமகளும், சில்வெஸ்ரரின் (முன்னாள் ஊழியர், இ.போ.ச.) அன்புச் சகோதரியும், வில்லியம், மரியதாஸ், இராசமலர், ஜெயமலர் அலோசியஸ் (ஆசிரியர், யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), அன்ரன் மரியதாஸ் (கனடா), அல்பிறட் மரியதாஸ் (ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி சில்வெஸ்ரர் ஞானமலரின் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி) மைத்துனியும், அன்புராசா (முன்னாள் R.S.K., இ.போ.ச., கோண்டாவில்), அலோசியஸ், எலிசபெத் ஞானேஸ்வரி, மல்லிகா லூர்துநாயகி (கனடா), மேரி செலின் ஆகியோரின் மாமியும், யஸ்தஸ் (லண்டன்), யூலியானா பிறேமகாந்தன் (திருகோணமலை), ஜஸ்ரீனா, ஆதர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஹென்றி மற்றும் எட்வேட் (ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம், 2ஆம் வருடம்), தோமஸ், கிளறன்ஸ் (யா/ புனித பரியோவான் கல்லூரி), கிறிஸ்ரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலித் திருப்பலி சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (15.11.2010) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
தொ.பே. 021 224 0309, 077 3277204. (106006)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



திருமதி
## தியாகராசா தெய்வானை
(பவளம்)

கல்வளை சதுக்கம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா தெய்வானை (பவளம்) 12.11.2010 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜாவின் (முன்னாள் சாரதி, இ.போ.ச) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசா மற்றும் தங்கம்மா, இரத்தினம், இலட்சுமணன், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி (பிரான்ஸ்), சண்முகேஸ்வரி (சுவிஸ்), கிரஷ்ணராஜா (வேலணை மத்திய கல்லூரி), கிருஷ்ணேஸ்வரி (சுவிஸ்), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தருமலிங்கம், காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் ஜெயகௌரி, இராஜகுலசேகரம் (சுவிஸ்), கதிர்காமநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நந்தகோபாலன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்), மோகனவதனி, சுரேஸ்குமார் (பிரான்ஸ்), நேசகுமார் (சுவிஸ்), வரதராஜா (சுவிஸ்), றம்யா (சுவிஸ்), சுகந்தன், லக்ஷனா, மிருணா (சுவிஸ்), மிதுர்ஷன் (சுவிஸ்), கௌசிகா (பிரான்ஸ்), கதிர்ண (பிரான்ஸ்), ஆர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தரணிகன் (பிரான்ஸ்), கிருத்திகன் (பிரான்ஸ்), விதுஷா (பிரான்ஸ்), தேனுஷன், லிவிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2010) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, கல்வளை சதுக்கம்,
சண்டிலிப்பாய். (105970)

தகவல்:
தி.கிருஷ்ணராஜா (மகன்)
வேலணை மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கல்விசாரா அலுவலர்
திரு. அ.புஸ்பற ஜன் அவர்களின் அன்புத் தந்தை

### திரு. செ. அருளானந்தம்

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

யா/ விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம். (சி-572859) கல்லூரிச்சமூகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 | | 16 |
| 05 | | 10 |
| 1932 | | 2010 |



### அமரர் கந்தையா சோமசுந்தரம்

கடந்த 16.10.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.11.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய். (105978) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்



புலோலி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், 41 பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் சின்னப்பு சிவசுப்பிரமணியத்தின் (ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்) அன்பு மனைவியும், மல்லிகா (அவுஸ்திரேலியா), கிருபாகரன் (சுவீடன்), நிரஞ்சலா (ஆசிரியை - OLR), Dr. சியாமளா (மருத்துவ பொறுப்பதிகாரி - சித்தமருத்துவ போதனா வைத்தியசாலை - திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயும் விஞ்ஞானகுலசிங்கம் (அவுஸ்திரேலியா), பரிமளா (சுவீடன்), துரைமணி (கட்டட ஒப்பந்தகாரர் - திருகோணமலை), Dr. வர்ணகுலேந்திரன் (திருமலை வளாகம் - கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் நிரூஜா (அவுஸ்திரேலியா), கீர்த்தனன் (அவுஸ்திரேலியா), வைறோஷன் (சுவீடன்), பவிறோஷன் (சுவீடன்), கிறோஷ்மி (யாழ். ஜோன் போஸ்கோ), சாரங்கன் (திருகோணமலை இந்துக் கல்லூரி), துஷாரா (சண்முகா இந்து மகளிர் கல்லூரி - திருகோணமலை), அனாத்திரியன் (திருகோணமலை இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41(15), பலாலி வீதி,
(இலுப்பையடிச் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். தொ. பே. 021 320 7164,
077 628 3933, 071 822 9630.

தகவல்:
சி. சிவசுப்பிரமணியம் (சி-572855)
(கணவர்).

### ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ்



**(மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன், கரித்தாஸ். கியூடெக் பணியாளர்)**

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் ஜாப்ரின் (ஆமிஜயா) அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட மகனும், றிச்சர்ட், றிஷ்மன், ஜெனனி, ஷாலினி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய். (105983) தகவல்: குடும்பத்தினர்.

## யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது ஆறேழு பேர் கற்கள் மற்றும் கையில் கிடைத்தவற்றால் தாக்கினர். சத்தம் கேட்டு ஓடிவந்த ஹந்துன் நெத்தி, நான் நாடாளுமன்ற உறுப்பினர் ஏன் அவரைத் தாக்குகிறீர்கள் என்று கேட்டார். உடனே வந்தவர்கள் அவர் மீதும் தாக்குதல் நடத்தினர்.

வந்தவர்கள் அனைவரும் சிங்களத்திலேயே பேசிக்கொண்டனர். வீட்டுக்குள் வந்த ஆறேழு பேரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர். எனினும் வெளியே மேலும் பலர் நின்றனர் அவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை - என்றனர்.

இந்தத் தாக்குதலில் ஹந்துன்நெத்திக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டது. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வீரராஜ் லலித்குமார் மற்றும் 'லங்கா' பத்திரிகையைச் சேர்ந்த ஊடகவியலாளர் பிரியந்த ஆகியோருக்கும் தலையில் காயங்கள் ஏற்பட்டன.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் வந்து விசாரணை செய்யும்வரை சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக இரத்தம் சொட்டச் சொட்ட அவர்கள் அங்கேயே இருந்தனர். பின்னர் பொலிஸார் வந்து விசாரணை செய்த பின்பே அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

தாக்கிய நபர்கள் தப்பிச் செல்ல முயன்ற சமயம் அந்தப் பகுதியில் நின்றிருந்த இளைஞர்கள் சிலர் ஏன் தாக்கினீர்கள் எனக் கேட்க முற்பட்ட போது அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இன்று நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் நோக்கிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் லலித்குமார் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் அங்கிருந்தார்.

(உ-10-23-86)


## வாடகைக்கு

இல. 60, கடையிற் சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள புதிய வீடு 'NGO' நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
தொ.பே. 0777110812.

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதியில் கிணறு உள்ள 6 பரப்புக் காணி ஒன்று விற்பனைக்கு.

தொடர்பு:-0771298201.

## பணிப்பெண்கள் தேவை

மிக்ஷர் உற்பத்தி நிலையத்துக்கு பணிப்பெண்கள் தேவை.
தொடர்பு: பொ.சண்முகராசா (சந்திரன்)
நாவலடி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777 110166.

வித்தியாகீர்த்தி, மட்டுநகர்,
திரு. ந. சந்திரகுமார் அவர்களின்

## விவேகம்- 1

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் வெளி வந்துள்ளது. வினாத்தாள்களைப் பெற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், புத்தக நிலையங்கள் போன்றவற்றுக்கு விசேட கட்டணக் கழிவுகள் வழங்கப்படும். எமது நிறுவனத்தில் விவேகம் பரீட்சை மாதந்தோறும் நடைபெறும். அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு - 0779122918
0775581626

யாழ். மாவட்டத்தின் ஏக விநியோகஸ்தர்கள்.
*Mathuram Institute,*
*Dutch Road,*
*Kopay South*


## கண்ணீர் அஞ்சலி

புவியியற்றுறையின் தலைவரும், புவியியற் கழகத்தின் பெரும்பொருளாளருமான பேராசிரியர்
S.T.B. இராஜேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

புவியியற் கழகம்,
புவியியற்றுறை,
(105985) யாழ்.பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி செல்வரட்ணம் (யமுனா)

கொட்டடி, சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி செல்வரட்ணம் (யமுனா) நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரன்குன்கந்தையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை சீனிவாசகம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சீனிவாசகம் வீதி,
கொட்டடி, (105980) தகவல்.
யாழ்ப்பாணம். து. வாமதேவன் (மருமகன்).

### திருமதி நடராசா புஸ்பராணி

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா புஸ்பராணி நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - சின்னம்மா தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற கமலாவதி மற்றும் லீலாவதி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் சரஸ்வதி, பூவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுரேஸ்குமார் (சுவிஸ்), ரமேஸ்குமார், சுதாகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தர்மயோகேஸ்வரி (ரூபி - சுவிஸ்), வனிதா, அமிர்தலிங்கம் (கண்ணன்- சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சிவரூபன், அஜீவன், கனிஷ்டன், மிதுலா, அஸ்வின், யஸ்மின், சஞ்ஜா, சூரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
காளி கோயிலடி, தகவல்.
கோண்டாவில் கிழக்கு (105979) ரமேஸ்குமார் - மகன்.

### கதிரவேலு இராசையா (இராசரத்தினம்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல. 375, ஆனந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இராசையா (இராசரத்தினம்) நேற்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு -மாணிக்கம் தம்பதியரின் மகனும் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் சக்திவேல், வரதராசா, கணேசராசா, விமலராசா, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2010) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநகர் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

375, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
0770686916. (105981)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுகளின் போது உள்ளே நுழைந்து, சாட்சியம் அளித்தவர்களின் பெயர், விவரங்களைக் குறிப்பு எடுத்துக் கொண்டார் எனவும் கூறப்பட்டது.

அப்போது அங்கு பிரசன்னமாகி இருந்த பத்திரிகை ஒன்றின் செய்தியாளருடன் குறிப்பிட்ட நபர் முறுகிக் கொண்டார் எனவும் அவரை 'சைகை' மூலம் எச்சரித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

செய்தியாளர் இது குறித்து அங்கு சமுகமளித்திருந்த வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அவர்கள் ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு வந்தனர் என்றும், அதைத் தொடர்ந்து ஆணைக்குழுத் தலைவர் அங்கு கடமையில் இருந்த பொலிஸாரிடம் தெரிவிக்கவே குறித்த நபரைப் பிடித்து விசாரித்த பின்னர் விடுவித்து விட்டனர் என்றும் தெரிய வந்தது.

இதேவேளை, மேலும் இருவர் இந்த அமர்வுகளின் போது விசாரணை நடைபெற்ற மண்டபங்களுக்கு வெளியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடித் திரிந்ததையும் அங்கிருந்தவர்கள் அவதானித்துள்ளனர்.






## நாவற்குழி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமடைந்த சிங்களக் குடும்பங்கள் நாவற்குழியில் குடியேறுவதற்கு இராணுவத்தினரே உதவி வருகின்றனர் என்றும், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை இராணுவத்தினரே வழங்கி வருகின்றனர் என்றும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவலவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். நாவற்குழியில் குடியேறியவர்கள் தொடர்பான விடயங்களை அரச அதிபரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் எதற்கெடுத்தாலும் சில தரப்பினர் இராணுவத்தினரையே குற்றம் சாட்டுகின்றனர் என்றும் இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். இராணுவ ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தபோதும், நாவற்குழியில் அத்துமீறிக் குடியமர்ந்த சிங்கள மக்கள் கொட்டில்களை அமைப்பதற்கு வேண்டிய தடிகள், கம்புகள் இராணுவ ட்ரக் வண்டிகளிலேயே எடுத்து வரப்பட்டன என நேரில் கண்ட சாட்சிகள் கூறுகின்றன.

சிங்கள மக்கள் நாவற்குழியில் குடியேறுவதற்கு இரு நாள்கள் முன்னதாக இராணுவ ட்ரக் வண்டிகளில் மஞ்சள் வண்ண மரத்தடிகள் பலாலி வீதி வழியாக எடுத்துவரப்பட்டதை மக்கள் பலரும் கண்டுள்ளனர். அவ்வாறான தடிகளே நாவற்குழியில் கொட்டில்கள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டன.

இதுதொடர்பில் பலாலி இராணுவத் தலைமையத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இராணுவ முகாம்களை மாற்றும் பணிகள் இடம்பெற்று வருவதால் அந்தப் பொருள்களை எடுத்துச் செல்வதை மக்கள் கண்டிருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது. அது தவிர "சிங்கள மக்களின் மீள்குடியமர்வு விடயத்தில் எமக்கு அக்கறை இல்லை" எனவும் கூறப்பட்டது.

ஆனால் கடந்த 8ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் ஒரு ட்ராக்டர் மற்றும் 4 ட்ரக்குகளில் தடிகள் மட்டுமே ஏற்றிச் செல்லப்பட்டதை தாங்கள் கண்டனர் என பலாலி வீதியில் வதியும் மக்களில் பலர் அடித்துக் கூறினர். (உ)

## நாடாளுமன்ற... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்றும் இடம்பெற்றன.

வெள்ளத்தால் நாடாளுமன்ற தரைவிரிப்புகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அவற்றை மாற்றும் பணிகள் இன்று மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தின் ஒலி வாங்கிகளும் செயலிழந்துள்ளன. நாளை நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் ஒலி அமைப்புகள் திருத்தியமைக்கப்பட்டுவிடுமெனவும் நாடாளுமன்ற நிர்வாகப் பிரிவு தெரிவிக்கின்றது. (சி)


SPOT ADMISSIONS

Stanfords College UK

Blake Hall College UK

Stanfords College, Blake Hall College இல் இருந்து வருகை தரும் பிரதிநிதிகளால் January - February Intake இற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கான Offer வழங்கப்படும்.

- Management (Business & Financial)
- English Language
- Computing
- Travel, Tourism & Hospitality Management

நடைபெறும் தினங்கள்

16-11-2010 Stanfords College

20-11-2010 Blake Hall College


குறிப்பு: அனைவரையும் சுயவிபரக் கோவையுடன் கல்விச்சான்றிதழ்களையும் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

Eisc EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Saravana Bavan)
Tel: 011-2500207, Robin- 0777 222 422,
Selva- 0714 299 935
E-mail: eisc_2007@yahoo.com


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 * 03 * 1947 | 16 * 10 * 2010 |



### அமரர் அருமை குணரத்தினம்

அன்பிலே தெய்வமாக, அறிவிலே ஆசானாக
பண்புடனே எமை வளர்த்து பாசப்பிணைப்புடனே
பார்புகழ நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இன்பமாக வாழ்கையில் இறைவனடி சேர்ந்தாயே!
என்றும் நாம் மறவோம் -- நெஞ்சிருக்கும்வரை
உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் செய்த, அஞ்சலிகள் தெரிவித்த, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (15.11.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
அச்சுவேலி. (சி/572864) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை தங்கமுத்து

நுணாவில் சந்தியைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தங்கமுத்து நேற்றுமுன்தினம் (13.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பையா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லத்துரை, லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, இராசையா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, தங்கராசா மற்றும் பத்மாதேவி, வசந்தாதேவி (கனடா), சுசீலாதேவி (ஜேர்மனி), ரவீந்திரராசா, லீலாவதி, பாக்கியதேவி (கொழும்பு), காலஞ்சென்ற தர்மராசா மற்றும் நிர்மலாதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான மனோகரன், தனபாலசிங்கம் மற்றும் இராசநாயகம், சந்திராவதி, திருமகள்,பரமேந்திரன், ரெங்கநாதன், சுகுணா, ஜிவ்றி ஆகியோரின் மாமியும் வசந்தன் - கௌசிகா, றமணன், காலஞ்சென்ற ராதிகா, தேவகுமார் - கவிதா, ஈஸ்வரராஜா - மலர்விழி, ஜெகதீஸ்வரன் - வனஜா, பகிந்தன் - தர்சினி, சுகிர்தன், கருணேஸ்வரன், ஸ்ரெபான், திலக்ஷன், நிலக்ஷன், திவிசன், நவீனன், தனுஷன், பிரணவன், தர்சன், திலானி, சகானா, றீனா ஆகியோரின் பேர்த்தியும் மதுமிலன், மதுரங்கி, அனோஜ், கிருத்திகா, ரங்கீலன், அஸ்வின், அக்சயா, மோகன் ராஜ், கேசவன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.11.2010 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
தொ.பே : 0213007663

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (106012)

## நெஞ்சை விட்டகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

### பேரம்பலம் பிரதீபன்



அன்னை மடியில்
13 * 03 * 1981

உதிர்வு
15 * 11 * 2008

ஆருயிர் மைந்தனே! அன்பான பாவலனே!
இரண்டு ஆண்டு ஓடி மறைந்ததையா,
உன் நினைவு மறக்க முடியவில்லையடா
தீபனே!
உன் முல்லைச் சிரிப்பு,
அன்பான கதை, பாசம் மறக்க முடியுமா?
யார்தான் ஆறுதல் சொன்னாலும்
எங்கள் மனம் ஆறாது
கந்த சஷ்டி விரதம், உபவாசம் -
தோள்பட்டை உரிய தூக்கியதையும்
கந்தன் மறந்துவிட்டான்.
ஏழு வயது தொடங்கி
கடவுளுக்கு செய்த தொண்டு
ஐங்கரனும் நினைக்கவில்லை.
கலியாண மாலை கழுத்தில் போடவில்லை
படத்துக்கு மாலை போட்டுக் கதறியழுகின்றோம்.
மனக்கோட்டையும் உடைந்து
உடைமையும் சீரழிந்து
உன் இழப்பைத் தாங்க முடியுமா?
எல்லாருக்கும் சுதந்திரம், உனக்கு மட்டும் புதை குழியா?
ஆசைப்பட்ட பொருளை எல்லாம் காசு இருந்தா
கடையில் வாங்கலாம். அப்பா, அம்மாவை
வாங்க முடியுமா என்று எழுதினாய், நாங்கள்
உன்னை மறக்க முடியுமா? தவியாய்த் தவிக்கிறோம்.
வெளிநாட்டில் பெரியண்ணா உனது இழப்பை
தனியே இருந்து கண்ணீர் வடிக்கிறான்.
இங்கு வாழும் சின்னண்ணா, சின்னக்கா,
அண்ணி ரஞ்சி தவிக்கினம்.
நீ தூக்கிக் கொஞ்சிய மருமகள், மகள்மார் பூவைத்துப் பாக்கினம்.

*உன் தலைவிதி இப்படி ஆனதை நினைத்து*
*வேதனையுடன் வாழும் :-*
அப்பா, அம்மா,
நந்தன் (அமெரிக்கா),
சுதாகரன் (கச்சேரி, கிளிநொச்சி),
வளர்மதி (ஆசிரியை), யது, தனு,
தயாளன், கோமதி, திலக்சன், சியா,
கஜானன், ஜெனா, யசோன்.

(சி/572860)

*உரிமையாளர்,*
*இ.பேரம்பலம்,*
*சுமதி அரைக்கும் ஆலை,*
*புதுமுறிப்பு.*

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org